# மேல்நிலை முதலாம் ஆண்டு
# பொதுத்தமிழ்

## உரைநூல்

## 11



ஆக்கம் : திரு. ச. அருள் நேரு,
M.A., B.Ed., M.Phil.,DCH.,PGDCA.,DAVT.,
முதுகலைத் தமிழாசிரியர்.
9894760547

படி! படி! படி! படிப்பே நம் வெற்றிப்படி!

www.Padasalai.Net

# மேனிலை முதலாமாண்டு

# பொதுத் தமிழ்

## பொருளடக்கம்



| வ. எண். | இயல் | பக்க எண் |
|---|---|---|
| 1 | ஒன்று | 1 |
| 2 | இரண்டு | 12 |
| 3 | மூன்று | 25 |
| 4 | நான்கு | 44 |
| 5 | ஐந்து | 59 |
| 6 | ஆறு | 80 |
| 7 | ஏழு | 93 |
| 8 | எட்டு | 106 |
| 10 | பகுபத உறுப்பிலக்கணம்,<br>இலக்கணக் குறிப்பு,<br>புணர்ச்சி விதி | 119 |
| 12 | பொதுத்தேர்வு வினாக்கள் | 124 |



**இன்று என்னை நீ தலைகுனிந்து படித்தால்**


**நாளை நீ தலை நிமிர்ந்து வாழலாம்**

**- புத்தகம்**



www.Padasalai.Net

# இயல் 1



**செய்யுள் : யுகத்தின் பாடல் - சு. வில்வரத்தினம்**
**நன்னூல் பாயிரம் - பவணந்தி முனிவர்**
**உரைநடை : பேச்சுமொழியும் கவிதை மொழியும் - இந்திரன்**
**துணைப்பாடம் : ஆறாம் திணை - அ. முத்துலிங்கம்**
**இலக்கணம் : மொழி முதல், இறுதி எழுத்துகள்**

**I. பலவுள் தெரிக :**

1. பொருத்தமானவற்றைத் தேர்வு செய்க :- விடை : **iii) ஆ, ஈ**

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்.

i) அ, ஆ ii) அ, ஈ **iii) ஆ, ஈ** iv) அ, இ

2. ”கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்” - அடிமோனையைத் தெரிவு செய்க.

**விடை: இ) கபாடபுரங்களை - காலத்தால்**

அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

3. பாயிரம் இல்லது ”” இன்றே. விடை: **ஆ) பனுவல்**

அ) காவியம் **ஆ) பனுவல்** இ) பாடல் ஈ) கவிதை

4. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகின்றபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது, இவ்வரிகள் உணர்த்தும் கருத்து. விடை : **இ) எழுத்து மொழியை விட பேச்சுமொழி எளிமையானது.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

**இ) எழுத்து மொழியை விட பேச்சுமொழி எளிமையானது.**
ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்து மொழி எளிமையானது.

5. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
விடை : **அ) அன்னம், கிண்ணம்**
**அ) அன்னம், கிண்ணம்** ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி
ஈ) றெக்கை, அங்ஙனம்.

**குறுவினாக்கள் :**

**1. பேச்சு மொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. எனவே, பேச்சு மொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுத் தன்மை மிக்கதாக உள்ளது.

**2. என் அம்மை, ஒற்றியெடுத்த**
**நெற்றிமண் அழகே**
**வழிவழி நினதடி தொழுதவர்,**
**உழுதவர், விதைத்தவர்,**
**வியர்த்தவர்க்கெல்லாம்.**
**நிறைமணி தந்தவளே - இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

பாடலில் வரும் வினையாலணையும் பெயர்கள் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்.

**3. பாயிரம் பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?**

ஒரு நூலைப் புரிந்துகொள்ளவும், அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது.

**4. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துக்கள் அமைந்துள்ளன?**

- உயிரெழுத்து = உயிர் + எழுத்து - மெய்யீறு.
- பன்னிரண்டு = பத்து + இரண்டு - உயிரீறு.
- திருக்குறள் = திரு + குறள் - உயிரீறு
- நாலடியார் = நான்கு + அடியார் - உயிரீறு

**5. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**

தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம், கூடில்லாத பறவை - இரசூல் கம்சதோவ்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

***சிறுவினா :***

***1. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?***



- ✓ என் தமிழ் அன்னையை தொழுதவர், உழுதவர், விதைத்தவர், உழைத்தவருக்கு எல்லாம் நிறைவான செல்வம் தந்து மகிழ்ந்தவள்.
- ✓ தமிழன்னை வாழ்க பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என பாட வேண்டும் என்கிறார் சு. வில்வரத்தினம்.

***2. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறார்?***

- பாயிரத்தை முகவுரை, பதிகம், அணிந்துரை, புனைந்துரை, நூல்முகம், புறத்துரை, தந்துரை என்றும் அழைப்பர்.
- ***முகவுரை*** - நூலுக்கு முதன்மையாக வைத்து சொல்லப்படுவது.
- ***பதிகம்*** - ஐந்து பொதுப்பொருள்களும், பல சிறப்புப் பொருள்களையும் தொகுத்துக் கூறுவது.
- ***அணிந்துரை, புனைந்துரை*** - நூலின் பெருமை, அழகு பற்றிக் கூறுவது.
- ***நூன்முகம்*** - நூலுக்கு முகம்போல இருப்பது.
- ***புறவுரை*** - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்தில் சொல்வது.
- ***தந்துரை*** - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.

***3. "என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.***

- தமிழ்மொழி என் உயிர் போன்ற மொழியாகும்.
- நான் தமிழ்வழிக் கல்வியிலேயே பயில்கிறேன்.
- தமிழ்ப்பற்றாளர்களின் வாழ்க்கை வரலாறு, தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் ஆகியவற்றைப் படித்து அவர்கள் காட்டிய வழியில் நடப்பேன்.
- தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்று மொழிப்புலமை பெறுவேன்.
- தனித்தமிழ்ச் சொற்களையே பேசுவேன்.
- பிறமொழிச் சொற்களைத் தவிர்ப்பேன்.
- என் நண்பர் மற்றும் மற்றவரிடத்தும் தமிழ்ப்பற்றை ஏற்படுத்துவேன்.
- தமிழ் மொழி வளர்ச்சிக்கு என்னாலான பணிகளைச் செய்வேன்.

***4. கூற்று - குறியீட்டுக்கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று: நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.***

***கவிதை - கூண்டு திறந்தது***
***சிறகடிக்கவா?***
***இல்லை சீட்டெடுக்க.***

***கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?***

- ஒன்றை, மற்றொன்றால் உணர்த்துவது குறியீடு.



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- கூண்டில் உள்ள கிளி பறப்பதற்காக அதன் கதவு திறக்கவில்லை: சீட்டெடுப்பதற்கு. இது அடிமை வாழ்க்கையைக் குறியீடாகக் காட்டுகிறது.

**5. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

**மொழி முதல் எழுத்துக்கள் - 22**

- உயிரெழுத்து பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.
- மெய்யெழுத்துக்கள், உயிரோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே வரும்.
- க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ ஆகியன மொழிக்கு முதலில் வரும்.
- சான்று : அ - **அ**ம்மா, ஆ - **ஆ**டு, இ - **இ**லை
  க - **க**டல், ச - **ச**ங்கு, த - **த**ந்தம்

**மொழி இறுதி எழுத்துக்கள் - 24**

❖ உயிரெழுத்து பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும்.
சான்று : ம**லை** + அருவி = மலையருவி

❖ மெய்யெழுத்துக்கள், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகியன மொழிக்கு இறுதியில் வரும். சான்று : க**ண்** + அன் = கண்ணன்
சான்று : நட**ந்து** + செல் = நடந்துசெல்

**நெடுவினா :**

**1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

- ➢ பேச்சுமொழி திரவநிலையில் நம்மிடம் கீழ்ப்படிந்து இயங்குகிறது.
- ➢ எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படும்போது, உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகளால் உணர்த்தும் கருத்து - எழுத்துமொழியை விட பேச்சு மொழி எளிமையானது.
- ➢ எழுதுவதை மட்டும்தான் கை செய்கிறது.
- ➢ முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. எனவே, பேச்சு மொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுத் தன்மை மிக்கதாக உள்ளது.
- ➢ எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது.
- ➢ எழுத்து என்பது தனக்குத்தானே பேசிக்கொள்கிற வகையைச் சேர்ந்தது.
- ➢ பேச்சு என்பது தன்னைத் தானே திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படும்போது, அது உடலின் மேல்தோல் போல இயங்குகிறது.
- எழுத்துமொழியில் அதே கவிதை, அதன் உணர்வை உணர்ச்சியற்ற ஆடை போல மூடிவிடுகிறது.
- பேச்சு மொழிக்கு நேரடி மொழி என்ற வேறு பெயரும் உண்டு.
- பேச்சுமொழி எப்போதும் உயிர்ப்புடன் மாறிக்கொண்டே இருக்கிறது.
- பேச்சுமொழியில் குரல் ஏற்ற இறக்கம், உச்சரிப்பு, வேகம், மௌனம் ஆகியவற்றைக் கொண்டு பொருள் வேறுபாட்டை உணர்த்த இயலும்.

**2. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.**



- ஒரு நூலைப் புரிந்துகொள்ளவும், அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது.
- பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என்று பாயிரம் இருவகைப்படும்.
- நூலின் இயல்பு, ஆசிரியரின் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை ஆகியனவற்றை பொதுப்பாயிரம் மூலம் அறியலாம்.
- நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய முறை, நூலின் பெயர், நூலைக் கேட்போர், நூலைக் கற்பதால் உண்டாகும் பயன்கள் போன்றவற்றை சிறப்புப் பாயிரத்தின் மூலம் அறியலாம்.
- பாயிரத்தை முகவுரை, பதிகம், அணிந்துரை, புனைந்துரை, நூல்முகம், புறத்துரை, தந்துரை என்றும் அழைப்பர்.
- முகவுரை - நூலுக்கு முதன்மையாக வைத்து சொல்லப்படுவது.
- பதிகம் - ஐந்து பொதுப்பொருள்களும், பல சிறப்புப் பொருள்களையும் தொகுத்துக் கூறுவது.
- அணிந்துரை, புனைந்துரை - நூலின் பெருமை, அழகு பற்றிக் கூறுவது.
- நூன்முகம் - நூலுக்கு முகம்போல இருப்பது.
- புறவுரை - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்தில் சொல்வது.
- தந்துரை - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.

***3. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?***

- *தமிழர் வேலைவாய்ப்பு, வறுமை போன்ற காரணங்களுக்காக புலம் பெயர்கின்றனர்.*
- *ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் புலம் பெயர்ந்துகொண்டு இருக்கிறான்.*
- *சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவியை பொருள் ஈட்டுவதற்காகப் பிரிவதை பொருள்வயின் பிரிவு என்று கூறப்படுகிறது.*
- *நற்றிணை 153 ஆம் பாடல், மன்னனின் கொடுங்கோல் ஆட்சிக்குப் பயந்து மனிதர்கள் வேறு இடம் சென்றார்கள் என்று குறிப்பிடுகிறது.*
- *1983 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் கனடாவிற்குக் குடிபெயர்ந்தனர்.*
- *நியூசிலாந்து முதல் அலாஸ்கா வரை பத்து லட்சம் புலம்பெயர்ந்த தமிழர்களும், கனடாவில் மூன்று லட்சம் தமிழர்களும் வாழ்கின்றனர்.*
- *கனடாவில் ஒரு தெருவிற்கு வன்னிவீதி என்று பெயர்.*
- *ஆறாம் திணை - பனியும் பனி சார்ந்த இடமும்*
- *புலம்பெயர்ந்த பத்து லட்சம் தமிழர்கள் பனிப்பிரதேசங்களுக்கு சென்றடைந்தனர்.*
- *தினமும் காலை ஆறு மணிக்கு குருவி வரும். ஆறுமணிக்குருவி பறப்பதற்கு எல்லையே இல்லை.*
- *இமயமலைக்குப் பறந்துபோய் மீண்டும் திரும்பும்.*
- *ஆறுமணிக்குருவியைப் போல ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களுக்கு எல்லையே இல்லை.*
- *அவர்கள் உலகம் பனியும் பனிசார்ந்த இடமும். அதுவே ஆறாம் திணை.*



***மனப்பாடப் பாடல்கள்***

***யுகத்தின் பாடல்***

*ஏடு தொடக்கி வைத்து என்னம்மை*
*மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த*
*விரல்முனையைத் தீயிலே தோய்த்து*
*திசைகளின் சுவரெல்லாம்*
*எழுதத்தான் வேண்டும்*
*எழுகின்ற யுகத்தினோர் பாடலை*
*- சு. வில்வரத்தினம்*





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***நன்னூல் - பாயிரம்***

*"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை*
*நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே*
*கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்*
*வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே"*

*" காலம் களனே காரணம் என்றுஇம்*
*மூவகை ஏற்றி மொழிநரும் உளரே"*
*- பவணந்தி முனிவர்*

**இலக்கணம்:**

1. தவறான இணையைத் தேர்வு செய்க:-

அ)மொழி +ஆளுமை - உயிர் + உயிர்

இ)கடல் +அலை - உயிர் + மெய்

ஆ)தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

ஈ) மண் + வளம் - மெய் + மெய்

**விடை : இ)கடல் + அலை - உயிர் + மெய்**

*2. அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் **அண்ணா.***

*ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் **கலியாணசுந்தரனார்.***

*இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் **பாரதிதாசன்.***

*ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் **ஜீவா***

***3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.***

***அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.***

*அதிகாலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.*

***ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்தப் பலன் வராமப் போவாது.***

*முயற்சி செய்தால் அதற்கேற்றப் பலன் வராமல் போகாது,*

***இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.***

*காலத்திற்கேற்றவாறு புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.*

***ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.***

*ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.*

***உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.***

*தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள், தாமதமாகச் சென்றால் பதற்றமாகிவிடும்.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***4. வினாக்கள்:***

***அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?***

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் **- 22**

உயிரெழுத்து பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ ஆகியன மொழிக்கு முதலில் வரும்.

***ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.***

❖ உயிரெழுத்து பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும்.

சான்று : ம**லை** + அருவி = மலையருவி

❖ மெய்யெழுத்துக்கள், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகியன மொழிக்கு இறுதியில் வரும். சான்று : க**ண்** + அன் = கண்ணன்

❖ குற்றியலுகரம் மொழிக்கு இறுதியில் வரும்.

சான்று : நடந்**து** + செல் = நடந்துசெல்

***இ) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.***

உயிரீறு - நிலைமொழி ஈற்றெழுத்து உயிர்மெய்யாக இருப்பின் உயிரீறு எனப்படும்.

சான்று : மொ**ழி** +ஆளுமை - உயிரீறு.

மெய்யீறு - நிலைமொழி ஈற்றெழுத்து மெய்யெழுத்தாக இருப்பின் மெய்யீறு எனப்படும்.

சான்று : தமி**ழ்** + உணர்வு - மெய்யீறு.

***ஈ) உயிர்முதல், மெய்முதல் - எடுத்துக்காட்டுடன் விளக்குக.***

வருமொழி முதலில் உயிரெழுத்து வருமாயின் உயிர்முதல் எனப்படும்.

சான்று : மொழி +**ஆ**ளுமை - உயிர்முதல்.

வருமொழி முதலில் உயிர்மெய்யெழுத்து வருமாயின் மெய்முதல் எனப்படும்.

சான்று : மண் + **வ**ளம் - மெய்முதல்.

***உ) குரங்காட்டி - புணர்ச்சியை விளக்குக.***

குரங்காட்டி = குரங்கு + ஆட்டி

குரங்க் + ஆட்டி ( உயிர் வரின் உக்குரல் மெய்விட்டோடும் விதிப்படி உகரம் கெட்டது)

குரங்காட்டி (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி க் +ஆ=கா என ஆயிற்று)

**மொழிபெயர்ப்பு :**

1. The Pen is mightier than Sword.

*வாளின் முனையை விட எழுதுகோல் முனை வலிமையானது.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. Winners don't do different things, they do things differently.
வெற்றியாளர்கள் வித்தியாசமாக எதையும் செய்வதில்லை, அவர்கள் செய்வதே வித்தியாசமானதுதான்.

3. A Picture is worth a thousand words.
ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

4. Work while you work and play while you play.
வேலை செய்யும் போது வேலை செய், விளையாடும்போது விளையாடு.

5. Knowledge rules the world
அறிவே உலகை ஆளும்.

**கலைச் சொல் அறிவோம் :**

1. Aesthetics - அழகியல்.
2. Journalist - இதழாளர்.
3. Art Critic - கலை விமர்சகர்.
4. Book Review - புத்தக மதிப்புரை.
5. migration - புலம்பெயர்தல்
6. Philosopher - மெய்யியலாளர்.

**பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள்**

1. வாடகை - குடிக்கூலி
2. சம்பளம் - ஊதியம்
3. விசா - நுழைவு இசைவு
4. ராச்சியம் - அரசு
5. மாதம் - திங்கள்
6. ஞாபகம் - நினைவு
7. பாஸ்போர்ட் - கடவுச்சீட்டு
8. சரித்திரம் - வரலாறு
9. போலீஸ் - காவல்துறை
10. வருடம் - ஆண்டு
11. கம்பெனி - நிறுவனம்
12 .முக்கியத்துவம் - இன்றியமையாமை
13. நிச்சயம் - உறுதி
14. தேசம் - நாடு
15. பத்திரிக்கை - இதழ்
16. சொந்தம் - உறவு
17. உத்திரவாதம் - பொறுப்பு, பிணை
18. வித்தியாசம் - வேறுபாடு
19. கோரிக்கை - வேண்டுகோள்
20. சமீபம் - அண்மை
21. சந்தோஷம் - மகிழ்ச்சி
22. உற்சாகம் - ஊக்கம்
23. யுகம் - நூற்றாண்டு
24. தருணம் - நேரம்

**மொழியோடு விளையாடு**

**தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு தொடர்களாக்குக.**

**ஓர் பயிர் வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்.**

(i) மயில் ஓர் அழகான பறவை.

(ii) பயிர் வளர தண்ணீர் வேண்டும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***1. பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.***

(i) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

(ii) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

***2. நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.***

(i) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.

(ii) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

***3. பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமையை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.***

(i) பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.

(ii) நன்மை செய்யாவிட்டாலும், தீமையை செய்யக்கூடாது.

***4. நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?***

(i) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?


(ii) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை தெரியுமா?

***5. கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்.***

(i) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

(ii) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

***எண்ணங்களை எழுத்தாக்குக :-***



எங்களுக்கும் உயிர் வாழ
இவ்வுலகில் உரிமையுண்டு.
நீரும் நிலமும் எங்களுக்கும் சொந்தம்.
மனிதா நீங்கள் மட்டும் வாழ
எங்களை அழித்தீரே நியாயமா?
தாகம் தணிக்க இறைவனின்
கொடை ஆறு, குளம், குட்டை
அவற்றை ஆக்கினீரே கட்டிடங்களாக.
குளத்தில் நீர் அருந்திய எங்களை
குழாயில் ஒழுகும் நீரைப்
பருக வைத்தீரே
இது நியாயமா?
இறைவா இனியொரு பிறவி
வேண்டும். மனிதன் இல்லா உலகில்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கூடுதல் வினாக்கள் :**

1. கவிஞர் சு.வில்வரத்தினம், யாழ்ப்பாணத்திலுள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர்.
2. பேச்சு மொழி நேரடி மொழி என்று அழைக்கப்படுகிறது.
3. பேச்சுமொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்று கூறியவர் ஆற்றூர் ரவிவர்மா.
4. புல்லின் இதழ்கள் நூலின் ஆசிரியர் வால்ட் விட்மன்.
5. 1971ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் பாப்லோ நெரூடா.
6. இந்திரனின் இயற்பெயர் என்ன? இராசேந்திரன்.
7. 2011 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் இந்திரன். (பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம் என்ற மொழிபெயர்ப்பு நூலிற்காக).
8. தொல்காப்பியத்தைத் தழுவி இயற்றப்பட்ட நூல் நன்னூல்.
9. சீயகங்கன் என்ற சிற்றரசன் கேட்டுக் கொண்டதற்கிணங்க பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார்.
10. முத்துலிங்கம் எடுத்துச் சென்ற நூல் டேனியல் டிபோ எழுதிய ராபின்சன் குரூசோ.
11. 2012 ஆம் ஆண்டு முதல், ஜனவரி 14 ஆம் நாள், தமிழர் பாரம்பரிய நாளாகக் கொண்டாடப்படுகிறது.
12. ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூலை எரித்துவிட்டால் போதும் என்று கூறிய நூல் ஃபாரன்ஹீட் 451.
13. சாண்டில்யன் இயற்றிய நூல் கடல்புறா.
14. 31.05.1981 ஆம் ஆண்டு இலங்கை யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது.
15. திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி. யு. போப்.
16. கனடாவில் முதன்முறையாக ஒரு புதிய சாலைக்கு வன்னிவீதி என்று பெயரிட்டனர்.

***



திரு.ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் - 2

**உரைநடை : இயற்கை வேளாண்மை**
**செய்யுள் : ஏதிலிக் குருவிகள் - அழகிய பெரியவன்**
**திருமலை முருகன் பள்ளு - பெரியவன் கவிராயர்**
**ஐங்குறுநூறு - பேயனார்**
**துணைப்பாடம் : யானை டாக்டர் - ஜெயமோகன்**
**இலக்கணம் - மெய்ம்மயக்கம்**



**I. பலவுள் தெரிக:-**

1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
**விடை : இ) யானை டாக்டர் - குறும் புதினம்.**

அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக் கவிதை
ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
**இ) யானை டாக்டர் - குறும் புதினம்.**
ஈ) ஐங்குநூறு - புதுக்கவிதை

2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன **விடை ஈ) இவை மூன்றும்.**
அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள்
**ஈ) இவை மூன்றும்.**

3. வான் பொய்த்தது என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்..
**விடை : ஆ) மழை பெய்யவில்லை**
அ) வான் இடிந்தது **ஆ) மழை பெய்யவில்லை**
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது.

4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை'.. **விடை : iii) இரண்டும் சரி**
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
i) அ மட்டும் சரி ii) ஆ மட்டும் சரி **iii) இரண்டும் சரி**
iv) அ தவறு, ஆ சரி

5. பிழையான தொடரைக் கண்டறிக.
**விடை : இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் ஒன்று.**
அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
ஆ) ஏதிலிக் குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
**இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் ஒன்று.**
ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரின் வாசனை மூலம் அறிய முடியும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**குறுவினாக்கள்:**

***1. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின —— தொடரின் பொருள் என்ன?***



- காடுகளும் மரங்களும் அழிந்ததால் நாட்டில் மழைவளம் இல்லை.
- வானும் மண்ணும் வளமிழந்தன. பூமி வறண்டது.
- வாழ்வதற்கு உணவும், மரங்களும் இன்மையால் வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லாததால் குருவிகள் எங்கோ போய்விட்டன.

***2. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.***




- பனைமரம் ஏழைகளின் கற்பக விருட்சம். சிறந்த காற்றுத் தடுப்பான்.
- நிலத்தடிநீரைச் சேமிக்கும் தன்மையுடையது.
- பனை மரத்திலிருந்து நுங்கு, பதநீர், மற்றும் மதிப்புக்கூட்டுப் பொருட்களான கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியன உருவாக்கலாம்.

***3. வளருங் <u>காவில் முகில்தொகை ஏறும்</u> - பொன் மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?***

- வளரும் காவில் முகில்தொகை ஏறும் (கா - சோலை, முகில் - மேகம்)
- தென்கரை நாட்டில் செழிப்பான சோலையில் மேகக்கூட்டம் தங்கிச் செல்லும். நிலவளமும் நீர்வளமும் உடையது தென்கரை நாடு.

***4. அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

அலர்ந்து - அலர்+த்(ந்) +த் +உ

அலர் - பகுதி
த் - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

***5. ய், வ், ஞ், ட், ற், ந் - மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.***

| எழுத்து | உடனிலை | வேற்றுநிலை |
|---|---|---|
| ய் | செய்யலாம் | வாய்மை |
| வ் | இவ்விதம் | தெவ்யாது |
| ஞ் | விஞ்ஞானம் | மஞ்சள் |
| ட் | பட்டம் | காட்சி |
| ற் | வெற்றி | பயிற்சி |
| ந் | செந்நெறி | தந்தம் |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***6. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?***

- சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது.

**சிறுவினா:**

***1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? — நும் கருத்தை எழுதுக.***

- நம் முன்னோர் வேதிக்கலப்பற்ற பூச்சிக்கொல்லி மருந்தை மட்டுமே பயன்படுத்தினர்.
- வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகியவற்றை இடித்து, கோமியத்தில் ஊறவைத்துத் தெளித்தால் பூச்சிகள் போய்விடும்.
- எனவே, வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமே.

***2. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?***



- காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு, தூக்கணாங்குருவியின் கூடு ஒப்பீடாகக் காட்டப்பட்டுள்ளது.
- தூக்கணாங்குருவிக்கூடு புல்லால் ஆனது. புல்வீடுகள் காற்றில் அசையும்போது, அது பார்ப்பதற்கு தூக்கணாங்குருவிக்கூடு காற்றில் ஆடுவது போல உள்ளது. எனவேதான் புல்வீடுகளை தூக்கணாங்குருவியின் கூட்டோடு ஒப்பிட்டுள்ளார்.

***3. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.***

*சலச வாவியில் செங்கயல் பாயும்*

**இடம்** : பாடலடிகள் இடம்பெற்ற நூல் **திருமலை முருகன் பள்ளு.**

**பொருள்** : வடகரை நாட்டில் வண்டுகள் இந்தளம் எனும் பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்.

- வண்டின் இசை கேட்டு உள்ளான் பறவை, மீனைப் பிடிப்பதற்காக வாய்க்காலின் மதகுகளுக்கிடையே சங்கிலியின் மீது அமர்ந்து வாலை ஆட்டிக் கொண்டிருக்கும்.
- தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாயும்.
- முத்துக்களை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் கிடக்கும்.
- மின்னலைப் போன்ற பெண்கள் பெய் என்றால் மழை பெய்யும்.
- இத்தகு திருமலையில் திருமால் வீற்றிருக்கிறார்.

***4. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.***

ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை முல்லைத் திணை ஆகும்.

**முதற்பொருள்** : முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும்.

முல்லைத்திணையின் நிலம் காடும் காடு சார்ந்த பகுதியும்.

**பொழுது** சிறுபொழுது, பெரும்பொழுது என இருவகைப்படும்.
முல்லைத்திணையின் சிறுபொழுது மாலை. பெரும்பொழுது கார்காலம்.

**கருப்பொருள்கள்**

தெய்வம் : மாயோன்
மக்கள் : இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்
புள் (பறவை) : காட்டுக்கோழி
விலங்கு : மான், முயல்
ஊர் : பாடி
யாழ் : முல்லையாழ்

**5. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.**

- மெல்லின எழுத்திற்குப் பின், அதற்கு இனமான வல்லினம் எழுத்து வருவதை இனவெழுத்து என்பர்.
- ங் இனவெழுத்து - க் (அங்கம்), ஞ் இனவெழுத்து - ச் (பஞ்சம்)
- ண் இனவெழுத்து - ட் (பண்டம்), ந் இனவெழுத்து - த் (சந்தம்)
- ம் இனவெழுத்து - ப் (கம்பம்), ன் இனவெழுத்து - ற் (தென்றல்)
- பிழையின்றிப் பேசவும், எழுதவும் இனவெழுத்துகள் துணைபுரிகின்றன.
- மயங்கொலிப் பிழைகள் ஏற்படுவதைத் தவிர்க்க இனவெழுத்துகள் பெருந்துணைபுரிகின்றன.

**நெடுவினா :**

**1. "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" எனும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

- இயற்கையாலேயே இவ்வுலகம் இயங்குகிறது.
- இயற்கையைப் பாதுகாக்க இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும்.
- அதிக விளைச்சலுக்கு ஆசைப்பட்டு, செயற்கை உரங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தினோம்.
- அதன் விளைவாக மண்ணையே நஞ்சாக்கியது. மேலும் நீரும், நிலமும், காற்றும் மாசடைந்தது.
- செயற்கை உரங்களால் புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத்தன்மை இன்னும் பல நோய்கள் வருகின்றன.
- செயற்கை பூச்சிக்கொல்லி பயிரில் உள்ள பூச்சியை மட்டும் கொல்வதில்லை. அதனை உண்ணும் உயிர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
- புங்கன், பிரண்டை, கற்றாழை, வேப்பங்கொட்டை, நொச்சி இலை ஆகியவற்றை கோமியத்தில் ஊறவைத்துத் தெளித்தால் பயிரில் பூச்சி வராது.
- மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றை வைக்கோலில் மக்கச் செய்து தொழுஉரமாகப் பயன்படுத்தினால், மண்ணில் நுண்ணுயிர்கள் பெருகும். மண் வளம் பெருகும்.
- இயற்கை உரங்களைப் பயன்படுத்தினால் நம் உடலுக்கு நன்மைகள் வந்து சேரும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.**

**வடகரை நாட்டின் வளம் :**

- வண்டுகள் இந்தளம் எனும் பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்.
- வண்டின் இசை கேட்டு உள்ளான் பறவை, மீனைப் பிடிப்பதற்காக வாய்க்காலின் மதகுகளுக்கிடையே கட்டப்பட்ட சங்கிலியின் மீது அமர்ந்து வாலை ஆட்டிக் கொண்டிருக்கும்.
- தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாயும்.
- முத்துக்களை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் கிடக்கும்.
- மின்னலைப் போன்ற பெண்கள் பெய் என்றால் மழை பெய்யும்.
- இத்தகு திருமலையில் திருமால் வீற்றிருக்கிறார்.

**தென்கரை நாட்டின் வளம்:**

- மாட மாளிகையில் அகில்புகையின் நறுமணம் பரவிக் கொண்டிருக்கும்.
- மாளிகைகளை மயில்களும், கார்மேகங்களும் சூழ்ந்து இருக்கும்.
- பெண்கள் பொன்னாலான அரங்கிலும் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்,
- அலைகள் கரைகளில் மோதும்போது முத்துக்கள் வெடிக்கும்.
- குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய சிவபெருமான் குற்றாலநாதராக வீற்றிருக்கிறார்.

**3. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவற்றை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**



**யானை டாக்டர் - ஜெயமோகன்**

- மனிதனின் கீழ்மையான செயல்களால் நாள்தோறும் வன உயிரிகள் அழிந்து வருகின்றன.
- காடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சிலர், மது அருந்திவிட்டு அதன் குப்பிகளை உடைத்து போட்டுவிடுகின்றனர்.
- யானையின் பாதம் பஞ்சுமூட்டை போன்றது. அதன் எடை காரணமாக மதுக்குப்பியின் பாகங்கள், அதன் காலுக்குள் முழுமையாகப் புகுந்து அதன் உயிரைக்கூட மாய்த்துவிடும்.
- அவ்வகையில் யானையின் பாதத்தில் புகுந்த மதுக்குப்பி காரணமாக சீழ் பிடித்து, யானை நடக்க முடியாமல் சிரமப்படும்.
- யானைகளுக்கு இவ்வாறு நிகழும்போது குறும்பர்கள் டாக்டர். கே விற்கு தகவல் தெரிவிப்பர்.
- யானைக்கு மயக்க மருந்து செலுத்தி, மதுக்குப்பியின் பாகத்தை முழுமையாக வெளியே எடுப்பார். பின்பு பஞ்சில் மருந்தைத் தோய்த்து கட்டு கட்டுவார். கட்டின் மீது சேற்றைப் பூசினார்.
- இறைவன் எல்லா உயிர்களும் வாழவே உலகைப் படைத்தான்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஆனால் மனிதனோ, தான் மட்டுமே வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தில் காடுகளை அழித்து, விலங்குகளை வேட்டையாடி, மற்ற உயிரினங்களின் வாழ்வாதாரத்தை அழித்து வருகிறான்.
- பறவைகள் பருக தண்ணீரும் இரையையும் மாடியில் வைப்போம்.
- மரங்கள் நட்டு, பாதுகாப்போம்.
- காட்டிலுள்ள உயிரினங்களுக்கு இடையூறு தராமல் பாதுகாக்க வேண்டும்.
- வன உயிரினங்கள் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.
- மிருக மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி போன்றே வன உயிரிகளைத் தம் உயிர் போல் எண்ணுவோம்.

## இலக்கணம்

**1. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

நிலைமொழி ஈற்றெழுத்து குற்றியலுகரமாக இருந்து (கு, சு, டு, து, பு, று), வருமொழியில் உயிரெழுத்துடன் புணரும்போது, மெய்யை விட்டுவிட்டு உகரம் மறையும். இதுவே குற்றியலுகரப் புணர்ச்சியாகும்.

சான்று : மாசற்றார் = மாசு + அற்றார்.

மாச் + அற்றார் (உயிர்வரின் உக்குரல் மெய்விட்டு ஓடும் என்ற விதிப்படி உகரம் கெட்டது ~~சு~~ - ச் + உ)

மாசற்றார் (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி ச் + அ -ச என ஆயிற்று)

**2. கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கடல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

1. கருவிழி - கரு~~மை~~ + விழி (ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது)

2. பாசிலை - பசு~~மை~~ + இலை (ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது)

பாசு + இலை (ஆதி நீடல் விதிப்படி ப நீண்டு பா ஆனது)

பாச் + இலை (உயிர்வரின் உக்குரல் மெய்விட்டு ஓடும் என்ற விதிப்படி உகரம் கெட்டது சு - ச் ~~+~~ உ)

பாசிலை ( உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே)

3. சிறியன் - சிறு~~மை~~ + அன்

சிறு + அன் (ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது)

சிறி + அன் (இடை உகரம் இ ஆதல்)

சிறி + ய் + அன் (ய் உடம்படு மெய் பெற்றது)

சிறியன் ( உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே)

4. பெருங்கடல் - பெரு~~மை~~ + கடல்

பெரு + கடல் (ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது)

பெருங்கடல் (இனமிகல் விதிப்படி ங் மிகுந்தது)



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3. புணர்ச்சி விதி தந்து விளக்குக.**

அ) புலனறிவு - புலன் +அறிவு (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே)

ஆ) வில்லொடிந்தது - வில்+ஒடிந்தது (தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே).

இ) வழியில்லை - வழி+இல்லை (ய் உடம்படுமெய் பெற்றது)

ஈ) திரைப்படம் - திரை+படம் (இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்)

உ) ஞாயிற்றுச்செலவு - ஞாயிறு+செலவு(இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்)

**4. விதி வேறுபாடறிந்து விளக்குக.**

**தன்னொற்றிரட்டல் - தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.**

- தன்னொற்றிரட்டல் விதி - பண்புத்தொகைப் புணர்ச்சியில் இடம்பெறும்.
- தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் விதி புணர்ச்சியில் பொதுவாக இடம்பெறும்.

**இனமிகல் - வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.**

- இனமிகல் - பண்புத்தொகைப் புணர்ச்சியில் இடம்பெறும்.
- வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் எனும் விதி பொதுவாகப் புணர்ச்சியில் இடம்பெறும்.

**5. பொருத்துக**

அ) அடி அகரம் ஐ ஆதல் - பைங்கூழ்

ஆ) முன் நின்ற மெய் திரிதல் - செங்கதிர்

இ) ஆதிநீடல் - காரிருள்

ஈ) இனமிகல் - பெருங்கொடை

**6. கூற்றுகளைப் படித்து கீழ்க்காண்பவற்றுள் சரியானதைத் தேர்க.**

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும்போது "உயிர்வரின் உக்குரல் மெய்விட்டு ஓடும்" எனும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இஈஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் "ஈறுபோதல்" என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்

**.விடை : அ, இ, ஈ சரி, ஆ தவறு**

**தமிழாக்கம் தருக:**

1. Just living is not enough. One must have sunshine, freedom and a little flower - Hans Anderson.

வெறும் வாழ்க்கை மட்டுமே போதாது. சூரியஒளி, சுதந்திரம் மற்றும் ஒரு சிறுமலர் ஆகியன ஒருவருக்கு வேண்டும் - ஹேன்ஸ் ஆன்டர்சன்.


www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

2. In nature, light creates the colour. In the picture, colour creates the light - Hans Hofmann.

இயற்கையில் ஒளி வண்ணங்களை உண்டாக்கும். ஓவியத்திலோ, வண்ணமே ஒளியை உண்டாக்கும். - ஹான்ஸ் ஹோஃப்மான்.

3. Look deep into nature and then you will understand everything better - Albert Einstein.

இயற்கையை உற்றுநோக்குங்கள், பிறகு நீங்கள் எல்லாவற்றையும் சிறப்பாகப் புரிந்துகொள்வீர்கள். - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

4. Simplicity is nature's first step, and the last of art - Philip James Bailey.

எளிமையே இயற்கையின் முதல்படி, கலையே இறுதியாகும் - பிலிப் ஜேம்ஸ் பெய்லி.


5. Roads were made for journeys not destinations - Confucius.

சாலைகள் பயணங்களுக்காக உருவாக்கப்பட்டவை, இலக்குகளுக்கானவை அல்ல - கன்பூசியஸ்.

**மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. உலை, உளை, உழை - மன**உளை**ச்சல் தீரவும், வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழை**க்க வேண்டும்.
2. வலி, வளி, வழி - **வலி**மையான **வளி** வீசியதால் மரங்கள் முறிந்து **வழி**கள் அடைபட்டன. (வலி-வலிமை, வளி-காற்று, வழி-செல்லும் பாதை)
3. கலை, களை, கழை - **கழை**யில் தோன்றிய **களை**களை நீக்குவதே ஒரு **கலை**யாகும்.
   (கலை-அழகு, களை-பயிரிலுள்ள களை, கழை-கரும்பு)
4. கனை, கணை - குதிரை **கனை**க்கும் திசைநோக்கி வேடன் **கணை** தொடுத்தான். (கனை-கனைத்தல், கணை-அம்பு).
5. குரை, குறை - நாய் **குரை**த்தால், திருட்டு **குறை**ந்தது. (குரை-குரைத்தல், குறை-குறைதல்)
6. பொரி, பொறி - **பொரி**யை **பொறி**க்கும் மணம் வீசியது. (பொரி-உணவுப் பொருள், பொறி-பொறித்தல்)

**நயம் பாராட்டல்**



மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே பகல்
கூட்டினில் உறங்குவாயோ வெண்ணிலாவே
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே
- கவிமணி



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***திரண்ட கருத்து: (பாடலின் முழுப் பொருளையும் தருவது)***

விண்மீன்கள் சூழ்ந்தது, வெள்ளியோடம் போல வருவது, வளர்ந்து வருவது வெண்ணிலவு. ஆனால் தேய்ந்து போவது ஏன்? இரவில் ஆந்தைபோல வருகிறாய், பகலில் உறங்குவாயோ? பகலில் வந்தால் பந்தாக எண்ணி விளையாடுவோம் என பயந்து வரவில்லையோ வெண்ணிலவே.

விண்மீன்கள் சூழ இரவில் வரும், வளர்ந்தும் தேய்ந்தும் வரும் வெண்ணிலவு, பந்துபோன்றது.

**எதுகை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
பாடலில் இடம்பெறும் எதுகைச் சொற்கள்

வெ**ள்**ளி - வ**ள**ர்ந்து

**மோனை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.
பாடலில் இடம்பெறும் மோனைச் சொற்கள்.

**வெ**ள்ளி - **வ**ளர்ந்து - **வா**டி

**கூ**ட்டினில் - **கூ**கை

**பா**ரில் - **ப**ந்தடிப்போம்

**இயைபு :**

அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.
பாடலில் வெண்ணிலவே என்ற சொல் இயைபாகப் பலமுறை வந்துள்ளது.

## திணை, துறை விளக்கம்

***முல்லைத் திணை***

நிலமும் பொழுதும்

காடும் காடு சார்ந்த இடமும் முல்லைத் திணை ஆகும்.
பெரும் பொழுது : கார்காலம்
சிறுபொழுது : மாலை

உரிப்பொருள் : இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

***பாடல் :***

காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே

எனும் பேயனாரின் பாடலில் தலைவன் வருவதாகச் சொன்ன பருவத்திற்கு முன்பே வந்துவிட்டதை தலைவிக்கு உரைக்கின்றான்.

***துறை : பருவங் (கார் காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**துறை விளக்கம்:**

தலைவன் கார் காலத்தின் தொடக்கத்தில் வருவேன் என்று சொல்லிவிட்டு, தலைவியைப் பிரிந்தான். ஆனால் அப்பருவத்திற்கு முன்பே, தலைவன் வந்துவிட்டான். அதனை தலைவிக்கு உணர்த்தி மகிழ்கிறான்.

பாடல் :

காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே

விளக்கம் :

காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் போன்ற பூக்கள் மலர்ந்தன. கார் காலத்தில் முல்லை நிலத்தில் பூக்கும் மலர்கள் இவை. இவற்றைக் கண்டு ஆடி மகிழலாம் வா என்று தலைவியை அழைக்கின்றான் தலைவன். அதாவது உரிய பருவத்திற்கு முன்பே வந்துவிட்டதை உணர்த்துகிறான் தலைவன்.

**கலைச் சொற்கள் :**

| | |
|---|---|
| இயற்கை வேளாண்மை | - Organic Farming |
| வேதி உரங்கள் | - Chemical Fertilizers |
| ஒட்டு விதை | - Shell Seeds |
| தொழு உரம் | - Farmyard Manure |
| மதிப்புக்கூட்டுப் பொருள் | - Value Added Product |
| வேர் முடிச்சுகள் | - Root Nodes |
| தூக்கணாங்கருவி | - Weaver Bird |
| அறுவடை | - Harvesting |




## மனப்பாடப் பாடல்

**காவியம்**

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

- **பிரமிள்**






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***எண்ணங்களை எழுத்தாக்குக:***



மரம் இறைவன் நமக்களித்த வரம்.
உண்ணக் கனிகள்,
ஒதுங்க நிழல்,
சுவாசிக்கக் காற்று.
மரம் தான் மரம் தான்
எல்லாம் மரம் தான்.
மறந்தான் மறந்தான் மனிதன்
அதை மறந்தான்.
மனிதா நீ வெட்டியது
மரத்தை அல்ல. உனக்கான சவக்குழியை.

**கூடுதல் வினாக்கள்**

***1. தொழுஉரம் என்றால் என்ன?***

நஞ்சை நிலத்திற்கு : மாட்டுச்சாணம், கோமியம் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்குவதே தொழுஉரம்.

புஞ்சைக்கு : காய்ந்த இலைச்சருகு, ஆடு அல்லது மாட்டின் சாணத்தை எரித்த சாம்பலை தொழு உரமாகப் பயன்படுத்தலாம்.

2. சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் ஒரு …………ன் வாழ்வை எழுதிச் செல்கிறது.

**அ) பறவை** ஆ) பஞ்சு இ) இலை ஈ) மேகம்

2. இறகுகளின் தொகுதி…………………. எனப்படும்.

அ) பறவை ஆ) தோகை **இ) சிறகு** ஈ) நிலம்

3. வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை.

அ) நாரை **ஆ) உள்ளான்** இ) தூக்கணாங்குருவி ஈ) கொக்கு.

4. வடகரை நாட்டுத் தாமரைத் தடாகத்தில் துள்ளிப் பாய்ந்து விளையாடுபவை…

அ) முதலைகள் ஆ) சங்குகள் இ) மேகங்கள் **ஈ) மீன்கள்**

5. பள்ளு எவ்வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று……………

அ) 76 ஆ) 86 **இ) 96** ஈ) 99

6. தமிழ்நாட்டின் மாநில மரம்.

அ) மாமரம் ஆ) வேப்பமரம் இ) ஆலமரம் **ஈ) பனை மரம்**

7. இயற்கை வேளாண்மையின் பயன்களை எடுத்துக் கூறியவர்...............

அ) பெரியாழ்வார் **ஆ) நம்மாழ்வார்** இ) உழவர் ஈ) கம்பர்

8. தகப்பன் கொடி புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டு தமிழக அரசின் விருதைப் பெற்றவர் அழகிய பெரியவன்.

9. அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன்.

10. பிரமிள் என்ற பெயரில் எழுதியவர் சிவராமலிங்கம்.

11. பள்ளு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இதற்கு உழத்திப்பாட்டு என்றும் பெயர்.

12. உழவர், உழத்தியரின் வாழ்க்கையை சித்தரிப்பது பள்ளு இலக்கியமாகும்.

13. நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது என்பர்.

14. பள்ளு என்பது வேளாண் இலக்கியம்.

15. பள்ளு, தொல்காப்பியர் குறிப்பிடும் புலன் எனும் இலக்கிய வகையைச் சாரும்.

16. மூன்றடி சிற்றெல்லையும், ஆறடி பேரெல்லையும் கொண்டு அகவற்பாவால் அமைந்த நூல் ஐங்குநுறுறு. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

17. எட்டுத் தொகை நூல்களுள் மிகக் குறைந்த அடிகளையுடையது ஐங்குறுநூறு.

18. ஐங்குறுநூற்றில்,

குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடியவர் - கபிலர்

முல்லைத்திணைப் பாடல்களைப் பாடியவர் - பேயனார்

மருதத்திணைப் பாடல்களைப் பாடியவர் - ஓரம்போகியார்

நெய்தல்திணைப் பாடல்களைப் பாடியவர் - அம்மூவனார்

பாலைத்திணைப் பாடல்களைப் பாடியவர் - ஓதலாந்தையார்

கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்.

19. காட்டின் மூலவர் என்று அழைக்கப்படும் விலங்கு

அ) புலி ஆ) **யானை** இ) சிறுத்தை ஈ) சிங்கம்

20. யானையைக் குறிக்கும் வேறு சொல்

அ) குஞ்சரம் ஆ) குஞ்சனம் இ) அஞ்சுகம் **ஈ) அஞ்சனம்**

*21. யானை டாக்டர் என்னும் சிறுகதையின் ஆசிரியர்*

*அ) புதுமைப்பித்தன்* *ஆ) பிரபஞ்சன்* ***இ) ஜெயமோகன்***

*ஈ) சி.சு. செல்லப்பா.*

*22. ஜப்பான் நாட்டு அறிஞர் மசானபு ஃபுகோகா கூறும் ஐந்து வேளாண் மந்திரங்கள் யாவை?*

*அ) உழப்படாத நிலம்.*


*ஆ) வேதியியல் உரம் இல்லாத உற்பத்தி*

*இ) பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு*

*ஈ) தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி*

*உ) ஒட்டுவிதை இல்லாத உயர் விளைச்சல்*

***




www.Padasalai.Net



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் - 3

**உரைநடை : மலை இடப் பெயர்கள் ஓர் ஆய்வு - அர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.**
**செய்யுள் : காவடிச்சிந்து - சென்னிகுளம் அண்ணாமலையார்**
**குறுந்தொகை - வெள்ளிவீதியார்**
**புறநானூறு - கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**
**துணைப்பாடம் : வாடிவாசல் - சி.சு. செல்லப்பா**
**இலக்கணம் : பகுபத உறுப்புகள்**
**அறவுரைப் பகுதி : திருக்குறள் - திருவள்ளுவர்**



**பலவுள் தெரிக**

***1. கூற்று - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.***
**விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.**

*ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.*

***2. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?***

*ஆ) அண்ணாமலையார்.*

***3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.***

1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா
3. வாடிவாசல் - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

(iii) இ ஈ ஆ அ

***4. "இனிதென" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.***

*அ) உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.*

***5. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் யாவை?***

*ஈ) பகுதி, விகுதி*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**குறுவினாக்கள்**

**1. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்படுகிறது?**

கோட்டை எனும் சொல் மலையாளத்தில் கோட்ட, கோடு என்றும், கன்னடத்தில் கோட்டே, கோண்டே என்றும், தெலுங்கில் கோட்ட என்றும் துளுவில் கோட்டே என்றும் அழைக்கப்படுகிறது.



**2. காவடிச்சிந்து என்பது யாது?**

> தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச்சிந்து.

> முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலிய பொருட்களைக் கொண்டு செல்வோர் ஆடல், பாடலுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப்பாடலே காவடிச்சிந்து ஆகும்.

**3. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

- குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களை உடையது.
- நல்ல குறுந்தொகை எனும் அடைமொழியை உடையது.
- உரையாசிரியர்களால் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் இதுவாகும்.

**4. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**

- தமிழர்கள் புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுத்தனர்.
- பழி வரும் என்றால் உலகத்தையே கொடுத்தாலும் அத்தகு இழிசெயல்களை செய்ய மாட்டார்கள்.

சிறுவினாக்கள்

**1. "மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**



- மலை மனித சமுதாயத்தின் ஆதி நிலமாகும்.
- திராவிடர்கள் அடிப்படையில் மலைநில மக்கள்.
- முருகனை குறிஞ்சிக்குரிய தெய்வமாகச் சுட்டுகிறது திருமுருகாற்றுப்படை.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- *கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைநிலத் தலைவர்களாக விளங்கியிருக்கின்றனர்.*
- *பெருநில மன்னர்களுக்குக் கூட வழங்காத பெருமையை மலைநில மன்னர்களுக்கு அளித்துள்ளனர்.*

***2. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.***

- *காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் அண்ணாமலையார்.*
- *தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச்சிந்து.*
- *முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலிய பொருட்களைக் கொண்டு செல்வோர் ஆடல், பாடலுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப்பாடலே காவடிச்சிந்து ஆகும்.*
- *காவடி தமிழர்களின் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றது.*

**3. பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**அ) வருகின்றாள் ஆ) வாழ்வான் இ) காண்பிப்பான் ஈ) பிரிந்த**

- **வருகின்றாள்** - வா(வரு) + கின்று + ஆள்
  வா - பகுதி, வரு விகாரம், கின்று - இறந்தகால இடைநிலை, ஆள் - பெண்பால் வினைமுற்று விகுதி.
- **வாழ்வான்** - வாழ் + வ் + ஆன்
  வாழ் - பகுதி, வ் - எதிர்கால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.
- **காண்பிப்பார்** - காண்பி + ப் + ப் + ஆர்
  காண்பி - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.
- **பிரிந்த** - பிரி + த்(ந்) + த் + அ
  பிரி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்சம்.

***4. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.***

***சங்ககால நிகழ்வு***

- *மணம் முடிக்க வரும் தலைவன், பெற்றோர், பெரியோர் முன்னிலையில் தம் பரிசப் பொருள்களைக் கொடுத்து, அவர்களிடம் பெண் கேட்பர்.*
- *தலைவன் கொண்டுவந்த பொருட்கள் கண்டு மனநிறைவு அடைந்தால் பெண்ணை திருமணம் செய்து கொடுக்க சம்மதித்தனர்.*


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**தற்கால நிகழ்வு**

- மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை மணம் முடிக்க வரதட்சனை கேட்கின்றனர்.
- வரதட்சனை மனநிறைவு அளித்தால் மட்டுமே அப்பெண்ணின் திருமணம் நடைபெறும்.

**5. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.**

- விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
  மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.
- வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
  வாழ்வாரே வாழா தார்.
- அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
  அஞ்சல் அறிவார் தொழில்.

**நெடுவினாக்கள்**

**1. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.**

**மலை இடப்பெயர்கள் ஓர் ஆய்வு - ஆர்.பாலகிருஷ்ணன்,இஆப.**

- மலை மனித சமுதாயத்தின் ஆதி நிலமாகும்.
- கோடு என்னும் தமிழ்ச்சொல்லிற்கு, மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
- கோட்டை எனும் சொல்லிற்கு காவல் மிகுந்த காப்பரண் என்று பொருள்.
- கோட்டை எனும் சொல் மலையாளத்தில் கோட்ட, கோடு என்றும், கன்னடத்தில் கோட்டே, கோண்டே என்றும், தெலுங்கில் கோட்ட என்றும் துளுவில் கோட்டே என்றும் அழைக்கப்படுகிறது.
- திராவிடர்கள் அடிப்படையில் மலைநில மக்கள்.
- முருகனை குறிஞ்சிக்குரிய தெய்வமாகச் சுட்டுகிறது திருமுருகாற்றுப்படை.
- கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைநிலத் தலைவர்களாக விளங்கியிருக்கின்றனர்.
- பெருநில மன்னர்களுக்குக் கூட வழங்காத பெருமையை மலைநில மன்னர்களுக்கு அளித்துள்ளனர்.
- சிற்றாறுகள், ஓடைகள் ஆகியவற்றின் நீரை மலைவாழ் மக்கள் குடிநீராகப் பயன்படுத்தினர்.
- தோடர்கள் பால் தரும் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதி, மதில்சுவர்கள் அமைத்தனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- பழங்குடித்தலைவரின் வீடு மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது.
- உயரமான மேடை மீது அமர்தல், திண்ணை, மேலோடைநீரைப் பயன்படுத்துதல் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் ஆதிக்கத்தின் தாக்கத்தைக் காட்டுகிறது.
- திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர்தம் மலை சார்ந்த வாழ்வியல் முறையைக் காட்டுகின்றன.
- தமிழில் வரை என்ற சொல், கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் கையாளப்படுகிறது.

**2. நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாக காவடிச்சிந்து உள்ளது - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.**

**காவடிச் சிந்து - அண்ணாமலையார்**

- காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் அண்ணாமலையார்.
- தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச்சிந்து.
- முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலிய பொருட்களைக் கொண்டு செல்வோர் ஆடல், பாடலுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப்பாடலே காவடிச்சிந்து ஆகும்.
- காவடி தமிழர்களின் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றது.
- கழுகுமலையின் கோபுர கலசம் தங்க நிறத்தினால் ஆனது. வானத்தை விடவும் உயர்ந்தது.
- கொடிக்கம்பமானது, உயர்ந்து விண்ணுக்குத் தாவுவதைப் போன்று அமைந்திருந்தது.
- கழுகுமலையில் பெண்கள் சிலம்பு ஒலிக்க நடனமாடுவர். மத்தளமும், தாளமும் ஒலிக்கும். இதனை இடியோசை என எண்ணி பாம்பு அஞ்சும்.
- உயரமான மதில்சுவரில் முகில்கள் ஓய்வெடுத்துச் செல்லும். அவை நகரும்போது மதிலை உரசி மின்னலையும், இடியையும் உண்டாக்கும்.
- சிந்துப்பாடலை அடியார்கள் சந்தத்தோடு பாடுவர். அது தேவர்களின் காதையும் அடைக்கும்.
- அனலிடைப்பட்ட புழுவைப்போல உள்ளம் உருகுவர்.
- இதுபோன்ற காவடிச்சிந்துப்பாடல்கள் வழி அந்த ஆலயங்களின் சிறப்புகள் வெளிப்படுவதோடு, இவை வழிநடைப் பாடலாகவும் அமைவதையும் அறியலாம்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.**
**வாடிவாசல் - சி.சு செல்லப்பா.**

- ✓ மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையே நடக்கும் போட்டியில் இரண்டில் ஒரு முடிவு காணும் களமே வாடிவாசல்.
- ✓ அவ்விடத்தில் மனிதன் இரத்தம் சிந்தலாம். ஆனால் காளையின் உடலில் ஒரு துளி இரத்தம் வரக்கூடாது.
- ✓ மனிதர்கள் இதை விளையாட்டாக நினைத்தாலும், காளைக்கு அது விளையாட்டன்று. அதுவே சல்லிக்கட்டு எனும் வீரவிளையாட்டு.



- ✓ தமிழரின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்று.
- ✓ காளைகள் ஒவ்வொன்றாக அவிழ்த்துவிடும் இடம்தான் வாடிவாசல்.
- ✓ வாடிவாசலில் ஜமீன்தாரின் காரிக்கொம்பு வெளியே வந்தது. அது வாடிபுரம் காளை எனவும் கருப்புப் பிசாசு என்றும் அழைக்கப்பட்டது.
- ✓ மருதன், பிச்சி இருவரும் சைகை காட்டிக் கொண்டு காளையை அடக்க முயன்றனர்.
- ✓ பிச்சி காளை மீது ஏறி அடக்க முயன்றான்.
- ✓ காளை அவனை கீழே தள்ளிவிட பலமுறை முயன்றும் முயன்றும் முடியவில்லை.
- ✓ இறுதியில் காளை தோற்றது. பிச்சி வென்றான். தன் தந்தையின் மரணத்திற்குக் காரணமான அந்தக் காளையை பிச்சி வீழ்த்தினான்.
- ✓ இதிலிருந்து சல்லிக்கட்டு எனும் வீரவிளையாட்டு பற்றியும், அதனை விளையாடும் முறை, முயன்றால் முடியாதது எதுவும் இல்லை போன்றவற்றையும் அறிந்து கொண்டோம்.

**மொழிப்பயிற்சி**

**வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**1. குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.**

குமரனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

**2. அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.**

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெறவேண்டும்.

***3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.***

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்.

***4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.***

தமிழர் ஆற்றுத்தண்ணீரைத் தேக்கிச் சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

***5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.***

சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவைபுரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.

**தமிழாக்கம் தருக.**

1. Education is the most powerful weapon, which you can use to change the world.

*கல்வி இவ்வுலகை மாற்றும் மிக வலிமையான ஆயுதம்.*

2. Looking at beauty in the world is the first step of purifying the mind.

*இவ்வுலக அழகைப் பார்ப்பதற்கு மனத்தூய்மையே முதற்படி.*

3. Culture does not make people. People make culture.

*கலாச்சாரம் மக்களை உருவாக்குவதில்லை. மக்களே கலாச்சாரத்தை உருவாக்குகிறார்கள்.*

4. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.

*தம் கடந்தகால வரலாறு மற்றும் கலாச்சாரத்தை அறியாதோர் வேரற்ற மரம் போல்வர்.*

5. A nation's culture resides in the hearts and in the soul of its people.

*ஒரு நாட்டின் கலாச்சாரம் மக்களின் இதயங்களிலும் ஆத்மாவிலும் இருக்கிறது.*

## இலக்கணம் - பகுபத உறுப்புகள்

***1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?***

*பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறும் பகுபத உறுப்புகளாகும்.*



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

- இறந்தகால இடைநிலைகள் : த், ட், ற், இன் - படித்தான்
- நிகழ்கால இடைநிலைகள் : கிறு, கின்று, ஆநின்று - வரு**கிறு**ஆன்.
- எதிர்கால இடைநிலைகள் : ப், வ் - வரு**வ்**ஆன்.

**3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?**

- பகுபதத்தில் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் சந்தி அமையும்.
- சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் அமையும்.

**4. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?**

திணை, பால், எண், இடம் ஆகியவற்றை விகுதிகள் உணர்த்தும்.


**5. உறுப்பிலக்கணம் தருக.**

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அமைந்து | அமை | த் | ந் | த் | | உ |
| பார்த்தான் | பார் | த் | | த் | | ஆன் |
| தோன்றி | தோன்று | | | | | இ |
| வருகிறார் | வா | வரு | | கிறு | | ஆர் |
| செய்க | செய் | | | | | க |
| நடந்தனன் | நட | த் | ந் | த் | அன் | அன் |
| கொடுத்த | கொடு | த் | | த் | | அ |

**6. பின்வருவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.**

இன் - முறிந்தது

**7. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**




1. பேசு + இன் + ஆன் = பேசினான்.
2. பேசு + கிறு + ஆன் = பேசுகிறான்.
3. பேசு + வ் + ஆன் = பேசுவான்


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. பேசு + ஆ + ஆன் = பேசான்.

5. எழுது +இன் + ஆன் = எழுதினான்.
6. எழுது + கிறு + ஆன் = எழுதுகிறான்.
7. எழுது + வ் + ஆன் = எழுதுவான்.
8. எழுது + ஆ + ஆன் = எழுதான்.

9. வணங்கு +இன் + ஆன் = வணங்கினான்.
10. வணங்கு + கிறு + ஆன் = வணங்குகிறான்.
11. வணங்கு + வ் + ஆன் = வணங்குவான்.
12. வணங்கு + ஆ + ஆன் = வணங்கான்.

**8. வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.**

| | | | |
|---|---|---|---|
| பார் → | ஆ → | ஆன் → | பாரான் |
| காண் → | அல் → | அள் → | காணலள் |
| உரை → | இல் → | அர் → | உரையிலர் |

***கலைச்சொல் அறிவோம்***

| | | |
|---|---|---|
| இனக்குழு | - | Ethnic Group |
| முன்னொட்டு | - | Prefix |
| புவிச்சூழல் | - | Earth Environment |
| பின்னொட்டு | - | Suffix |
| வேர்ச்சொல் அகராதி | - | Etymological Dictionary |
| பண்பாட்டுக்கூறுகள் | - | Cultural Elements |

***மனப்பாடப் பாடல்கள்***

***1. குறுந்தொகை***

*அம்ம வாழி தோழி நம்மூர்ப்*
*பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ*
*தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்*
*நன்றுநன் றென்னும் மாக்களோடு*
*இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே*

*- வெள்ளி வீதியார்*

*பாவகை : நேரிசை ஆசிரியப்பா*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

2. புறநானூறு

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே: முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்: பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்: அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

- கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

**திணை : பொதுவியல் திணை**

**துறை : பொருண்மொழிக் காஞ்சித் துறை**

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| 1. தாவி | - வினையெச்சம் |
| 2. மாதோ | - விளி |
| 3. பிரிந்தோர் | - வினையாலணையும் பெயர் |
| 4. நன்றுநன்று | - அடுக்குத்தொடர் |
| 5. அம்ம | - அசைநிலை |
| 6. உண்டல், துஞ்சல் | - தொழிற்பெயர்கள் |
| 7. முயலா | - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

**புணர்ச்சி விதி**

**1. திருப்புகழ் = திரு + புகழ்**

திருப்புகழ் - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் விதிப்படி ப் மிகுந்தது.

**2. உயர்ந்தோங்கும் = உயர்ந்து + ஓங்கும்**

உயர்ந்த் + ஓங்கும் - உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும் விதிப்படி உகரம் கெட்டது.

உயர்ந்தோங்கும் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி த் + ஓ = தோ ஆனது.

**3. தண்டுடை = தண்டு + உடை**

தண்ட் + உடை - உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும் விதிப்படி உகரம் கெட்டது.

தண்டுடை - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ட் + உ = டு ஆனது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4. இயைவதாயினும் = இயைவது + ஆயினும்**

இயைவத் + ஆயினும் - உயிர்வரின் உக்குறல் மெய்விட்டோடும் விதிப்படி உகரம் கெட்டது.

இயைவதாயினும் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி த் + ஆ = தா ஆனது.

**பகுபத உறுப்பிலக்கணம்**

**1. வருகின்ற = வா(வரு) + கின்று + அ**

வா - பகுதி, வரு எனத் திரிந்தது விகாரம்,
கின்று - நிகழ்கால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**2. பிரிந்தோர் = பிரி + த்(ந்) + த் + ஓர்**

பிரி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம்,
த் - இறந்தகால இடைநிலை, ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

**3. துஞ்சல் = துஞ்சு + அல்**

துஞ்சு - பகுதி, அல் - தொழிற்பெயர் விகுதி

**4. முனிவிலர் = முனி + வ் + இல் + அர்**

முனி - பகுதி, வ் - உடம்படுமெய், இல் - எதிர்மறை இடைநிலை,
அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

**திணை, துறை விளக்கம்:**

**(i) குறிஞ்சித்திணை**

முதற்பொருள் : மலையும் மலை சார்ந்த இடமும்.
பொழுது : சிறுபொழுது - யாமம்,
பெரும்பொழுது - கூதிர்காலம், முன்பனி
கருப்பொருள்:
தெய்வம் : முருகன்,
மக்கள் : குறவர், குறத்தியர், கானவர்
விலங்கு : புலி, கரடி, சிங்கம், யானை
ஊர் : சிறுகுடி
யாழ் : குறிஞ்சியாழ்
பண் : குறிஞ்சிப்பண்
உரிப்பொருள் : புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.

சான்று:

அம்ம வாழி தோழி நம்மூர்ப் எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**(ii). பொதுவியல் திணை**

**விளக்கம் :** வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும், பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணை.

**சான்று :**

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர் எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

பொருத்தம் :

இப்பாடலில் பொதுவான கருத்துகள் கூறப்பட்டிருப்பதால் பொதுவியல் திணையாகும்.

**(i) துறை:**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று தோழி கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம், தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

**சான்று :**

அம்ம வாழி தோழி நம்மூர்ப் எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.

**(ii) பொருண்மொழிக் காஞ்சித் துறை :**

**விளக்கம்** : மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக்கூறுவது பொருண்மொழிக் காஞ்சித் துறை ஆகும்.

**சான்று :**

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர் எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்

**பாடற்பொருள்** : சான்றோர் அமிழ்தமே கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல், பிறருக்கும் கொடுத்து மகிழ்வர். சோம்பலுடன் இருக்க மாட்டார்கள். புகழ் வரும் எனில் உயிரையும் கொடுப்பர். பழிவரும் எனில், உலகத்தையே ஈடாகக் கொடுத்தாலும் அதனை ஏற்க மாட்டார். தமக்கென வாழாமல், பிறர்க்கென வாழ்வர்.

**பொருத்தம் :**

சான்றோர் எங்ஙனம் வாழவேண்டும் என்று உணர்த்தி இருப்பதால் இது பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.




திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## திருக்குறள்

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க**



*இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது.*

**2. துன்பப்படுபவர்**

*ஈ) நாவைக் காக்காதவர்*

**3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்**
**தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்**
**துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்**
**எஞ்சினர் இவ்வுலகத் தில்.**

*ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு.*

**4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

**பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்**
**புழுங்குகிறது யோசனை**
**பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்**
**நசுங்குகிறது அறம்**
**இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்**
**போராட்டத்தில் வெடிக்கின்றன**
**வெளியில் குண்டுகளும்**
**வீட்டில் சண்டைகளும் ".**
**ஆசை அறுத்தல் எளிதல்ல்**
**முயன்று பார்க்கலாம் வா**

*இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்*
*துன்பத்துள் துன்பம் கெடின்.*

**5. ஒப்புரவு என்பதன் பொருள்**

*இ) ஊருக்கு உதவுவது.*

**6. பொருத்துக**

| | |
|---|---|
| *அ) வாழ்பவன்* | - ஒத்ததறிபவன் |
| *ஆ) வாழாதவன்* | - இசையொழித்தவன் |


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) தோன்றுபவன் - புகழ் தரும் பண்புடையவன்
ஈ) வெல்ல நினைப்பவன் -காத்திருப்பவன்
உ) பெரும் பண்புடையவன் - மருந்தாகும் மரமானவன்

**7. இலக்கணக் குறிப்பு தருக**

அ) சுடச்சுடரும் - முற்றும்மை / மூன்றாம் வேற்றுமைத் தொகை
ஆ) சுடச்சுடரும் பொன் - எதிர்காலப் பெயரெச்சத் தொடர்
இ) சுடச்சுட - அடுக்குத் தொடர்

**8. விரைந்து கெடுபவன் யார்?**

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.

**9. வேளாண்மை செய்தற் பொருட்டு - பொருள் தருக.**

தகுதியானவருக்கு உதவி செய்ய வேண்டும்.

**10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது**

ஆ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்.

**11. அருவினை - புணர்ச்சி விதி தருக.**

அருமை + வினை
அருவினை - ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது.

**குறுவினா**

**1. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?**

தீயினால் சுட்டது ஆறிவிடும். நாவினால் சுட்டது ஆறாமல் வடுவாக நின்று விடும்.

**2. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக**

உவமை -சான்றோரிடம் இருக்கும் செல்வமானது, தன் உடல் முழுவதும் மருந்தாகப் பயன்படும் மரத்திற்குச் சமம்.

பொருள் - மூலிகை மரமானது, அனைவருக்கும் பயன்படும். அதைப் போல, சான்றோரிடம் இருக்கும் செல்வமானது, அனைவருக்கும் பயன்படும்.

**3. எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?**

நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர் போகும் முன்பே நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***4. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?***

செயலின் வலிமை, தன் வலிமை, பகைவனின் வலிமை, துணையாக வருபவரின் வலிமை ஆகிய மூவரின் வலிமையையும் சீர்தூக்கி ஆராய வேண்டும்.

***5. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?***

மருந்தாக இருப்பது செல்வம், மருந்து மரமாக இருப்பவர் பெருந்தகையாளர்.

***சிறுவினா***

***1. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே***
***நாவினாற் சுட்ட வடு.-இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.***

***அணி : வேற்றுமையணி***

***அணி விளக்கம் :***

இரு பொருள்களுக்கிடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பின்பு ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணி ஆகும்.

***சான்று விளக்கம் :***

தீயினால் ஏற்பட்ட புண் உள்ளுக்குள் ஆறிவிடும். ஆனால் நாவினால் தீயசொற்களால் மனதில் உண்டான புண்ணானது என்றும் ஆறாத வடுவாக நின்றுவிடும்.

***பொருத்தம் :***

தீயினால் ஏற்பட்டதும் புண்: நாவினால் ஏற்பட்டதும் புண் என்று இரு பொருள்களுக்கிடையே ஒற்றுமையைக் கூறிவிட்டு, தீயினால் உண்டான புண் ஆறிவிடும்: நாவினால் உண்டான புண் ஆறாது என வேறுபடுத்திக் காட்டியிருப்பதால் இது வேற்றுமையணியாகும்.

***2. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.***

> இணையற்றது புகழ். அதைத்தவிர நிலைத்து நிற்பது வேறு எதுவும் இல்லை.
> தோன்றினால் புகழுடன் தோன்றுக. இல்லையெனில் தோன்றுவதை விட தோன்றாமல் இருப்பதே நல்லது.
> பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்: புகழின்றி வாழ்பவரே வாழாதவர்.

***3. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை***
**மேற்சென்று செய்யப் படும். - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.**

| | | |
|---|---|---|
| நாச்/செற்/று | - நேர் நேர் நேர் | - தேமாங்காய் |
| விக்/குள்/மேல் | - நேர் நேர் நேர் | - தேமாங்காய் |
| வா/ரா/முன் | - நேர் நேர் நேர் | - தேமாங்காய் |
| நல்/வினை | - நேர் நிரை | - கூவிளம் |
| மேற்/சென்/று | - நேர் நேர் நேர் | - தேமாங்காய் |
| செய்/யப் | - நேர் நேர் | - தேமா |
| படும் | - ***மலர்*** எனும் வாய்பாட்டில் முடியும் குறள் | |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4. சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.**

**சொற்பொருள் பின்வரு நிலையணி**

ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து தந்த (ஒரே) பொருளையே தருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

**குறள் விளக்கம் :**

நாம் மேற்கொள்ளும் செயலின் வலிமை, நம் வலிமை, பகைவரின் வலிமை, துணையாக வருபவர்களின் வலிமை ஆகியவற்றை கணக்கிட்டு செயலை மேற்கொள்ள வேண்டும்.

**பொருத்தம் :**

பாடலில் வலி எனும் சொல் பலமுறை வந்து வலிமை எனும் ஒரு பொருளையே உணர்த்துகிறது. எனவே இத்திருக்குறள் சொற்பொருள் பின்வரு நிலையணிக்குப் பொருந்துகிறது.

**5. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.**

எப்படிப்பட்ட அரிய செயலாயினும், உரிய காலம் வாய்க்கும்போதே செய்தால் எளிமையாக செய்து முடித்துவிடலாம்.

**எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல்.**

எனும் திருக்குறளின்வழி வள்ளுவர் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

**நெடுவினா**

**1. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.**

- விடாமுயற்சியுடன் ஈட்டிய செல்வம் அனைத்தும் தகுதியானவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும்.
- உயர்ந்தவர்களின் உலக நடைமுறையோடு ஒத்துப்போகிறவனே உயிர் வாழ்பவன். மற்றவர்கள் செத்தவர்களுள் ஒருவனாகவே கருதப்படுவான்.
- பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம், தன் உடல் முழுவதும் மருந்தாக உதவும் மரத்தைப் போன்றது.

**2. "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக**

- நேர்மையான வழியில் அடக்கமாக இருப்பவனின் உயர்வானது, மலையை விட உயர்ந்தது.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- எதைக் காக்காவிட்டாலும் நாவை அடக்கி ஆளவேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொற்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.
- தீயினால் உண்டான புண் ஆறிவிடும். ஆனால் நாவினால் ஒருவரை இழிசொல்லால் பேசி உண்டான வடு ஆறாமல், என்றும் வடுவாக நின்றுவிடும்.

***மனப்பாடக் குறட்பாக்கள் :***

1. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.
2. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.
3. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.
4. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.
5. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.
6. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.
7. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.
8. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு.
9. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.
10. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.
11. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.
12. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.
13. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.
14. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

---

**கூடுதல் வினாக்கள்**

*1. திராவிடர்களை கமில் சுவலபில், மலைநில மக்கள் என்று அழைக்கிறார்.*

*2. தோடர்கள் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்.*

***3. KVT Complex அல்லது கேவிடி காம்ப்ளக்ஸ் அல்லது கேவிடி வளாகம் அல்லது கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் பற்றி விளக்குக.***

கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப் பெயர்கள் பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல், மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை. சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்கு கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும். இவை கடந்த கால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள்.

***4. காவடிச் சிந்தின் தந்தை யார்?***

*அண்ணாமலையார்.*

***5. வீரைத் தலபுராணம் பாடியவர் யார்?***

*அண்ணாமலையார்.*

***6. நல்ல எனும் அடைமொழி பெற்ற நூல் யாது?***

*குறுந்தொகை.*

***7. தமிழரின் வாழ்வியல் கருவூலம் என்று அழைக்கப்படும் நூல் எது?***

*புறநானூறு.*

***8. புறநானூற்றின் வேறு பெயர்கள் யாவை?***

*புறம், புறப்பாட்டு.*

***9. புறநானூற்றை முதன்முதலில் அச்சில் பதிப்பித்தவர் யார்?***

*உ. வே. சாமிநாதையர்.*

*10. புறநானூற்றை,* The Four Hundred Songs of war and wisdom *என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் பேராசிரியர் ஜார்ஜ். எல். ஹார்ட்.*

***11. அரிய பண்புகள் அனைத்தையும் இளமையிலேயே கொண்டிருந்தவர் யார்?***

*கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி.*

***12. குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் சொல்***

*அ) மலய* *ஆ) மேடு* ***இ) மெட்டு*** *ஈ) பள்ளம்*

*13.* **KVT Complex *என்பதன் பொருள்***

*அ) குறிஞ்சி வஞ்சி திருச்சி வளாகம்*

*ஆ) குறிஞ்சி வஞ்சி தொண்டி வளாகம்*

*இ) கொற்கை வாஞ்சி தண்டை வளாகம்*

***ஈ) கொற்கை வஞ்சி தொண்டி வளாகம்***



www.Padasalai.Net

***14. எதிர்மறை இடைநிலை....................***

*அ) இன்* ***ஆ) இல்*** *இ) கின்று* *ஈ) இ*

**15. பேசு என்றும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்க.**

**அ) பேசினார்** ஆ) பேசிய இ) பேசியவர் ஈ) பேசி

*16. பற்றுக பற்றற்றான் என்ற குறட்பாவில் வரும் அணி.........*


*அ) பிறிது மொழிதல் அணி* *ஆ) வேற்றுமையணி*

***இ) சொற்பொருள் பின்வரு நிலையணி*** *ஈ) உவமையணி*

*17. ஒருகோடி வாழ்வது அறியார் கருதுப*

*கோடியும் அல்ல பல - இக்குறள் பெற்றுள்ள அதிகாரம்*

*அ) துறவு* ***ஆ) நிலையாமை*** *இ) தவம்*




www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இயல் 4



உரைநடை : தமிழகக் கல்வி வரலாறு
செய்யுள் : பிள்ளைக்கூடம் - இரா. மீனாட்சி,
நற்றிணை - போதனார்
தொல்காப்பிய சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல்
துணைப்பாடம் : இதழாளர் பாரதி
இலக்கணம் : படைப்பாக்க உத்திகள்

**பலவுள் தெரிக:**

1. *ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள்* ***அ) நூல்.***

2. **சரியான விடையைத் தேர்க.**

*அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்*
*ஆ) இளமையில் கல் - 2) திருமந்திரம்*
*இ) துணையாய் வருவது தூயநற் கல்வி - 3) ஆத்திச்சூடி*
*ஈ) பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல் - 4) திருக்குறள்*
*- 5) நாலடியார்*

**iii) அ-5, ஆ-3, இ-2, ஈ-1**

3. *9 அடிச் சிற்றெல்லையும், 12 அடிப் பேரெல்லையும் கொண்ட நூல்*
***அ) நற்றிணை.***

4. *தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை*
***இ) 27***

5. *நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?*
***அ) வினை***

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**சிறுவினாக்கள் :**

***1. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?***

*சங்ககாலத்தில் தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும், சமயம், வணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் விளங்கியது.*

***2. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.***

- *தனிநிலையில் புலவர்களிடத்தில் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை கற்றவர் உ.வே.சா அவர்கள். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம் கல்வி கற்றார்.*



***3. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு***
***கோடையில் கொட்டும் பூக்களை***
***எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?***

- *எண்ணச் சொல்கிறவர்கள் ஆசிரியர்கள்,*
- *எண்ணுபவர்கள் மாணவர்கள்.*

***4. கொழுஞ்சோறு - புணர்ச்சி விதி கூறுக.***

கொழுஞ்சோறு - கொழுமை + சோறு

கொழு + சோறு (ஈறு போதல் விதிப்படி மை விகுதி கெட்டது)

கொழுஞ்சோறு இனமிகல் விதிப்படி (வல்லினத்திற்கு(ச்) இனமான மெல்லினம் மிகுந்தது(ஞ்)

***5. உவமை, உருவகம் வேறுபடுத்துக.***

- ஒரு பொருளை, மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை.
  *சான்று : தாமரை முகம், மதிமுகம்.*
- உவமையையும், உவமிக்கப்படும் பொருளையும் வேறுபடுத்தாமல், இரண்டும் ஒன்றே எனக் கூறுவது உருவகம் ஆகும்.
  *சான்று : முகத்தாமரை, முகமதி.*

***சிறுவினாக்கள் :***

***1. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.***

- *கல்வி அழகே அழகு - நாலடியார்.*
- *இளமையில் கல் - ஆத்திச்சூடி*
- *துணையாய் வருவது தூயநற் கல்வி - திருமந்திரம்*
- *பாடம் கேட்டல், கேட்டவை நினைத்தல் - தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல்.*
- *உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே - புறநானூறு.*

***2. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.***

- *சமண சமயத்தின் தலையாய அறங்கள் கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகியனவாகும்.*

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- சமணத்துறவிகள் மலைக்குகைகளில் தங்கினர்.
- துறவிகள் தங்கியிருந்த படுக்கைகள் மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதால் கல்விக்கூடங்கள் பள்ளிக்கூடங்கள் என வழங்கப்படலாயின.
- பட்டினிக்குரத்தி என்பவள் விளாம்பாக்கத்தில் சமணப் பள்ளியை நிறுவினார்.
- வந்தவாசி, வேடல் எனும் ஊரில், பெண் ஆசிரியர் 500 மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார்.
- காஞ்சிபுரத்துக்கு வந்த சீன புத்தத்துறவி யுவான்சுவாங், பல்கலைக்கழகத்தில் தங்கி சிறப்புரை ஆற்றினர்.

**3. ”ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்” - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

- **இடம் :** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையில் மேற்கண்ட வரிகள் இடம்பெற்றுள்ளன.
- **பாடற்பொருள் :** தேன்கலந்த பால்சோற்றை பொற்கலத்தில் இட்டு தலைவிக்கு உணவளக்க முயல்வாள் செவிலித்தாய். தலைவி உண்ண மறுத்து இங்குமங்கும் ஓடுவாள். செவிலித்தாய் நடை தளர்வாள்.
- அப்படிப்பட்ட தலைவி, தன் கணவன் வீட்டில் ஒருவேளை விட்டு ஒருவேளை உணவை உண்கிறாள். அப்படிப்பட்ட சூழலிலும், தன் பிறந்த வீட்டின் செல்வச் செழிப்பை அவள் ஒருபோதும் எண்ணியதில்லை. இத்தகைய அறிவையும், ஒழுக்கத்தையும் எங்ஙனம் கற்றாள் என செவிலி, நற்றாயிடம் வியந்து கூறுகிறாள்.

**4. சின்னதொரு துண்டைத்**
**திரும்பத் திரும்ப கட்டி**
**அழகு பார்க்கிறாள் செல்ல மகள்**
**முந்தானை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்.**
**ஒரு குட்டி நாற்காலியே வீடாகிவிடுகிறது**
**துண்டைக் கட்டிக்கொண்டு தாயாகவும்**
**மாறிக்கொள்ள முடிகிறது அவளால்.**
**துண்டு ஒன்றுதான்’.**
**அதுவே அவளது மகிழ்ச்சியும்**
**என் துக்கமும்.**



- **இப்புதுக் கவிதை வெளிப்படுத்தும் கருத்தை ஆராய்ந்து எழுதுக.**

- பெண் குழந்தைத் துண்டைக் கட்டிக்கொண்டு இளம்பெண் போலவும் தாய்போலவும் மாறுகிறாள்.
- அவளின் விளையாட்டைப் பார்க்கையில் ஒருவித மகிழ்ச்சி ஏற்படுகிறது.
- தாய் புடவை கட்டுவதைப் பார்த்து, குழந்தையும் துண்டை சுற்றிக்கொள்வதை போலச் செய்தல் என்று அழைக்கின்றோம்.
- பெண்குழந்தை கையில் கிடைத்த சிறுபொருட்களையும் பயனுள்ளதாக மாற்றி விளையாடுவது கண்டு மகிழ்கிறாள் தாய்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இன்று அவளுக்கு சிறு நாற்காலியே வீடாக உள்ளது. நாளை இல்லற வாழ்வில் கணவனின் வீடே உலகமாகிறது.
- பருவம் எய்திய பின் அவள் சந்திக்கப்போகும் சவால்களை எண்ணி வருத்தம் கொள்கிறாள் அவளின் தாய்.
- இன்றுபோல், என்றும் அவள் மனமகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று எண்ணுகிறாள் அவளின் தாய்.

**5. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

**உள்ளுறை உவமை :**

> கவிஞன் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவதை, **உள்ளுறை உவமை** என்பர்.

சான்று : கரடி ஈசல் நிறைந்த புற்றில் கையை விடுகிறது. அது புற்றினுள் இருக்கும் பாம்பை அறியவில்லை. பாம்பின் மீது கரடியின் நகம் பட்டு அது துடிக்கிறது. பாம்பின் துயரத்தை கரடி அறியாது. அதுபோல இரவில் தலைவன் தன்னை சந்திக்க வரும்போது ஏற்படும் துன்பங்களை எண்ணி, தலைவி துன்பப்படுகிறாள். அவளின் துன்பத்தை தலைவன் அறியமாட்டான்.

**இறைச்சி**

> உரிப்பொருளோடு நேரடித் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே **இறைச்சி**.
சான்று : தலைவி புன்னை மரத்தடியில் தலைவனைச் சந்திக்கிறாள். தலைவனை திருமணம் செய்துகொள்ள வேண்டுகிறாள். அதற்காக புன்னை மரம் தன் சகோதரி எனவும், சகோதரியின் அருகே தலைவனை சந்திப்பது முறையாகாது என்றும் கூறுகிறாள்.

**நெடுவினாக்கள் :**

**1 பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.**

**பௌத்தக் கல்வி, சமணக் கல்வி**

- சமண சமயத்தின் தலையாய அறங்கள் கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகியனவாகும்.
- சமணத்துறவிகள் மலைக்குகைகளில் தங்கினர்.
- துறவிகள் தங்கியிருந்த படுக்கைகள் மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதால் கல்விக்கூடங்கள் பள்ளிக்கூடங்கள் என வழங்கப்படலாயின.
- பட்டினிக்குரத்தி என்பவள் விளாம்பாக்கத்தில் சமணப் பள்ளியை நிறுவினார்.
- வந்தவாசி, வேடல் எனும் ஊரில், பெண் ஆசிரியர் 500 மாணவர்கள் கற்பித்தார்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



- காஞ்சிபுரத்துக்கு வந்த சீன புத்தத்துறவி யுவான்சுவாங், அங்கிருந்த பௌத்த பல்கலைக்கழகத்தில் தங்கி சிறப்புரை ஆற்றினர்.

**மரபு வழிக்கல்வி முறை**

**(i) குருகுலக் கல்வி முறை**

- மாணவர்கள் ஆசிரியரை அணுகி அவருடன் பல ஆண்டுகள் தங்கி, அவருக்குப் பணிவிடைகள் செய்து கல்வி கற்றார்கள்.
- இம்முறையில் வாழ்வியலை கட்டமைக்கும் முறையைக் கற்றனர்.

**(ii) திண்ணைப் பள்ளி**

- திண்ணைப் பள்ளியை தெற்றிப் பள்ளிகள் என்றும் அழைத்தனர்.
- பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தது.

**(iii) உயர்நிலைக் கல்விமுறை**

- தனிநிலையில் புலவர்களிடத்தில் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை கற்றவர் உ.வே.சா அவர்கள். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம் கல்வி கற்றார்.
- பல்வேறு பரிமாணங்களைக் கண்ட கல்வி அமைப்பு முறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வளர்ச்சியடைந்து கொண்டே வருகிறது.

**2. தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?**

**தலைவியின் இல்லறப் பாங்கு**

- ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி எனும் வரிகளில் தலைவி சிறுமியாக இருந்தபோது அவளின் விளையாட்டுத்தனத்தையும், பின்பு அவளின் இல்லறவாழ்வு நடத்தும் சிறப்பையும் வியந்து கூறியுள்ளார் செவிலித்தாய்.
- தலைவி சிறுமியாக இருந்தபோது, செவிலித்தாய் தேன் கலந்த பால்சோற்றை பொற்கலத்தில் இட்டு ஊட்டுவாள்.
- தலைவி உண்ண மறுப்பாள். பூச்சுற்றிய மென்மையான கோலினை கையில் வைத்துக்கொண்டு மிரட்ட, பொற்சிலம்பில் முத்துப்பரல்கள் ஒலிக்க வெண்மணலில் அங்கும் இங்கும் ஓடுவாள் செவிலி. பின் நடைதளர்வாள்.



- தற்போது தலைவி இல்லறவாழ்வில் கணவன் வறுமையுற்ற நிலையிலும் தான் பிறந்த குடும்பத்தை நினைத்துப் பார்க்கவில்லை.
- ஒரு பொழுது விட்டு ஒரு பொழுது உண்ணும் வலிமை பெற்றவளாக இருக்கிறாள். இத்தகு அறிவும், ஒழுக்கமும் எங்கு கற்றாள் என்று செவிலித்தாய், நற்றாயிடம் வியந்து கூறுகிறாள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?**



**இதழாளர் பாரதி**

- ✓ பாரதியார் சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி போன்ற பல இதழ்களில் ஆசிரியராகவும், துணை ஆசிரியராகவும் பணியாற்றியவர்.
- ✓ சாவித்திரி, வேதாந்தி, நித்தியவீரர் போன்ற பல்வேறு புனைப்பெயர்களைக் கொண்டவர்.
- ✓ இதழ்களில் முதன்முதலில் கருத்துப்படம் அமைத்தவர் இவரே. மேலும் சித்ராவளி என்ற பெயரில் கருத்துப்படங்கள் மட்டுமே இதழை நடத்த விரும்பினார். அது இயலாத காரணத்தால், இந்தியா, விஜயா ஆகிய இதழ்களில் வெளியிட்டார்.
- ✓ தமிழ் இதழ்களில் நாள், ஆண்டு, மாதம் ஆகியவற்றை முதன்முதலாகக் குறிப்பிட்டவர்.




- ✓ பெண்விடுதலைக்குப் பாடுபட்டவர்.
- ✓ பெண்களுக்காகத் தம் சக்கரவர்த்தினி இதழில் குறள் வெண்பா எழுதினார்.
- ✓ இதழ்களில் தலைப்பிடலை மகுடமிடல் என்றார்.
- ✓ இந்தியா இதழை சிவப்பு வண்ணத்தில் வெளியிட்டார். சிவப்பு நிறம் புரட்சி, விடுதலை ஆகியவற்றைக் குறிப்பதாக அவர் கூறினார்.
- ✓ எந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் பாரதியார் இதழியல் பணியைக் கைவிடவில்லை. அவர் விடுதலைப் போராட்ட வீரராகவும், சிறந்த கவிஞராகவும் மட்டுமன்றி இதழாளராகவும் தம் பணியை சிறப்பாக ஆற்றியுள்ளார்.

**மொழிப்பயிற்சி**

**பின்வரும் ஆங்கிலச் சொற்களை தமிழில் மொழிபெயர்க்கவும்**

| | | | |
|---|---|---|---|
| Religion | - மதம் | Science | - அறிவியல் |
| Medicine | - மருத்துவம் | Idols | - சிலைகள் |
| Philosophy | - தத்துவம் | | |

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

1. **கால்நடை** - **கால்நடை**களை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக்கொண்டு போனார்கள்.
   - முருகப் பெருமானின் ஆலயங்கள் மலைகளில் இருப்பதால் **கால் நடை**யாகச் செல்வர்.

2. **பிண்ணாக்கு** - மாடுகள் **பிண்ணாக்கை** விரும்பி உண்கின்றன.
   பிள் நாக்கு - பாம்புகள் **பிள் நாக்கை** (பிளவுபட்ட நாக்கு) உடையன.

3. **எட்டுவரை** - அவன் **எட்டுவரை** எண்ணினான்.
   எள் துவரை - **எள், துவரை** ஆகியன உடலுக்கு நல்லது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. **அறிவில்லாதவன்** - பிறர் பேச்சைக் கேட்டு மட்டுமே நடப்பவன் **அறிவில்லாதவன்**.
அறிவில் ஆதவன் - நாம் எப்போதும் **அறிவில் ஆதவனா**க நடந்துகொள்ள வேண்டும்.

5. **தங்கை** - எனக்கு அக்காளும் **தங்கையு**ம் உண்டு.
தம் கை - **தம் கை**யே தமக்கு உதவி என்பது பழமொழி.

6. **வைகை** - மதுரையில் **வைகை** ஆற்றில் கள்ளழகர் இறங்குவார்.
வை கை - பிறர் உண்ணும் உணவில் **கை வை**க்காதே.

7. **நஞ்சிருக்கும்** - வாழைப்பழம் நீண்ட நாட்களானால் **நஞ்சிருக்கும்**.
நஞ்சு இருக்கும் - நச்சுப் பாம்பின் நாவில் கொடிய **நஞ்சு இருக்கும்**.

பின்வரும் பத்தியைப் படித்து, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

**ஜி.யு. போப்**

செந்தமிழ்ச் செம்மல் டாக்டர் ஜி.யு. போப், 1839ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.



ஜி.யு. போப்
(1820–1908)

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் செய்த பெரியார் ஜி.யு. போப் ஆவார்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக:**

**1. இலக்கணக் குறிப்பு தருக. அ) பிறந்தார் ஆ) அருளிய**

அ) பிறந்தார் - வினையாலணையும் பெயர்.
ஆ) அருளிய - வியங்கோள் வினைமுற்று

**2. திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப் - விடைக்கேற்ற வினாவை எழுதுக.**

ஜி.யு.போப்.திருக்குறளை எதற்காக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்?



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**3. பதிப்பித்தார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**பதிப்பி + த் +த் + ஆர்**

**பதிப்பி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.**

**4. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத்துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

5. பொருத்துக .

அ) தொல்காப்பியம் - iv) இலக்கண நூல்

ஆ) திருக்குறள் - iii) அறநூல்

இ) புறநானூறு - i) சங்க நூல்

ஈ) திருவாசகம் - ii) பக்தி நூல்

செய்திக்குக் கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுக.

| | |
|---|---|
| The Chinese have no religious science. The practices of their religion (Buddhism) are derived from India. They believe that it is the Indians who brought idols to them and that the latter were their religious educators. In China and in India they believe in metempsychosis. The Chinese and Indians draw from the same religious principles different conclusions. In India medicine and philosophy are practiced. The Chinese practice medicine equally. Their chief treatment is cauterization. The Chinese practice astronomy but the Indians practice this science still more.<br>Written by Abu Zayd Al Sirafi, traveler, 10th century.<br>– Foreign notices of South India by K.A. Neelakanda sastri | சீனாவுக்கென்று தனியாக மதங்கள் இல்லை. இந்தியாவின் மதத்தை (பவுத்தம்) அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். சிலைகளைத் தங்களுக்கு அறிமுகம் செய்தோர் இந்தியர்கள் என்று நம்பும் சீனர்கள், இந்தியர்களே தங்களின் மத ஆசிரியர்கள் என்றும் கருதுகின்றனர். இந்தியாவிலும் சீனாவிலும் மரணத்துக்குப் பின்னான மறுபிறப்பை நம்புகின்றனர். ஒரே மத கோட்பாடு இருந்தாலும், சீனர்களும் இந்தியர்களும் வெவ்வேறு தீர்மானங்களுக்கு வருகிறார்கள்.<br>இந்தியாவில் மருத்துவமும், தத்துவமும் நடைமுறையில் உள்ளன. அவர்களுக்குச் சமமாகச் சீனர்களும் மருத்துவத்தை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். 'தீய்த்தல்' அவர்களது பிரதான சிகிச்சை முறை. சீனர்கள் வானியல் சாஸ்திரப் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இந்த அறிவியலை இந்தியர்கள் இன்னும் அதிகமாய்ப் பயன்படுத்துகின்றனர். |

Religion - மதம் | Medicine - மருத்துவம்

Philosophy - தத்துவம் | Science - அறிவியல்

Idols - சிலை | Believe - நம்பிக்கை

Principles - கோட்பாடு | Conclusions - தீர்மானங்கள்



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள உருவகங்களையும் உவமைகளையும் பட்டியலிடுக. உருவகங்களை உவமைகளாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்று எழுதுக.**

விழிச்சுடர் வாசலில் உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணவலையில் மின்னல்களைப் போன்ற சொற்கள் தோன்றி மறைந்தன. அடுக்கிவைக்கப்படாத புத்தகங்களைப்போலக் குழம்பிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த நினைத்தாள். நேரம் நத்தையைப்போல மெதுவாக நகர்ந்தது. அண்ணாந்து பார்த்தாள். நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் அம்மாவை நினைவூட்டியது. பூனைக்குட்டியைப்போல அம்மாவின் முந்தானைக்குள் சுருண்டுகொள்ள நினைத்தாள். பூனைக்குட்டியை மடியில் வைத்துக்கொண்டதைப்போல அம்மாவின் கதகதப்பை உணர்ந்தாள். பசிக்கயிற்றால் சுண்டிவிடப்பட்டவள், பூட்டியிருந்த வீட்டுக்கதவின்மேல் சாய்ந்தபடி அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

**உருவகங்கள் உவமைகள்**

1. விழிச்சுடர் - சுடர்விழி
2. நீலப்பட்டு - பட்டு நீலம்
3. பசிக்கயிறு - கயிற்றுப்பசி
4. எண்ணவலை - வலை எண்ணம்.

| **உவமைகள்** | **அதன் வகைகள்** |
|---|---|
| 1. மின்னலைப் போன்ற சொற்கள் | - வினை உவமை |
| 2. அடுக்கிவைக்கப்படாத புத்தகங்களைப் போல | - வடிவ உவமை |
| 3. நேரம் நத்தையைப் போல | - வினை உவமை |
| 4. நீலப்பட்டு உடுத்தியதைப் போல | - நிற உவமை |
| 5. பூனைக்குட்டியைப் போல | - வினை உவமை |
| 6. மடியில் வைத்துக் கொண்டதைப் போல | - பயன் உவமை |

**கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கல்வி என்றால் என்ன? அது நூல்களைப் படிப்பதா? அல்லது அது பலவகையானதைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின்மூலம் மனத்தின் ஆற்றலும் அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சி. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று. கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவும் வளரும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைத் திறப்பதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண் செய்து விடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவற்றையும் செய்ய மாட்டான்.

மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. எத்துறையிலும் வெற்றி பெறுவது, இதைப் பொறுத்துத்தான் அமைகிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறச் செய்வது மன ஒருமைப்பாடுதான். மேலும், உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமையை நாம் பெற வேண்டும். இவ்வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும். (கல்வி – சுவாமி விவேகானந்தர்)



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**திருந்தாப் படிவம் :**

மனதின் ஆற்றலும், அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுப் பயன் தரும் வகையில் அமைவது கல்வியால்தான். கல்வி மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சியாகும். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைத் திறப்பதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண் செய்து விடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவற்றையும் செய்ய மாட்டான்.

மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வேறுபாடு மனதை ஒருமுகப்படுத்துதல். இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சிபெறச் செய்வது மன ஒருமைப்பாடு. உலகின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமை, மனவலிமை ஆகும். அதுவே கல்விக்கு அடிப்படை என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

**திருந்திய படிவம் :**

ஒருமுகப்படுத்தும் பயிற்சி - கல்வி

கல்வியே மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சியாகும். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை. இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைத் திறப்பதற்கு மனதை ஒருமுகப்படுத்துவதே சிறந்த வழி. மனிதன் தன் சக்தியை நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண் செய்துவிடுகிறான். இதனாலேயே தவறு செய்கிறான். பண்புடையவன் தவறு செய்ய மாட்டேன். மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வேறுபாடு ஒருமுகப்படுத்துதல். இசை, ஓவியம், சிற்பம் என எல்லாக் கலைகளிலும் தேர்ச்சிபெற உதவுவது ஒருமுகப்படுத்துவதே. கல்விக்கு அடிப்படையும் அதுவே என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

கொடுக்கப்பட்ட வார்த்தைகள் : 140
சுருக்கப்பட்ட வார்த்தைகள் : 50
தலைப்பு : கல்வியே ஒருமுகப்படுத்தும்


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இலக்கிய நயம் பாராட்டல்**




பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்:
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்
- பாரதியார்.

**மையக்கருத்து :**

பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகிறார் பாரதியார்.

**திரண்ட கருத்து :**

இறைவன் பெண்களுக்கு அறிவைப் படைத்தான். சில மூடர்கள் பெண்கல்வி தேவையற்றது என்று கூறி பெண்கள் பெறவேண்டிய அறிவைத் தடுத்தனர். ஆண் பெண் இருவரும் இருகண்கள் போன்றவர்கள். இரண்டில் ஒன்று போயினும் பார்வை குறைவே. பெண்கள் கல்வி கற்று அறிவு பெற்றால், உலகில் பேதம் இல்லாமல் போய்விடும்.

**எதுகை :**

அடி அல்லது சீர் தோறும் **இரண்டாமெழுத்து** ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

பாடலிலுள்ள எதுகைச் சொற்கள் : **பெண், மண், கண், பெண்**

**மோனை :**

அடி அல்லது சீர் தோறும் **முதலெழுத்து** ஒன்றி வரத் தொடுப்பது மோனை ஆகும்.

பாடலிலுள்ள மோனைச் சொற்கள் : **பெண் - பேணி, மண்ணுக்கு - மாதர்,**

**கண்கள் - காட்சி, பெண்கள் - பேதமை.**

**முரண் :**

பாடலில் எதிர்ச்சொற்கள் அமையத் தொடுப்பது முரண் ஆகும்.

பாடலில் **ஞானம் x பேதைமை** என்பது முரணாக வந்துள்ளது.

**அணி :**

பாடலில் உள்ளதை உள்ளவாறே கூறியிருப்பதால் இயல்பு நவிற்சி அணி இடம்பெற்றுள்ளது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## இலக்கணம் - படைப்பாற்றல் உத்திகள்

**1. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

வினை (தொழில்), பயன், வடிவம் (மெய்), உரு (நிறம்) ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

**2. உவமைத் தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமைகளைக் கண்டறிக.**

செம்புலப்பெயல்நீரார் - செம்புலப் பெயல் நீர்.
தேய்புரி பழங்கயிற்றினார் - தேய்புரி பழங்கயிறு.
அணிலாடு முன்றிலார் - அணிலாடு முன்றில்.

**3. ஒட்டுப் போடாத ஆகாயம் போல - இந்த உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது.** அ)உவமை.

**4. கீழ்க்கண்டவற்றுள் "இறைச்சி" பற்றிய கூற்றைத் தேர்க.**

ஈ) உரிப்பொருளோடு நேரடித் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.

**5. உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுகளுடன் ஆய்க.**

> கவிஞன் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவதை, **உள்ளுறை உவமை** என்பர்.

***சான்று*** : கரடி ஈசல் நிறைந்த புற்றில் கையை விடுகிறது. அது புற்றினுள் இருக்கும் பாம்பை அறியவில்லை. பாம்பின் மீது கரடியின் நகம் பட்டு அது துடிக்கிறது. பாம்பின் துயரத்தை கரடி அறியாது. அதுபோல இரவில் தலைவன் தன்னை சந்திக்க வரும்போது ஏற்படும் துன்பங்களை எண்ணி, தலைவி துன்பப்படுகிறாள். அவளின் துன்பத்தை தலைவன் அறியமாட்டான்.

> உரிப்பொருளோடு நேரடித் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே **இறைச்சி.**

***சான்று*** : தலைவி புன்னை மரத்தடியில் தலைவனைச் சந்திக்கிறாள். தலைவனை திருமணம் செய்துகொள்ள வேண்டுகிறாள். அதற்காக புன்னை மரம் தன் சகோதரி எனவும், சகோதரியின் அருகே தலைவனை சந்திப்பது முறையாகாது என்றும் கூறுகிறாள்.

### இலக்கணக் குறிப்பு :

1. வெண்சுவை - பண்புத்தொகை.
2. தீம்பால் - பண்புத்தொகை
3. விரிகதிர் - வினைத்தொகை


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*4. ஒழுகுநீர் - வினைத்தொகை*
*5. பொற்கலம் - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.*
*6. பொற்சிலம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை*
*7. கொண்ட - பெயரெச்சம்.*
*8. அறிவும் ஒழுக்கமும் - எண்ணும்மை*
*9. பந்தல் - பந்தல் என்பதன் ஈற்றுப்போலி*
*10. அறிதல் - தொழிற்பெயர்*
*11. போற்றல் - தொழிற்பெயர்*
*12. நினைத்தல் - தொழிற்பெயர்*
*13. கேட்டல் - தொழிற்பெயர்*
*14. பயிறல் - தொழிற்பெயர்*
*15. நனிஇகக்கும் - உரிச்சொற்றொடர்*

**பகுபத உறுப்பிலக்கணம் :**

1. **மெலிந்து** = மெலி + த்(ந்) + த் + உ
மெலி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

2. **மறுத்து** = மறு + த் + த் + உ
மறு - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

3. **விடுத்தல்** = விடு + த் + தல்
விடு - பகுதி, த் - சந்தி, தல் - தொழிற்பெயர் விகுதி.

4. **அறிந்து** = அறி + த்(ந்) + த் + உ
அறி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம்,
த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

***புணர்ச்சி விதி :***

1. **சிறுகோல்** = சிறுமை + கோல்
சிறுகோல் - ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது.

2. **பொற்சிலம்பு** = பொன் + சிலம்பு
பொற்சிலம்பு - ணன வல்லினம் வர ட ற வும் விதிப்படி ன் - ற் ஆக மாறியது.

3. **இழுக்கின்றி** = இழுக்கு + இன்றி
இழுக்க் + இன்றி - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் விதிப்படி உகரம் கெட்டது.
இழுக்கின்றி - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி க் + இ = கி ஆயிற்று.


*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. **முறையறிந்து** = முறை + அறிந்து

முறை + ய் + அறிந்து - இஈஐ வழி யவ்வும் விதிப்படி ய் மிகுந்தது.

முறையறிந்து உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ய் + அ = ய ஆயிற்று.

***கலைச்சொல்***

| | |
|---|---|
| *கல்விக்குழு* | - Education Committee |
| *உள்கட்டமைப்பு* | - Infrastructure |
| *செம்மொழி* | - Classical Language |
| *மூதாதையர்* | - Ancestor |
| *மதிப்புக்கல்வி* | - Value Education |
| *மனஆற்றல்* | - Mental Abilities |

***கூடுதல் வினாக்கள் :***

*1. திண்ணைப் பள்ளியின் வேறு பெயர் என்ன? தெற்றிப் பள்ளிகள்.*

*2. தமிழகத்திற்கு வந்த சீனப் பயணி யார்? யுவான் சுவாங்*

*3. கல்லுதல் என்றால் கற்பவர் மனதில் ஆழப்புதைந்துள்ள திறன்களை வெளிக்கொண்டு வருவதாகும்.*

*4. தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்வி முறையில் பயின்றவர் உ.வே. சாமிநாதையர்.*

*5. அறப்பள்ளிகள் (Missionary schools) நிறுவியோர் டச்சுக்காரர்கள்.*

*6. அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்விகான அரசியலமைப்புச் சட்டம் 45.*

*7. வளமையும் வறுமையும் வாழ்க்கையென்னும் நாணயத்தின் இருபக்கங்கள்.*

*8. நல்ல திணை எனும் அடைமொழியைப் பெற்ற நூல் நற்றிணை.*

*9. 9 அடிச் சிற்றெல்லையும் 12 அடிப் பேரெல்லையும் கொண்ட நூல் நற்றிணை.*

*10. நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களில் காலத்தால் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம்.*

*11. நேர மேலாண்மையே பாதி வெற்றி என்று கூறியவர் பாரதியார்.*

*12. கருத்துப்படங்கள் மட்டுமே கொண்ட நூல் சித்திராவளி.*

*13. அச்சு இயந்திரத்தை வடிவமைத்தவர் ஜான் கூட்டன்பர்க்.*

*14. துணையாய் வருவது தூயநற்கல்வி என்னும் அடிகள் இடம்பெற்ற நூல்.*

***அ) திருமந்திரம்*** *ஆ) நாலடியார்* *இ) ஔவையார்* *ஈ) வளையாபதி.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

15. பட்டினிக்குரத்தி பற்றி எழுதுக

**பட்டினிக்குறத்தி** எனும் சமணப் பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளி ஒன்றை நிறுவினார்.

**சமணப்** பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாகப் பணியாற்றினர்.

**16. ஓதற்பிரிவு என்பதன் பொருள் என்ன?**

கல்வி கற்பதற்காக தலைவன், தலைவியை விட்டுப் பிரிந்து செல்வதை ஓதற்பிரிவு என்பர். ஓதற்பிரிவுக்குரிய காலம் மூன்று ஆண்டுகள்.

17. பாரதி சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்ட இதழ்.....

அ) விஜயா **ஆ) இந்தியா** இ) சுதேசமித்திரன் ஈ) கர்மயோகி

**பொது வினா :**

**ஒலி மரபுச் சொற்கள் :**

| | | |
|---|---|---|
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் | எருது எக்காளமிடும் |
| காகம் கரையும் | குதிரை கனைக்கும் | கிளி பேசும்/கொஞ்சும் |
| குரங்கு அலப்பும் | குயில் கூவும் | சிங்கம் முழங்கும் |
| கூகை குழறும் | நரி ஊளையிடும் | கோழி கொக்கரிக்கும் |
| புலி உறுமும் | மயில் அகவும் | வண்டு முரலும் |
| நாய் குரைக்கும் | யானை பிளிறும் | |

**இளமைப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| அணிற் பிள்ளை | குருவிக்குஞ்சு | பசுங்கன்று |
| யானைக்கன்று | கழுதைக்குட்டி | சிங்கக்குருளை |
| எலிக்குட்டி | கோழிக்குஞ்சு | மான்கன்று |
| நாய்க்குட்டி | மான்கன்று | குதிரைக்குட்டி |
| பூனைக்குட்டி | எருமைக்கன்று | |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 5



**உரைநடை : ஆனந்தரங்கர் நாட்குறிப்பு**
**செய்யுள் : சீறாப்புராணம் - உமறுப்புலவர்**
**அகநானூறு - வீரை வெளியன் தித்தனார்**
**துணைப்பாடம் : பிம்பம் - பிரபஞ்சன்**
**இலக்கணம் : பா இயற்றப் பழகலாம்**
**அறவுரைப்பகுதி : திருக்குறள்**

**பலவுள் தெரிக :**

***1. பொருந்தாததைத் தேர்க***

*அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.*

*ஆ) ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஆண்டு, நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்.*

*இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.*

*ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன.*

***iv) ஆ, ஈ***

*2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?*

***ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை.***

*3. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு*

***அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி.***

*4. சரியானதைத் தேர்ந்தெடுக்க*

*அ) வரை - மலை,* *ஆ) வதுவை - திருமணம்*

*இ) வாரணம் - யானை* *ஈ) புடவி - கடல்*

***i) அ, ஆ, இ சரி, ஈ தவறு.***

*5. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது.*

***ஈ) மா முன் நேர்.***

**குறுவினா :**

***1. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.***

❖ *மதீனா நகரின் மேன்மாடங்கள் மேருமலை போல உயர்ந்து காணப்படுகிறது.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



❖ பெரிய மாளிகைகள் சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தன.
❖ அங்காடித் தெருக்களில் ஆரவாரம் மிகுந்து கடலொலி போல காணப்பட்டது.
❖ தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டுப் பொன்நகர் போலப் பொலிந்தது.
❖ மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என அழைக்கப்படுகிறது.

**2. ஆனந்தரங்கரின் வருணனைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.**

8.6.1746 அன்று புதுவைக்கு ஒன்பது கப்பல்கள் வந்தன. இதனை ஆனந்தரங்கர்,

கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தது போலவும், மரணமுற்ற உறவினர் மீண்டும் கிடைத்தது போலவும், நீண்டகாலம் தவமிருந்து புத்திர பாக்கியம் கிட்டினாற் போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும், மக்கள் சந்தோஷித்தார்கள் என்று வருணித்துள்ளார்.

**3. நெருங்கின - உறுப்பிலக்கணம் தருக.**

✍ நெருங்கின - நெருங்கு + இன் + அ

நெருங்கு - பகுதி, இன் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

**4. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்**
**தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" -**
**- இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?**

❖ சீறாப்புராணத்தில் இடம்பெற்ற இப்பாடலில்,
காய்த்தது - வெற்றியைத் தரும் ஊக்கம்.
பழுத்தது - தீன் எனும் செல்வம்.

**5. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

தேமா, புளிமா - மாச்சீர்கள்
கருவிளம், கூவிளம் - விளச்சீர்கள்

**சிறுவினா :**

**1. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" - யாது?**

❖ மதீனா நகரம் ஒரு பழைமையான நகரம்.
❖ கலைஞர்களும், மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தை உடையது.
❖ கேட்போருக்கு அவர் கேட்கும் பொருட்களை மறுக்காமல் வாரி வழங்கும் வளமான நகரமாகும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. “மறுவிலாத அரசென இருந்த மாநகர்” - உவமையைப் பொருளுடன் விளக்குக.**


- ❖ மறுவில்லாத - குற்றமில்லாத என்று பொருள். பகை, வறுமை, நோய் ஆகிய குற்றங்கள் நீங்கிய நகரம் மதீனா.
- ❖ சிறப்பான ஆட்சி நடத்திப் பெரும் புகழ் பெற்ற அரசரைப் போல பொலிவுடன் இருந்தது.
- ❖ தானம், தவம், ஒழுக்கம், ஈகை, மானம் சிறந்து விளங்கின.

**3. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.**

- ▪ ஆனந்தரங்கர் தனது நாட்குறிப்பில், பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்ற செய்தி,
- ▪ பிரெஞ்சு கப்பல் தளபதி லெபூர் தொனே சென்னையைக் கைப்பற்றிய செய்தி,
- ▪ தேவனாம்பட்டினத்தைக் கைப்பற்ற பிரெஞ்சு அரசு நடத்திய போர்,
- ▪ இராபர்ட் கிளைவின் படையெடுப்பு ஆகியவற்றை நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.
- ▪ 1745ஆம் ஆண்டு 12ஆம் நாள் வியாழக்கிழமையன்று, மாலை பெருங்காற்று புதுச்சேரியைச் சூரையாடியது. ஊரிலுள்ள மரங்கள் அனைத்தும் கீழே விழுந்தன.
- ▪ வீடுகள் வெள்ளத்திலே மூழ்கிப் போய், மனிதர்கள், மிருகங்கள் இறந்து எங்கும் பிணநாற்றமாக இருந்தது. இது போன்ற வரலாற்றுச் செய்திகளைப் பதிவு செய்து வரலாற்று ஆசிரியராகத் திகழ்கிறார்.

**4. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப்பொருள் யாது?**

- ➢ மேகத்திடம் கூறுவது போல தலைவியை சந்திக்கும் இடத்தை தலைவனுக்குத் தோழி கூறுகிறாள்.
- ➢ வேங்கை மலர் அணிந்து தலைவியுடன் தோழி தினைப்புனம் காக்கச் செல்கிறாள்.
- ➢ தட்டை, தழலை ஆகியவற்றின் மூலம் ஒலி எழுப்பி, பறவைகளை விரட்டுவாள்.
- ➢ கடலில் நீரை முகந்து, முரசு போல இடித்து, போர் வீரரின் வாள் போல மின்னும் மேகமே தலைவி தினைப்புனம் காக்கும் பகுதியிலும் மழை பொழிவாயா என்று கேட்கிறாள் தோழி.



- ➢ இப்பாடலின்மூலம் தலைவி தினைப்புனம் காக்கும் இடத்திற்கு வந்து அவளை சந்திக்குமாறு தலைவனுக்கு இறைச்சியாக உணர்த்துகிறாள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**5. ஆசிரியப்பாவின் பொது இலக்கணங்களுள் எவையேனும் நான்கினைக் கூறுக.**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் :**

1. அகவலோசை உடையது.
2. எல்லா அடிகளும் நான்கு சீர்களை(அளவடி)ப் பெற்று வரும்.
3. இயற்சீர் மிகுந்தும், பிற சீர் கலந்தும் வரும்.
4. ஆசிரியச்சீர் மிகுந்தும், பிற தளைகள் கலந்தும் வரும்.
5. இறுதி அடியின் இறுதி எழுத்து ஏ எனும் எழுத்தில் முடிவது சிறப்பு.
6. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடுவோன் எண்ணத்திற்கேற்ப பேரெல்லையும் அமையும்.

(எவையேனும் நான்கு எழுதினால் போதுமானது)

**நெடுவினா :**

**1. தாம் வாழ்ந்த காலகட்டத்தில் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.**

**முன்னுரை :**

நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவுசெய்யும் ஏடாகும். இதனை ஆங்கிலத்தில் டைரி என்பர். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்தரங்கருடைய 25 ஆண்டுகால நாட்குறிப்பு, தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துகிறது. அதைப் பற்றி விரிவாகக் காண்போம்.

இந்தியாவின் பெப்பிசு :

ஆனந்தரங்கர் மொழிபெயர்ப்பாளராகவும், தலைமைத் துவிபாஷியாகவும் பணியாற்றியுள்ளார். இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்பட்டார்.

**புதுச்சேரிக்கு கப்பல்கள் வருகை :**

கப்பல் வணிகம் தடைபட்டபோது புதுவை மக்கள் பொருளாதாரத்தை இழந்து தவித்தனர். மீண்டும் கப்பல்கள் வந்தபோது இழந்த செல்வம் கிடைத்தது போலவும், நீண்டகாலம் தவமிருந்து புத்திர பாக்கியம் கிட்டியது போலவும், தேவாமிருதத்தை சுவைத்தது போலவும் மகிழ்ந்தனர். இது ஆனந்தரங்கரின் வருணனைத்திறனுக்கு ஓர் சான்றாகும்.

**அரசியல் செய்திகள் :**

- ஆனந்தரங்கர் தனது நாட்குறிப்பில், பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்ற செய்தி,
- பிரெஞ்சு கப்பல் தளபதி லெபூர் தொனே சென்னையைக் கைப்பற்றிய செய்தி,
- தேவனாம்பட்டினத்தைக் கைப்பற்ற பிரெஞ்சு அரசு நடத்திய போர்,
- இராபர்ட் கிளைவின் படையெடுப்பு ஆகியவற்றை நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**ஆனந்தரங்கரின் பதிவுகள் :**

1745ஆம் ஆண்டு 12ஆம் நாள் வியாழக்கிழமையன்று, மாலை பெருங்காற்று புதுச்சேரியைச் சூரையாடியது. ஊரிலுள்ள மரங்கள் அனைத்தும் கீழே விழுந்தன. வீடுகள் வெள்ளத்திலே மூழ்கிப் போய், மனிதர்கள், மிருகங்கள் இறந்து எங்கும் பிணநாற்றமாக இருந்தது. இது போன்ற செய்திகளையும் ஆனந்தரங்கர் தமது நாட்குறிப்பிலே பதிவு செய்திருந்தார்.

**இறுதிக்கால நாட்குறிப்பு :**

ஆனந்தரங்கர் தம் இறுதிக்கால நாட்குறிப்பில், ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகை, புதுச்சேரியின் வீழ்ச்சி போன்ற செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை :**

ஆனந்தரங்கர் 25 ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதியுள்ளார். அவை 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவரது நாட்குறிப்பு மூலம், புதுவையின் அரசியல், வணிகம், முற்றுகை, படையெடுப்பு, பண்பாடு, சமயம், நீதி, நம்பிக்கைகள் ஆகிய செய்திகளை நம்முன்னே படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

**2. மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**மதீனா நகரம் ஒரு வளமான நகரம் :**

- ❖ மதீனா நகரின் மேன்மாடங்கள் மேருமலை போல உயர்ந்து காணப்படுகிறது.
- ❖ பெரிய மாளிகைகள் சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தது.
- ❖ அங்காடித் தெருக்களில் ஆரவாரம் மிகுந்து கடலொலி போல காணப்பட்டது.
- ❖ தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டுப் பொன்நகர் போலப் பொலிந்தது.
- ❖ மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என அழைக்கப்படுகிறது.
- ❖ மதீனா நகரம் ஒரு பழைமையான நகரம்.
- ❖ கலைஞர்களும், மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தை உடையது.
- ❖ கேட்போருக்கு அவர் கேட்கும் பொருட்களை மறுக்காமல் வாரி வழங்கும் வளமான நகரமாகும்.
- ❖ மறுவில்லாத - குற்றமில்லாத என்று பொருள். பகை, வறுமை, நோய் ஆகிய குற்றங்கள் நீங்கிய நகரம் மதீனா.
- ❖ சிறப்பான ஆட்சி நடத்திப் பெரும் புகழ் பெற்ற அரசரைப் போல பொலிவுடன் இருந்தது.
- ❖ தானம், தவம், ஒழுக்கம், ஈகை, மானம் சிறந்து விளங்கின.
- ❖ வெற்றியைத் தரும் ஊக்கம் காய்த்திருந்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

❖ தீன் எனும் செல்வம் பழுத்திருந்தது.

**3. பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விளக்குக.**



**பிம்பம் - பிரபஞ்சன்**

முன்னுரை :

நம் ஒவ்வொருவருக்கும் விருப்பங்கள், தனித்தன்மைகள் உள்ளன. இருப்பினும் பிறரோடு உறவு கொள்ளும்போது, அவர்களுக்கேற்றவாறு நம் உண்மை முகத்தை மறைத்து, மாற்றிக்கொள்கிறோம். நம் உண்மைமுகத்தை அடியோடு மறந்து விடுகிறோம். இதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சுத்தம் :**

பிறர் நம்மைக் கவனிக்காத வரை நம் வீட்டை துப்புரவின்றி, குப்பைகளை ஆங்காங்கே போட்டுவிடுகிறோம். வீட்டை அழகாக வைத்திருப்பது இல்லை. யாராவது வருகிறார்கள் என்றால் மட்டுமே சுத்தம் சுகாதாரம் எல்லாம் நினைவுக்கு வரும். நம் மனசாட்சி உறுத்தும்போதும் அவற்றை துப்புரவு செய்வது இல்லை.

**மனசாட்சிக்கு கோபம் :**

நம் செயல்களைப் பார்த்து நம் மனசாட்சிக்கே கோபம் வருமளவிற்கு நம் செயல்கள் இருக்கின்றன.

தூக்கி எறியப்படாத அப்பாவின் சட்டை, பெண் குழந்தை இல்லாததால் அம்மா சிறு வயதில் அணிவித்து மகிழ்ந்த அணிந்த பெண் குழந்தைக்கான உடை மற்றும் ஆபரணங்கள்.

இவற்றைக் காண்கையில் அம்மாவிற்காக ஒரு முகம். அப்பாவிடம் அடங்கி ஒடுங்கி அச்சத்தை வெளிப்படுத்தும் முகம்.

நம் பலமுகங்கள் :

✓ மனைவியிடம் கொஞ்சம் ஆணவம், அதிகாரம், பாசம் இவற்றை வெளிப்படுத்தும் முகம்.
✓ சிறியவர்களிடம் அறிவுரை கூறும் முகம்.
✓ குழந்தைகளிடம் வழிகாட்டியாய், அறிவு புகட்டும் ஆசானாய், நண்பனாய் எத்தனை முகங்கள்.
✓ வீட்டில் மட்டும் இத்தனை முகங்கள்.
✓ அலுவலகத்தில் மேலதிகாரியிடம் பயந்து அடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் முகம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


உலகமே நாடகமேடை :

- ✓ உலகமே ஒரு நாடக மேடை, நாமெல்லாம் அதில் நடிகர்கள் என்பதற்கிணங்க ஒவ்வொருக்காகவும் நம் முகத்தை மாற்றிக் கொண்டு இறுதியில் நம் உண்மை முகமே நமக்குத் தெரிவதில்லை.
- ✓ நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள்தான். ஆனால் நமக்கோ ஆயிரம் முகங்கள்.

நிறைவுரை :

நமக்கு ஆயிரம் முகங்கள் இருக்கலாம். ஆனால் பிறருக்காக நம் முகங்களை மாற்றிக் கொள்ளாமல், மனசாட்சியின்படி செயல்பட வேண்டும் என்பதே இக்கதையின் கருத்து.

### இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர் (1882 – 1954)



டி.கே. சி. (1882 – 1954)

"தமிழில் எல்லாம் உண்டு; தமிழின் கவிச் சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை; தமிழால் அறிவியல் மட்டுமன்று; அனைத்து இயல்களையும் கற்கமுடியும்" எனச் சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை இரசிகமணி டி.கே. சிதம்பரநாதர். இவர், தமது இலக்கிய இரசிகத் தன்மையால் தமிழுக்கும் தமிழருக்கும் புத்துணர்வு ஊட்டியவர். டி. கே. சி. யின் வீட்டுக் கூடத்தில் வட்டவடிவமான தொட்டிக் கட்டில், ஞாயிறுதோறும் மாலை ஐந்து மணிக்குக் கூடிய கூட்டம், இலக்கியத்தைப் பற்றிப்பேசியது. அவ்வமைப்பு 'வட்டத் தொட்டி' என்றே பெயர்பெற்றது. டி. கே. சி. இலக்கியங்களின் நயங்களைச் சொல்லச் சொல்லக் கூட்டத்திலுள்ள அனைவரும் தங்களை மறந்து இலக்கியத்தில் திளைப்பர். தமிழின் இனிமை என்பது மட்டும் அவர்கள் உள்ளங்களில் நிறைந்திருக்கும். வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். தமிழ்க்கலைகள், தமிழ்இசை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் சுவையையும் மேன்மையையும் தனித்தன்மையையும் எடுத்துச் சொன்னார். கடிதங்களிலும் அவற்றையே வியந்து எழுதினார். அவர்தம் கடிதங்கள் இலக்கியத் தரம் கொண்டு

புதிய இலக்கிய வகையாகவே கருதப்பட்டன. இதய ஒலி, கம்பர் யார்? முதலான நூல்களும் முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் ஆகியவற்றுக்கு எழுதிய உரையும் அவர்தம் இலக்கிய நுகர்வுக்கடலின் சில அலைகள் எனலாம். சென்னை மாநில மேலவையின் உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் ஆணையராகவும் திகழ்ந்த டி. கே. சி. ஏற்றிய இலக்கியஒளி தமிழ் அழகியலை வெளிச்சப்படுத்தியது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. அன்று, அல்ல என்பனவற்றுக்கான பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

**அன்று** - எழுவாய் ஒருமைக்குப் பயன்படுத்துவது

தமிழால் அறிவியல் மட்டுமன்று: அனைத்துத் துறைகளையும் கற்க முடியும்.

**அல்ல** - எழுவாய் பன்மைக்குப் பயன்படுத்துவது.

துரித உணவுகள் உடலுக்கு ஏற்றதல்ல.

**2. சொல்லச் சொல்ல, திளைப்பர் - இலக்கணக் குறிப்பு தருக.**

சொல்லச் சொல்ல - அடுக்குத்தொடர்.

திளைப்பர் - வினையாலணையும் பெயர்

**3. ரசிகர் - தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை - ஆங்கிலக் கலைச் சொல் தருக.**

ரசிகர் - சுவைஞர், விருப்பாளர், நேசர்

**4. வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். விடைக்கேற்ற வினா அமைக்க.**

வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிட எதனை டி.கே.சி. விரும்பினார்?

வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிட எதில் திளைப்பதை டி.கே.சி. விரும்பினார்?

**5. மேலவை, புத்துணர்வு - இச்சொற்களின் புணர்ச்சி வகையைக் கண்டறிக.**

**மேலவை** - இயல்புப் புணர்ச்சி,

மேல் + அவை. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**புத்துணர்வு** - - விகாரப் புணர்ச்சி

புதுமை + உணர்வு. புது + உணர்வு - ஈறுபோதல்,

புத் + உணர்வு - உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும்.

புத்த் + உணர்வு - தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

புத்துணர்வு - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

## இலக்கணம் - பா இயற்றப் பழகலாம்

**1. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

ஆசிரிப்பாவானது,

அ. நேரிசை ஆசிரியப்பா, ஆ. இணைகுறள் ஆசிரியப்பா,
இ. நிலைமண்டில ஆசிரியப்பா, ஈ.அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. ஆசிரியப்பாவிற்குரிய சீரும், தளையும் யாவை?**

**ஆசிரியப்பாவிற்குரிய சீர்கள் :**

இயற்சீர் (ஆசிரிய உரிச்சீர்), காய்ச்சீர்.

**ஆசிரியப்பாவிற்குரிய தளைகள்:**

மா முன் நேர் - நேரொன்றாசிரியத்தளை,
விளம் முன் நிரை - நிரையொன்றாசிரியத்தளை

**3. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் வகைகளையும் அவற்றை இயற்றுவதற்கான விதிகளையும் கூறுக.**

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் வகைகள் :**

அ). ஓரடியுள் அரை அடிக்கு ஒரு விளச்சீரும் இருமாச்சீர் வரும்,
ஆ). ஓரடியுள் அரை அடிக்கு இரு மாச்சீரும் ஒரு காய்ச்சீரும் வரும்,
இ) ஓரடியுள் நான்கு காய்ச்சீரும், இரு மாச்சீர் வருவனவும் உண்டு.

**அறுசீர்க் கழிநெடிலடி இயற்றுவதற்கான விதிகள் :**

- அறுசீர்க் கழிநெடிலடிகள் நான்கு கொண்டதாக அமைந்து, நான்கடியும் அளவொத்து வரவேண்டும்.
- முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமைத்தும், முதற்சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமைத்தும் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எழுதலாம்.

**4. பொருத்துக.**

அ) நேரிசை ஆசிரியப்பா - iii) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்
ஆ) இணைகுறள் ஆசிரியப்பா - i) முதலடியும் இறுதியடியும் அளவடியாய் வரும்.
இ) நிலைமண்டில ஆசிரியப்பா - iv)எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்.
ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - ii)அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும்.

முதற்பொருளும் உரிப்பொருளும்

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் | கூதிர், முன்பனி | யாமம் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | கார் | மாலை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | வைகறை | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | எற்பாடு | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த நிலமும் | இளவேனில் முதுவேனில் | நண்பகல் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## கருப்பொருள்

| நிலம் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | சேயோன் | மாயோன் | வேந்தன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி, | குறும்பொறை, நாடன், தோன்றல், கிழத்தி | ஊரன், மகிழ்நன், மனைவி | சேர்ப்பன், புலம்பன் | விடலை, மீளி, எயிற்றி |
| | குறவர், குறத்தியர், கானவர் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் | நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் |
| புள் | கிளி, மயில் | காட்டுக்கோழி | நாரை, மகன்றில், அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து, கழுகு |
| விலங்கு | சிங்கம், புலி, கரடி, யானை | மான், முயல் | எருமை, நீர்நாய் | சுறாமீன் | செந்நாய் |
| ஊர் | சிறுகுடி | பாடி | பேரூர், மூதூர் | பாக்கம், பட்டினம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | குறுஞ்சுனை கானாறு | ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர் | உவர்நீர்க் கேணி, சுவர் நீர்க்கேணி | நீரில்லாக் குழி, கிணறு |
| பூ | வேங்கை, காந்தள், குறிஞ்சி | முல்லை, பிடவம், தோன்றி | தாமரை, குவளை | நெய்தல், தாழை | குராஅம்பூ, மராம்பூ |
| மரம் | சந்தனம், தேக்கு, அகில், மூங்கில் | கொன்றை, காயா, குருந்தம் | மருதம், வஞ்சி, காஞ்சி | புன்னை, ஞாழல் | பாலை, உழிஞை, ஓமை |
| உணவு | மலைநெல், தினை, மூங்கிலரிசி | வரகு, சாமை, முதிரை | செந்நெல், வெண்ணெல் | உப்பும் மீனும் விற்றுப் பெற்ற பொருள் | வழியிற் பறித்த பொருள் |
| பறை | தொண்டகப் பறை | ஏறுகோட்பறை | நெல்லரிகிணை, மணமுழவு | மீன்கோட் பறை, நாவாய்ப் பம்பை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லையாழ் | மருதயாழ் | விளரியாழ் | பாலையாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | சாதாரிப் பண் | மருதப் பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | வெறியாடல், மலை நெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் | சாமை, வரகு விதைத்தல், களைகட்டல், அரிதல் | வயலில் களை கட்டல், நெல்லரிதல் | உப்பு உண்டாக்கல், விற்றல், மீன் பிடித்தல், உணக்கல் | போர் செய்தல் சூறையாடல் |

***குறைந்தபட்சம் ஒவ்வொரு திணைக்கும் ஆறு கருப்பொருள்கள் படித்துக்கொள்ள வேண்டும்**



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**குறிஞ்சித்திணை**

**(i) குறிஞ்சித்திணை**

முதற்பொருள் : மலையும் மலை சார்ந்த இடமும்.
பொழுது : சிறுபொழுது - யாமம்,
பெரும்பொழுது - கூதிர்காலம், முன்பனி
கருப்பொருள்:
தெய்வம் : முருகன்,
மக்கள் : குறவர், குறத்தியர், கானவர்
விலங்கு : புலி, கரடி, சிங்கம், யானை
ஊர் : சிறுகுடி
யாழ் : குறிஞ்சியாழ்
பண் : குறிஞ்சிப்பண்
உரிப்பொருள் : புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.
சான்று :
"பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொன்மூ" எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடல்.

---

**துறை :** இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.
**துறை விளக்கம் :** தலைவியை சந்திக்க வருகிறான் தலைவன். தோழி மேகத்திடம் கூறுவது போல தலைவனிடம் கூறுவது.
**விளக்கம் :**

நாளை தினம்புனம் காக்கும் இடத்திற்குச் செல்கிறாள் தலைவி. தலைவனை அவ்விடத்திற்கு வருமாறு தோழி மறைமுகமாக மேகத்துக்கு உரைப்பது போல உரைக்கிறாள்.

**சான்று :**
"பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொன்மூ" எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடல்.

**மொழிப்பயிற்சி :**

தமிழாக்கம் தருக.

The folk songs of tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country *(வேறு எந்த நாட்டுப்புறப் பாடல்களைக் காட்டிலும் தமிழ்நாட்டின் நாட்டுப்புறப் பாடல்கள் குறிப்பிடத்தக்க அழகைக் கொண்டுள்ளன).*

But what is special is there Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality *(ஆனால் தமிழ்ப் பாடல்களின் சிறப்பு என்னவென்றால் அவை*



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

*மண்ணின் மணத்தை மட்டும் கொண்டிருக்கவில்லை, இலக்கியம் மற்றும் கலையின் தரத்தையும் பாதுகாக்கின்றன).*

This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition *(ஏனெனில் நாட்டுப்புறப் பாடல்களின் மொழியைப் பேசும் தமிழர்கள் சிறந்த கடந்த கால வரலாற்றையும் ஒரு அற்புதமான இலக்கிய மரபையும் கொண்டிருந்தனர்).*

Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern *( நாட்டுப்புறப் பாடல்கள் மிகவும் பழமையானவை, வாழ்க்கையில் நிறைவைத் தருவன, அவை எப்போதும் புதியவை மற்றும் நவீனமானவை).*

These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again! *இந்தப் பாடல்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பிறந்தவை, அவை ஒவ்வொரு தலைமுறையிலும் பிறக்கின்றன, மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பன)*


***கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்து, பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க.***

கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அகங்கலந் தருளே.

**இலக்கிய நயம் பாராட்டல்**

செந்நெல்லும் கரும்பும் விளைந்தனவே - நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழுக - தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக.

பிரிவுகள் பேசியே பூசலிட்ட - பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்.






*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



தமிழன் திருநாள் பொங்கலென்றால் - அதில்
தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?
புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே - யாரும்
புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?

யாதும் ஊரெனச் சாற்றியதும் - மக்கள்
யாவரும் கேளிர் என்ற துவும்
மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் - இன்று
வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?
- தூரன்.

**திரண்ட கருத்து :**

1. நம் துன்பங்களும் பசியையும் போக்க நெல்லும், கரும்பும், தேன்சிந்தும் பூக்களும் விளைந்தன. நாட்டுமக்கள் அழகாய் சேர்ந்து நலம் பெறட்டும்.

2. பிரிவுகளைப் பற்றிப் பேசியே சண்டையிடும் மூடத்தனத்தை மாற்றி, அனைவரும் ஒன்றாக வாழ்வோம். நமக்குள் ஒற்றுமை ஓங்கட்டும்.

3. தமிழர் திருநாள் பொங்கலன்று தமிழனது பண்புகள் வெளிப்படும். புவி அனைத்தும் சேர்ந்து ஒரு வீடாக வாழ்வோம். அதில் எந்த வேற்றுமையும் இல்லை. தமிழால் ஒன்றுபடுவோம்.

4. எல்லாம் நம் ஊரே, மக்கள் அனைவரும் உறவினர் போன்ற கருத்துக்களை நமக்கு உரைத்தவர் நம் முன்னோர். இன்று நமக்குள் வேற்றுமை காண்பது முறையாகாது.

**மையக் கருத்து :**

தமிழர்கள் அனைவரும் வேற்றுமை துறந்து ஒற்றுமையாக வாழ வேண்டும்.

**எதுகை :**

அடி அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

பாடலிலுள்ள எதுகைச்சொற்கள் :

த**மி**ழன் - த**மி**ழன்

**மோனை :**

அடி அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

பாடலிலுள்ள மோனைச்சொற்கள் :

**பி**ரிவுகள் - **பே**தமை, **ஒ**ருதனி - **ஒ**ற்றுமை, **த**மிழன் - **த**மிழன்
**பு**வியெலாம் - **பு**றம்பிலை, **யா**தும் - **யா**வரும்




திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

www.Padasalai.Net
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இயைபு :**

அடிதோறும் ஈற்றுச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபு எனப்படும். பாடலில் விளைந்தனவே - விரிந்தனவே, போயொழிக - நலமுறுக, வாழ்ந்திடுவோம் - செய்திடுவோம், பொங்குமன்றோ - தமிழன்றோ, சாற்றியதுவும் - என்றதுவும் ஆகியன இயைபாக இடம்பெற்றுள்ளன.

**கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக :**




பொருள் இலக்கணம்

- பொருள் இலக்கணமானது அகப்பொருள் இலக்கணம், புறப்பொருள் இலக்கணம் என இருவகைப்படும்.
- முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் அகப்பொருள் இலக்கணமாகும்.
- முதற்பொருளானது, நிலமும் பொழுதும் ஆகும்.
- பொழுதானது, சிறுபொழுது, பெரும்பொழுது என இருவகைப்படும்.

**புதிர்களுக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி )

1. எலியும் நுழையும் : எழிலரசி கையும் நுழையும் **வளை.**
2. அடிக்கவும் செய்யலாம் : கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் **கம்பு.**
3. கண்ணிலும் எழுதலாம் : வெண்தாளிலும் எழுதலாம் **மை.**
4. அறிவின் பெயரும் அதுதான் : அம்புலியின் பெயரும் அதுதான் **மதி.**
5. பூவின் உறுப்பும் நானே : புன்னகையின் பிறப்பிடமும் நானே **இதழ்.**
6. வண்டியையும் இயக்கும் : பெரும் கப்பலையும் தாங்கும் **ஆழி.**

**கலைச்சொல் அறிவோம் :**

1. ஆவணம் - Document
2. உப்பங்கழி - Backwater
3. ஒப்பந்தம் - Agreement
4. படையெடுப்பு - Invasion
5. பண்பாடு - Culture
6. மாலுமி - Sailor



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இலக்கணக் குறிப்பு :**

1. மலிந்த - பெயரெச்சம்
2. மண்டிய - பெயரெச்சம்
3. பூத்த - பெயரெச்சம்
4. பொலிந்த - பெயரெச்சம்
5. இடன் - ஈற்றுப் போலி
6. திறன் - ஈற்றுப் போலி
7. பெரும்புகழ் - பண்புத்தொகை
8. தெண்டிரை - பண்புத்தொகை
9. அருஞ்சமம் - பண்புத்தொகை
10. வளைஇ - சொல்லிசை அளபெடை
11. அசைஇ - சொல்லிசை அளபெடை
12. எறிவாள் - வினைத் தொகை

**பகுபத உறுப்பிலக்கணம் :**

1. மலிந்த = மலி + த்(ந்) + த் + அ

மலி - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

2. நெருங்கின = நெருங்கு + (இ)ன் + அ

நெருங்கு - பகுதி, (இ)ன் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

**புணர்ச்சி விதி :**

1. அரும்பொருள் = அருமை + பொருள்

அரு + பொருள் - ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது.
அரும்பொருள் - இனமிகல் விதிப்படி ம் மிகுந்தது.


2. மனையென = மனை + என

மனை + ய் + என - இ ஈ ஐ வழி யவ்வும் என்ற விதிப்படி ய் மிகுந்தது.
மனையென - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ய் + எ = யெ ஆயிற்று.

***

திருக்குறள்

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்.
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

**ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.**

**3. மகிழ்ச்சியில் மைந்துறும் போழ்து ______________ நினை.**

இ) மறதியால் கெட்டவர்களை

**4. பொருள் கூறுக.**

அ) ஏமம் - பாதுகாப்பு
ஆ) மருந்துழைத்துச் செல்வான் - மருத்துவ உதவியாளர்.

**5. இலக்கணக்குறிப்புத் தருக.**

அ) கெடுக - வியங்கோள் வினைமுற்று
ஆ) குறிப்புணர்வார் - வினையாலணையும் பெயர்

**குறுவினா :**

**1. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?**

நோயாளி, மருத்துவர், மருந்து, மருத்துவ உதவியாளர் என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.

**2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?**

வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு.

**3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிட வேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைக்கொல்லும் காழ்த்த இடத்து.

**4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?**

முன்பு உண்ட உணவு செரித்ததை அறிந்து, உண்டால் மருந்து என்ற ஒன்று தேவைப்படாது. (பசியெடுத்த பின்பு உண்ண வேண்டும்).



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***சிறுவினா :***

***1. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.***

***அணி விளக்கம்*** : *ஒப்புமை உடைய ஒரு பொருளை வேறொரு பொருளோடு உருவகப்படுத்துவது உருவக அணியாகும்.*

***சான்று :***

*இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*
*பார்தாக்கப் பக்கு விடும்.*

***விளக்கம் :***

*பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் எனும் படகு, பிறர் கொடுக்காமை எனும் பாறை மோதினால் உடைந்துவிடும்.*

***பொருத்தம் :***

*பிறரை எதிர்பார்த்து வாழ்தல் என்பது பாதுகாப்பற்ற படகுக்கு உருவகம் செய்யப்பட்டுள்ளது. அதே போல கொடாமை எனும் குணம் பாறையாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திருக்குறள் உருவக அணியாகும்.*

***2. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்***
***கைகொல்லும் காழ்த்த இடத்து. - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.***

*திருக்குறளில் பயின்று வரும் அணி :* ***பிறிது மொழிதல் அணி***

***அணி விளக்கம் :*** *ஒன்றை விளக்கவந்த கவிஞர், நேரடியாக அதனை விளக்காமல், அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளைக்கூறி விளக்குவது பிறிதுமொழிதல் அணியாகும். (உவமையைக் கூறி, பொருளை விளக்குவது )*

***குறள் விளக்கம் :***

*முள்மரம் சிறியசெடியாக இருக்கும்போதே பிடுங்கி எறிந்திடுக. அது வளர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே காயப்படுத்தும்.*

***பொருத்தம் :***

*பகையை முளையிலேயே வேரருக்க வேண்டும் என்பதை முள்மரத்தை சிறியதாக இருக்கும்போதே நீக்கிவிட வேண்டும் என்ற கருத்தின் மூலம் உணர்த்தி இருப்பதால் இது பிறிது மொழிதல் அணியாகும்.*

***3. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருவள்ளுவர் கூறுவன யாவை?***

***மருந்து :*** *முன் உண்ட உணவு செரித்ததை அறிந்து உணவு உட்கொண்டால் மருந்து தேவைப்படாது.*

***மருத்துவர்*** : *நோய், அதற்கான காரணம், அந்நோய் தீர்க்கும் மருந்து ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.*
*நோயாளின் வயது, நோயின் அளவு, பருவம் ஆகியவற்றை அறிந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.*

***மருத்துவம்*** : *நோயாளி, மருத்துவர், மருந்து, மருத்துவ உதவியாளர் என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**நெடுவினா :**

***1. வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கூறும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.***

- *அடைய வேண்டியதையே எண்ணிக் கொண்டிருந்தால் எண்ணியதை எளிமையாக அடையலாம்.*
- *பகை என்னும் பண்பற்றதை ஒருவன் விளையாட்டுக்குக் கூட விரும்பக் கூடாது.*
- *வில்லை உடைய வீரருடன் பகை கொண்டாலும் புலவருடன் பகை கொள்ளக் கூடாது.*
- *முள்மரம் சிறிதாக இருக்கும்போதே அழிக்க வேண்டும். அதைப்போல பகையை தொடக்கத்திலேயே அழித்துவிட வேண்டும்.*
- *முன் உண்ட உணவு செரித்ததை அறிந்து உணவு உட்கொண்டால் மருந்து தேவைப்படாது.*
    - *நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்.*
- *நோயாளி, மருத்துவர், மருந்து, மருத்துவ உதவியாளர் என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.*
- *நம் முகத்தைப் பார்க்கும்போதே நம் மனதில் உள்ளதை உணர்ந்து கொள்பவரை எப்படியாவது நம்முடன் வைத்துக் கொள்ள வேண்டும்.*
- *மகிழ்ச்சியாக இருக்கும்போது கடமை தவறக் கூடாது.*

***மனப்பாடக் குறட்பாக்கள் :***

1. குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
   யாது கொடுத்தும் கொளல்.
2. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
   சொல்லேர் உழவர் பகை.
3. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
   கைகொல்லும் காழ்த்த இடத்து.
4. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
   அற்றது போற்றி உணின்.
5. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
   வாய்நாடி வாய்ப்பச் செயல்.
6. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
   கெடுக உலகியற்றி யான்.

***கூடுதல் அணிகள் :***

***1. சொற்பொருள் பின்வரு நிலையணி***

***அணி விளக்கம் :***

*ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து தந்த (ஒரே) பொருளையே தருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***சான்று :***

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

***குறள் விளக்கம் :***

நோய், அதற்கான காரணம், அந்நோய் தீர்க்கும் மருந்து ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

***பொருத்தம் :***

பாடலில் நாடி எனும் சொல் பலமுறை வந்து அறிந்து எனும் ஒரு பொருளையே உணர்த்துகிறது. எனவே இத்திருக்குறள் சொற்பொருள் பின்வரு நிலையணிக்குப் பொருந்துகிறது.

***2. சொல் பின்வரு நிலையணி***

***அணி விளக்கம் :***

ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து பல பொருள்கள் தருவது சொல் பின்வரு நிலையணி ஆகும்.

***சான்று :***

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

***குறள் விளக்கம் :***

பொருட்கள் மீதான பற்றினை விடுவதற்காக, பற்றில்லாத ஒருவனுடன் பற்று (நட்பு) கொள்ள வேண்டும்.

***பொருத்தம் :***

பாடலில் பற்று எனும் சொல் பலமுறை வந்து பிடித்துக்கொள்க, ஆசை எனும் பல பொருட்களை உணர்த்துகிறது. எனவே இத்திருக்குறள் சொல்பின்வரு நிலையணி ஆகும்.

***3. உவமையணி***

***அணி விளக்கம் :***

உவமை ஒரு பொருளாகவும், உவமேயம் ஒரு பொருளாகவும் நிற்க, உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி எனப்படும்.

***சான்று :***

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

***குறள் விளக்கம் :***

பிறருக்கு உதவும் நல்லெண்ணம் கொண்டவரிடம் செல்வம் இருந்தால் அது தன் உடல் முழுவதும் மருந்தாகப் பயன்படும் மரம் போன்றது.

***பொருத்தம் :***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உடல்முழுதும் மருந்தாக உதவும் மரம் (உவமை) ஒரு பொருளாகவும், நல்லவரிடம் உள்ள செல்வம் (உவமேயம்) ஒரு பொருளாகவும் நிற்க, இடையில் போல எனும் உவம உருபு வந்திருப்பதால் உவமையணி எனப்படும்.

**4. உவமையணி**

**அணி விளக்கம் :**

உவமை ஒரு பொருளாகவும், உவமேயம் ஒரு பொருளாகவும் நிற்க, உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி எனப்படும்.

**சான்று :**

*சுடச்சுடரும் பொன்போல ஒளிவிடும் துன்பம்*
*சுடச்சுடரும் நோற்கிற் பவர்க்கு.*

**குறள் விளக்கம் :**

சுடச்சுட ஒளிவிடும் பொன் போல, தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**பொருத்தம் :**

சுடச்சுட ஒளிவிடும் பொன் (உவமை) ஒரு பொருளாகவும், தவமிருப்போருக்கு உண்டாகும் துன்ப மிகுதி (உவமேயம்) ஒரு பொருளாகவும் நிற்க, இடையில் போல எனும் உவம உருபு வந்திருப்பதால் உவமையணி எனப்படும்.

**5. பிறிதுமொழிதலணி**

**அணி விளக்கம் :** ஒன்றை விளக்கவந்த கவிஞர், நேரடியாக அதனை விளக்காமல், அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளைக்கூறி விளக்குவது பிறிதுமொழிதல் அணியாகும். (உவமையைக் கூறி, பொருளை வரவழைப்பது )

**சான்று :**

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்.*

**குறள் விளக்கம் :**

மயில்தோகை தானே என்று அளவுக்கு அதிகமாக வண்டியில் ஏற்றினால், வண்டி உடைந்துவிடும்.

**பொருத்தம் :**

பகைவர்களை பெருக்கக்கூடாது என்பதை உணர்த்த வண்டியில் அதிக பாரம் ஏற்றக் கூடாது என்ற வேறொரு பொருளில் கூறியிருப்பதால் இது பிறிது மொழிதல் அணியாகும்.

**கூடுதல் வினாக்கள் :**

1. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை சாமுவேல் பெப்பிசு.
2. இந்தியாவின் பெப்பிசு ஆனந்தரங்கர்.
3. நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றைக் குறிப்பிடும் நூல் சீறாப்புராணம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. ஹிஜிரத் என்ற அரபுச் சொல்லிற்கு இடம்பெயர்தல் என்று பொருள்.

**5. சீறாப்புராணத்தின் பிரிவுகள் யாவை?**

விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம்.

6. தவமும் ஈகையும் இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) உவமைத் தொகை **ஆ) எண்ணும்மை** இ) பண்புத்தொகை

ஈ) உம்மைத் தொகை

7. சீறாப்புராணத்தின் ஆசிரியர்

**அ) உமறுப்புலவர்** ஆ) சீதக்காதி இ) கம்பர் ஈ) அம்மூவனார்

8. மாநகர் என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) எண்ணும்மை ஆ) முற்றும்மை **இ) உரிச்சொல் தொடர்**

ஈ) தொழிற்பெயர்

**9. சின்னச்சீறா விளக்குக.**

சீறாப்புராணத்தை முடிக்கும் முன்பே உமறுப்புலவர் இறந்துவிட்டார். அப்போது பனுஅகமது மரைக்காயர் நூலைப் பாடி முடித்தார். இவர் பாடிய பகுதி சின்னச்சீறா என்று அழைக்கப்படுகிறார்.

10. 24 பணம் என்பது....................

அ) இரண்டு வராகன் **ஆ) ஒரு வராகன்** இ) மூன்று வராகன்

ஈ) நான்கு வராகன்

11. சின்னச்சீறா இயற்றியவர்...............

அ) உமறுப்புலவர் ஆ) கம்பர் **இ) பனுஅகமது மரைக்காயர்**

ஈ) கண்ணதாசன்

12. முதலடியும் இறுதி அடியும் அளவடிகளாகவும் இடையடிகள் குறளடி சிந்தடியாகவும் வரும் ஆசிரியப்பா....

அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) நிலைமண்டில ஆசிரியப்பா

**இ) இணைக்குறள் ஆசிரியப்பா** ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா

13. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர்

அ) வெண்சீர் ஆ) கனிச்சீர் இ) **ஆசிரிய உரிச்சீர்** ஈ) வஞ்சியுரிச்சீர்

14. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை...........................

அ) செப்பலோசை **ஆ) அகவலோசை** இ) துள்ளலோசை

ஈ) தூங்கலோசை



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் 6

**உரைநடை : காலத்தை வென்ற கலை**
**செய்யுள் : குற்றாலக்குறவஞ்சி - திரிகூடராசப்ப கவிராயர்,**
**திருச்சாழல் - மாணிக்கவாசகர்,**
**ஆத்மாநாம் கவிதைகள் - ஆத்மாநாம் (மதுசூதனன்),**
**துணைப்பாடம் : இசைத்தமிழர் இருவர்,**
**இலக்கணம் : கலைச்சொல்லாக்கம்.**



**பலவுள் தெரிக :**

1. கூற்று 1 : தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.
கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் பிரஸ்கோ வகையைச் சார்ந்தவை.
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
ஆ) கூற்று இரண்டும் தவறு இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
**ஈ) கூற்று இரண்டும் சரி**

2. "ழ" என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது : "கவிதைக் கிரீடம்" என்று போற்றப்படுவது.
**அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி** ஆ) கவிதை நூல், திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

3. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.
அ) விரியன் - 1) தண்டை
ஆ) திருகுமுருகு - 2) காலாழி
இ) நாங்கூழ்ப்புழு -3) சிலம்பு
ஈ) குண்டலப்பூச்சி -4) பாடகம்
i) 3 4 2 1 **ii) 3 1 4 2** iii) 4 3 2 1 iv) 4 1 3 2

4. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகள் ஒன்று
**அ) சாழல்** ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

5. ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல், தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்
அ) மூதூர் ஆ) வெற்றிடம் **இ) நல்லாடை** ஈ) பைந்தளிர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**குறுவினா :**

**1. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?**

நாகரம், வேசரம், திராவிடம் ஆகியன இந்திய கட்டடக்கலையின் மூன்று வகைகளாகும்.

**2. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?**

ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணியாற்றியுள்ளனர் என்பதும், பெண்களை ஆண்களுக்குச் சமமாக மதித்ததையும் அறிய முடிகிறது.

**3. அயர்ந்து, எழுந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

- **அயர்ந்து** - அயர் + த்(ந்) + த் + உ
  அயர் - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.
- **எழுந்த** - எழு + த்(ந்) + த் + அ
  எழு - பகுதி, த் - சந்தி, ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

**4. தொடர் அமைத்து எழுதுக - அன்றொருநாள், நிழலிலிருந்து.**

- **அன்றொரு நாள்** மாணவர்கள் மகிழ்ச்சியாக சுற்றுலா சென்றனர்.
- பள்ளியில் நான் நட்ட மரத்தின் **நிழலிலிருந்து** அமர்ந்து நாங்கள் படித்தோம்.

**சிறுவினா :**

**1. ஃபிரஸ்கோ ஓவியங்கள் : கற்றளி கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?**

**ஃபிரஸ்கோ ஓவியங்கள் :**



- சுண்ணாம்புக் கரைப்பூச்சு காயும் முன்னே வரையப்படும் ஓவியங்கள் பிரெஸ்கோ ஓவியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**கற்றளி கோவில்கள் :**

- செங்கற்களை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கிக் கட்டுவது போல, கருங்கற்களை ஒன்றன்மீது ஒன்று அடுக்கிக் கட்டுவதற்கு கற்றளி கோவில்கள் என்று பெயர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**2. கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

- **கலைச்சொல்லாக்கம்** : புதிய கண்டுபிடிப்புகளுக்கு தமிழில் பெயரிடுவது கலைச்சொல்லாக்கம். பிறமொழிச் சொற்களுக்கு தாய்மொழியில் ஏற்கனவே உள்ள சொற்களையோ, புதிய சொற்களை உருவாக்கியோ தருவது.
- **அகராதி** : பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் அறிந்து கொள்ள உதவுவது அகராதி.

**3. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?**

- சேலத்து நாட்டார் கொடுத்த சிலம்பு.
- கோலத்து நாட்டார் வரிசையாகக் கொடுத்த தண்டை.
- பாண்டியனார் மகள் கொடுத்த பாடகம்.
- குற்றாலநாதர் சந்நிதிப் பெண்கள் கொடுத்த அணிமணிக் கெச்சம்.
- கண்டிய தேசத்தில் அளித்தது காலாழி பீலி.

**4. உணவும், உறக்கமும் அணில் கனவாம் : உங்கள் கனவை, உங்கள் சொற்களில் விளக்குக.**



- உங்கள் கனவு : மேனிலை வகுப்புகளில் நன்கு படித்து, பொதுத்தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெறவேண்டும்.
- நீட் தேர்விற்கு மிகச் சிறப்பாக ஆயத்தம் செய்து, தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று மருத்துவராக வேண்டும்.
- மருத்துவராகி, மேலும் கற்று இதய நிபுணராக சிறப்புறப் பணியாற்ற வேண்டும்.
- ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்து, மக்களுக்காக என்னுயை வாழ்வை அர்ப்பணிப்பேன்.
- பெற்றோர், சகோதரர்களை நல்லபடியாகப் பார்த்துக் கொள்வேன்.

**5. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?**

- பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று சாழல்.
- ஒரு பெண் இறைவனைப் பழிப்பது போலவும், மற்றொருத்தி புகழ்வதுபோலவும் அமைவது சாழல்.
- சிவபெருமான் சுடுகாட்டைக் கோவிலாகவும், புலித்தோலை அணிந்தவர், தாயும் தந்தையும் இல்லாதவர். அவர் சினந்தால் உலகமே கற்பொடியாகிவிடும்.
- பாற்கடலைக் கடைந்தபோது சிவன் நஞ்சை உண்டார். அவர் அதை உண்ணாவிடில், பிரம்மன், விஷ்ணு, தேவர்கள் அன்றே அழிந்திருப்பர்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- சிவபெருமானின் திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்: ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்யும்.

**நெடுவினா :**

**1." கல்லும் கதை சொல்லும்" - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.**

- தஞ்சைப் பெரியகோவிலில் உள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார். அவை பிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.
- நாகரம், வேசரம், திராவிடம் ஆகியன இந்திய கட்டடக்கலையின் மூன்று வகைகள்.
- ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணியாற்றியுள்ளனர் என்பதும், பெண்களை ஆண்களுக்குச் சமமாக மதித்ததையும் அறிய முடிகிறது.



- சுண்ணாம்புக் கரைப்பூச்சு காயும் முன்னே வரையப்படும் ஓவியங்கள் பிரெஸ்கோ ஓவியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இத்தகு ஓவியங்கள் அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணப்படுகின்றன.
- செங்கற்களை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கிக் கட்டுவது போல, கருங்கற்களை ஒன்றன்மீது ஒன்று அடுக்கிக் கட்டுவதற்கு கற்றளி கோவில்கள் என்று பெயர்.
- மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனைமலைக் கோவில் ஆகியன கற்றளி கோவில்களுக்குச் சான்றுகளாகும்.
- ஆண்டுகள் ஆயிரம் கடந்தும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தஞ்சைப் பெரியகோவிலின் கலைநுட்பத்தை நினைத்தால் வியப்பாக உள்ளது.
- கேரளாந்தகன் வாயில் : பெரிய கோவில் கோபுரங்களில் மிகவும் உயரமானது.
- தட்சிண மேரு : தஞ்சைப் பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளி கோவில்களில் மிகப் பெரியதாகும். இராசராச சோழனால் ஆறே ஆண்டுகளில் கட்டப்பட்டது. கோவில் விமானத்தின் உயரம் 216 அடி.
- கோவிலை வழிபாட்டுத்தலமாக மட்டுமன்றி தானியங்கள் சேமிக்கும் இடமாகவும், மருத்துவமனையாகவும், படைவீரர்கள் தங்கும் இடமாகவும், மக்கள் கூடும் இடமாகவும் பயன்படுத்தினர்.
- தஞ்சைப் பெரியகோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.
- கற்களே கிடைக்காத காவிரிச் சமவெளிப் பகுதியில் இவ்வளவு உயரத்தில் ஒரு கற்கோவில் என்பது தனிப்பெருஞ் சிறப்பாகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2.சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**

**சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும்.**



**சிம்பொனித் தமிழர் - இசைஞானி இளையராஜா**

- ✓ தேனி மாவட்டம் பண்ணைப்புரத்தில் பிறந்தவர்.
- ✓ ஆசியாக்கண்டத்தில் பிறந்தவர்களுக்கு சிம்பொனி இசைக்க இயலாது என்ற கூற்றைத் தகர்த்து எறிந்தவர்.
- ✓ சிம்பொனி இசையை எழுத குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் ஆகும். இவரோ வெறும் பதின்மூன்று நாட்களிலேயே இசையமைத்தார்.
- ✓ இசையமைத்த முதல் திரைப்படம் அன்னக்கிளி.
- ✓ அவரிடமிருந்து புதுப்புது மெட்டுகள் உருவாயின.
- ✓ அவர் உருவாக்கிய இசைத்தொகுப்புகள் எப்படிப்பெயரிடுவேன், காற்றைத் தவிர ஏதுமில்லை, இந்தியா 24 மணிநேரம் ஆகியனவாகும்.
- ✓ திருவாசகத்திற்கு ஆரட்டோரியா எனும் வடிவில் இசையமைத்தார்.
- ✓ நூறாவது நாள் திரைப்படத்திற்கு வெறும் அரை நாளில் இசையமைத்தார்.
- ✓ பஞ்சமுகி என்ற கருநாடக செவ்வியல் இராகத்தை உருவாக்கியவர்.
- ✓ இளையராஜாவின் இசை ராஜாங்கம் உலகெங்கும் பரவியிருந்தது.

**ஆஸ்கார் தமிழர் - இசைப்புயல் ஏ.ஆர்.இரகுமான்**

- ❖ மலையாள இசையமைப்பாளர் ஆர்.கே.சேகர் அவர்களின் மகன்.
- ❖ நான்கு வயதில் தன் தந்தையை இழந்தார்.



- ❖ இசையை இரவிலும், பள்ளிக்கல்வியைப் பகலிலும் கற்றவர்.
- ❖ 4 வயதில் ஹார்மோனியம் வாசிக்கக் கற்றுக்கொண்டவர்.
- ❖ முதல் திரைப்படம் ரோஜா(தமிழ்).
- ❖ முதல் திரைப்படத்திற்கே தேசிய விருது கிடைத்தது.
- ❖ இவரது இசை துள்ளல் இசையாகும்.
- ❖ சூ.:.பி இசையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்.
- ❖ ஸ்லம்டாக் மில்லியனர் படத்தை இயக்கியதற்காக கோல்டன்குளோப் விருது, கிராமி விருது பெற்றவர்.
- ❖ அதே திரைப்படத்திற்காக உலகத்தின் மிகப்பெரிய விருதான ஆஸ்கார் விருது. அதுவும் இரண்டு விருது பெற்ற பெருமைக்குரியவர்.
- ❖ ஆஸ்கார் விருது பெற்ற முதல் தமிழர் இவரே.
- ❖ வந்தே மாதரம், ஜன கண மன என்னும் இசைத் தொகுப்புகளை வெளியிட்டு நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தவர்.
- ❖ மேலை நாடுகளிலும் திரைப்படம், நாடகம் ஆகியவற்றுக்கும் இசையமைத்தவர்.
- ❖ உலக இசையமைப்பாளர் வரிசையில் தம்மை நிலைநாட்டிக்கொண்டவர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இலக்கணம்**

***1. கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.***

ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசாந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தும் சொற்களே கலைச்சொற்கள்.

***2. கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?***

ஒரு மொழி தன் வேர்ச்சொற்களைக் கொண்டு புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

***3. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.***

| | | | |
|---|---|---|---|
| Personality | - ஆளுமை | Emotion | - மனவெழுச்சி |
| Plastic | - நெகிழி | Apartment | - அடுக்ககம் |
| Straw | - உறிஞ்சுகுழல் | Mass Drill | - கூட்டு உடற்பயிற்சி |
| Horticulture | - தோட்டக்கலை | Average | - சராசரி |
| Escalator | - தானியங்கிப் படிக்கட்டுகள் | | |

***4. SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக?***

- கலம்
- வங்கம்
- நாவாய்
- பாய்மரம்
- தோணி
- ஓடம்
- புணை
- மிதவை
- தெப்பம்
- ப.்.றி



***5. உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வா.செ.குழந்தைசாமி கூறுகிறார்?***

- பிறமொழிச் சொல்லினைக் கடன்பெறல் - தசம முறை (Decimal)
- புதுச்சொல் படைத்தல் - மூலக்கூறு ( Molecule )
- உலக வழக்கை ஏற்றுக் கொள்ளல் - எக்ஸ் கதிர் ( X - ray )
- உலக அளவிலான குறியீடுகள், சூத்திரங்கள் ( $\Sigma\sqrt{A} = \pi r^2$, $H_2O$, Ca )



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மொழிப்பயிற்சி :

***1. தமிழ்ச்சொல்லாக்குக - சன்மார்க்கம், வித்துவ பால சபை***

*சன்மார்க்கம் - ஆன்ம நெறி, வித்துவ பால சபை - இளங்கலைஞர் மன்றம்.*

**2. நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் *<u>திகழ்ந்தவர்</u>* சங்கரதாசு சுவாமிகள் - அடிக்கோடிட்ட வினையாலணையும் பெயரை வினைமுற்றாக்கித் தொடரை எழுதுக.** - *திகழ்ந்தார்.*



***3. ஈட்டினார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

*ஈட்டினார் - ஈட்டி + இன் + ஆர்*

*ஈட்டு - பகுதி, இன் - நிகழ்கால இடைநிலை,*

*ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.*

***4. தன்னன்ன தானேன தன்னானே - இந்தச் சந்தத்தில் பொருள் பொதிந்த இரண்டு அடிகள் கொண்ட பாடல் எழுதுக.***

*தந்தையர் நாடென்னும் பேச்சினிலே*
*சக்தி பிறக்குது மூச்சினிலே.*

***5. தமிழ் நாடகத் தலைமையாசிரியர் - சிறப்புப் பெயருக்கான காரணத்தை அளிக்க.***

*சங்கரதாசு சுவாமிகள், நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும், முதல்வராகவும் விளங்கினார். எனவே அவர் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனும் சிறப்புப்பெயர் பெற்றார்.*

**தமிழாக்கம் தருக.**

The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, printmaking, photography, and other visual media.

*இன்று ஓவியம், சிற்பம், அச்சு தயாரித்தல் மற்றும் பிற காட்சி ஊடகம் உள்ளிட்ட துறைகளில் படங்கள் அல்லது பொருட்களை உருவாக்குவதை உள்ளடக்கிய காட்சிக் கலைகள் பழமையான ஆவணப்படுத்தப்பட்ட கலை வடிவங்கள் ஆகும்.*

Music, theatre, film, dance, and other performing arts, as well as literature and other media such as interactive media, are included in a broader definition of art or the arts.

*இசை, நாடகம், திரைப்படம், நடனம் மற்றும் பிற நிகழ்த்து கலைகள், அத்துடன் இலக்கியம் மற்றும் ஊடாடும் ஊடகங்கள் போன்ற பிற ஊடகங்கள், கலை அல்லது கலைகளின் பரந்த வரையறையில் சேர்க்கப்பட்டுள்ளன.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Until the 17th century, art referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences.

17ஆம் நூற்றாண்டு வரை கலை எந்த திறன் அல்லது ஆட்சியைக் குறிப்பிட்டது மற்றும் கைவினை அல்லது அறிவியலிருந்து வேறுபடுத்தப்படவில்லை.

Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantify to any concept.

கலை அதன் வரலாறு முழுவதும் பல்வேறு செயல்பாடுகளைக் கொண்டிருந்தது, அதன் நோக்கத்தை எந்த கருத்தாக்கத்தையும் சுருக்கமாக அல்லது அளவிட கடினமாக்குகிறது.

This does not imply that the purpose of Art is 'vague', but that it has had many unique, different reasons for being created.

இது கலையின் நோக்கம் தெளிவற்றது என்று குறிக்கவில்லை, ஆனால் அது உருவாக்குப்படுவதற்கு பல தனித்துவமான, வெவ்வேறு காரணங்களைக் கொண்டுள்ளன.

## தொடர் மாற்றம் :-

***1. மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்றுக)***

*மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறையாதலால் மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.*

***2. தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத்தொடராக மாற்றுக).***

*தஞ்சைக் கோவில் எவ்வடிவில் கட்டப்பட்ட எக்கலைப்பாணியாகும்?*

***3. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை (செய்தித் தொடராக்குக).***

*மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை மிகவும் அழகாக உள்ளது.*

***4. நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன் (பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக).***

*நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்லாமல் இருக்க மாட்டேன்.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்காணும் விவரங்களுடன் தன்விவரக் குறிப்பு ஒன்று எழுதுக.**

| | |
|---|---|
| பெயர் | : ப. மூர்த்தி |
| வயது | : 21 |
| பாலினம் | : ஆண் |
| பிறந்தநாள் | : 15.10.2000 |
| பெற்றோர் | : பழனிமுத்து - அம்மணி அம்மாள் |
| முகவரி | : 48. தேரடி வீதி, திருவண்ணாமலை 606601 |
| அலைபேசி எண் | : 9876543210 |
| மின்னஞ்சல் | : moorthy1510@gmail.com |
| அறிந்த மொழிகள் | : தமிழ், ஆங்கிலம், இந்தி |
| எடை | : 45 |
| உயரம் | : 5 அடி 6 அங்குலம் |
| குருதி வகை | : 'O' + |
| கல்வித்தகுதி | : B.A. தமிழ் |

**மதிப்பிற்குரிய ஐயா,**

நான் இளங்கலை தமிழிலக்கியம் பயின்றுள்ளேன். தங்கள் நாளிதழில் மெய்ப்புத் திருத்துநர் பணி இருப்பதை அறிந்து அப்பணிக்கு விண்ணப்பித்துள்ளேன். என் சுயவிபரக் குறிப்பினை இத்துடன் இணைத்துள்ளேன். அதனைப் பரிசீலித்து எனக்கு அப்பணியை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இலக்கியநயம் பாராட்டுக.**



தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.

- கம்பர்

**திரண்ட கருத்து :**

சோலையில் மயில்கள் ஆட, தாமரை மலர்கள் விளக்குகளை ஏந்தியது போல நிற்க, மேகக்கூட்டங்கள் மத்தளம் போல ஒலிக்கவும், குவளை மலர்கள் கண்போல் விழித்துப் பார்க்க, நீர்நிலைகளில் அலைகள் திரைச்சீலை போல அமைய, தேனைப் போன்ற மகரயாழ் இசைக்க, வண்டுகள் இனிமையாகப் பாட, மருத நிலமானது அமைந்திருந்தது.

**மையக் கருத்து :**

மருத நிலத்தை அழகுற கம்பர் வருணித்துள்ளார்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**எதுகை :**

அடி அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

பாடலிலுள்ள எதுகைச்சொற்கள் :

**தண்**டலை - கொ**ண்**டல்கள் - தெ**ண்** திரை - வ**ண்**டுகள்.

**மோனை :**

அடி அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

பாடலிலுள்ள மோனைச்சொற்கள் :

**த**ண்டலை - **தா**மரை: **கொ**ண்டல் - **கு**வளை: **தெ**ண் **தி**ரை - **தே**ம்பிழி: **வ**ண்டுகள் - **வீ**ற்றிருக்கும்.

**இயைபு :**

அடிதோறும் ஈற்றுச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபு எனப்படும்.

தாங்**க** - நோக்**க** என்பன இயைபாக இடம்பெற்றுள்ளன.

**அணி :**

பாடலில் அணி அமையத் தொடுப்பது அணியாகும்.

மேற்கண்ட பாடலில் இயல்பான ஒரு இயற்கைக் காட்சியின்மீது, தன் குறிப்பை ஏற்றிக் கூறியிருப்பதால், தற்குறிப்பேற்ற அணியாகும்.

**கலைச்சொல்லாக்கம் :**

| | |
|---|---|
| Smartphone | திறன்பேசி |
| Touch screen | தொடுதிரை |
| Bug | பிழை |
| Gazette | அரசிதழ் |
| Despatch | அனுப்புகை |
| Subsidy | நல்கை |
| Ceiling | உச்சவரம்பு |
| Circular | சுற்றறிக்கை |

| | |
|---|---|
| SubJunior | மிக இளையோர் |
| Super Senior | மீமூத்தோர் |
| Carrom | நாலாங்குழி ஆட்டம் |
| Sales Tax | விற்பனைவரி |
| Customer | வாடிக்கையாளர் |
| Consumer | நுகர்வோர் |
| Account | பற்று வரவுக் கணக்கு |
| Referee | நடுவர் |

Pilot - வலவன்

Decimal - தசம முறை

Molecule - மூலக்கூறு

X - ray - எக்ஸ் கதிர் / ஊடுகதிர்

Photosynthesis - ஒளிச்சேர்க்கை

Clinic - மருத்துவமனை
Blood Group - குருதிப்பிரிவு / இரத்த வகை
Pharmacist - மருந்தாளுநர்
Typhod - குடற்காய்ச்சல்
Oinment - களிம்பு
Notebook - எழுதுசுவடி
Answerbook - விடைச்சுவடி
Rough notebook - பொதுக்குறிப்புச் சுவடி
Prospectus - விளக்கச்சுவடி

நுண் கலைகள் - Fine Arts
தானியக்கிடங்கு - Grain Warehouse
ஆவணப்படம் - Documentary
பேரழிவு - Disaster
கல்வெட்டு - Inscription/ Epigraph
தொன்மம் - Myth

**எண்ணங்களை எழுத்தாக்குக**



*துளித்துளியாய் தேன்துளி*
*சிந்தியது மேகம்.*
*அந்திநேரத்தில் அங்கு*
*மீன்கள்மீது எனக்கு மோகம்.*
*துள்ளிய மீன்களை*
*அள்ளிச் சென்றேன்.*
*நானிட்ட புழுவை உணவாக்க*
*வந்த மீன் எனக்கே உணவானது.*
*பசியோடு வந்த எனக்கு*
*ருசியான மீன் கிட்டியது.*
*காத்திருந்ததால் கால்*
*வயிறு நிரம்பியது.*

**விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1. **தனிமொழி - அறிவு,** தொடர்மொழி **- வண்ணமயில், பொதுமொழி -** வைகை.
2. **கார்காலம் -** ஆவணி, புரட்டாசி**, குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை,** முன்பனிக்காலம் **- மார்கழி, தை.**
3. **எழுத்து, சொல்,** பொருள்**, யாப்பு,** அணி.
4. **எழுத்து,** அசை**, சீர்,** அடி**, தொடை.**
5. **சேரன் - வில், சோழன் -** புலி**,** பாண்டியன் **- மீன்.**


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**கூடுதல் வினாக்கள் :**

***1. தஞ்சை பெரிய கோவில் (பெருவுடையார் கோவில்) யாரால் எப்போது கட்டப்பட்டது?***

*11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராஜ ராஜ சோழனால், 1003 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி, 1010 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.*

*2. தட்சிண மேரு என்று அழைப்படுவது தஞ்சைப் பெரிய கோவில்.*

*3. கருவறையை அகநாழிகை என்று அழைப்பர்.*

*4. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?*

*இராசசிம்மேஸ்வரம்.*

*இராசசிம்மேஸ்வரம் என்று அழைக்கப்படும் கோவில்.........*

*அ) திருப்பத்தூர் திருத்தளிநாதர் கோவில்*

*ஆ) தஞ்சைப் பெரிய கோவில்*

***இ) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்***

*ஈ) தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில்*

***5. தஞ்சை பெரிய கோவிலில் ஃபிரெஸ்கோ வகை ஓவியங்களைக் கண்டறிந்தவர் யார்?***

*எஸ் கே. கோவிந்தசாமி.*

*6. ஃபிரெஸ்கோ என்ற இத்தாலிச் சொல்லிற்கு **புதுமை** என்பது பொருள்.*

*7. ஆத்மாநாமின் இயற்பெயர் என்ன? - மதுசூதனன்.*

*8. குறவஞ்சி ஒரு நாடக வடிவ இலக்கியமாகும்.*

*9. குறவஞ்சி 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று.*

*10. சிற்றிலக்கியத்திற்கு, பிரபந்தம் என்ற வேறு பெயரும் உண்டு.*

*11. கவிதைக் கிரீடம் என்று அழைக்கப்படும் நூல் எது? குற்றாலக் குறவஞ்சி.*

*12. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்? திரிகூட ராசப்ப கவிராயர்.*

*13. குற்றாலத்தின் மீது தலபுராணம் பாடியவர் திரிகூட ராசப்ப கவிராயர்.*

*14. திருச்சாழலின் ஆசிரியர் யார்? மாணிக்கவாசகர்.*

*15. திருச்சாழல் எட்டாம் திருமுறையில் அமைந்துள்ளது.*

*16. ஜி.யு.போப் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.*

*17. மாணிக்கவாசகர் திருவாதவூரைச் சேர்ந்தவர்.*

*சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர்.*

*அரிமர்த்தன பாண்டிய அரசனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர்.*



*திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18. கலைகளின் மகுடம் எது? இசை.

19. ஃபிரெஸ்கோ வகை ஓவியங்கள் காணப்படும் இடம்

அ) காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவில்லிப்புத்தூர்

ஆ) தஞ்சாவூர், அஜந்தா, திருவில்லிப்புத்தூர்

**இ) அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல்**

ஈ) காஞ்சிபுரம், சித்தன்னவாசல், எல்லோரா

**20. கற்றளி கோவில்கள் யாவை?**

மாமல்லபுரம், கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியன கற்றளி கோவில்கள்.

**21. ஃப்ரெஸ்கோ என்ற சொல்லின் பொருள் யாது? இவ்வகை ஓவியங்கள் எங்கு காணப்படுகின்றன?**

ஃப்ரெஸ்கோ என்ற சொல்லிற்கு புதுமை என்று பொருள்.

சுண்ணாம்பு கரைப்பூச்சு மீது, அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியம் இது.

இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணலாம்.

**22. திருச்சாழல் விளக்கம் தருக.**

மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் வகைச் செய்யுள் திருச்சாழல் ஆகும். சாழல் என்பது பெண்கள் விளையாடும் விளையாட்டு. ஒரு பெண் இறைவனைப் பழிப்பது போலவும், இன்னொருத்தி இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடப்படுவது திருச்சாழல் ஆகும்.

23. கலைச் சொற்கள் பெரும்பாலும் ...................... பெயர்களாகவே இருக்கும்.

**அ) காரணப்** ஆ) சிறப்புப் இ) பொதுப் ஈ) வினைப்

**24. நிறுத்தற்குறியிடுக.**

அறம் பொருள் இன்பம் வீடு என வாழ்க்கைப்பேறு நான்கு.

விடை : அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்க்கைப்பேறு நான்கு.

***

www.Padasalai.Net



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 7

**உரைநடை : காற்றில் கலந்த பேரோசை - சுந்தர ராமசாமி,**
**செய்யுள் : புரட்சிக்கவி - பாரதிதாசன்,**
**பதிற்றுப்பத்து - குமட்டூர் கண்ணனார்,**
**துணைப்பாடம் : சிந்தனைப் பட்டிமன்றம்,**
**இலக்கணம் : ஆக்கப் பெயர்கள்.**




**பலவுள் தெரிக :**

1. ஜனப்பிரளயம் என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
   **இ) மக்கள் வெள்ளம்.**
2. கூற்று: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல். காரணம்: சேரமன்னர் பதின்மர் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
   **ஆ) இரண்டும் சரி.**
3. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார், யாரிடம் கூறியது?
   **இ) அமைச்சர் மன்னரிடம்.**
4. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.
   **ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்.**
5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
   **ஈ) ஆசிரியர்**

**குறுவினா :**

**1. "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.**




- இரண்டு கைப்பிடி விஷயங்கள் எடுத்துக்கொள்வார். அவர் மேடை ஏறினால் வர்ணஜாலம் தோன்றும். குடைகுடையாய், மாலைமாலையாய் இறங்கிவரும்.
- பேச்சுக்கலை அவர் பெற்ற வரம் என்றுதான் கூறவேண்டும்.
- பேச்சில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நளினமாகவும், நூதனமாகவும் இருக்கும்.

**2. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?**

- காட்டை, மேட்டை, புதரைத் திருத்தி கழனியாக மாற்றினார்கள். ஆற்றைத் தடுத்து ஏரி, குளம், வாய்க்கால், குட்டைகளை அமைத்தனர்.
- கல்லையும், மலையையும் பிளந்து கனிம வளங்களைக் கொண்டுவந்தனர்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3. அலைகடல், புதுக்கியவர் - இலக்கணக்குறிப்பு தருக.**

அலைகடல் - வினைத்தொகை, புதுக்கியவர் - வினையாலணையும் பெயர்

**4. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் தருக.**

உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுவது செந்துறைப் பாடாண்பாட்டு ஆகும்.

**சிறுவினா :**

**1. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?**

- மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர் ஜீவா.
- பேச்சில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நளினமாகவும், நூதனமாகவும் இருக்கும்.
- அவருடைய பாணி, இரவல் பாணி அல்ல: கற்று அறிந்ததும் இல்லை.
- பேச்சு பயனைத் தரவேண்டும் என்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்று அவருக்குத் தெரியும்.
- பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது.

**2. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

- "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" என்ற பாடலடி பாரதிதாசன் இயற்றிய புரட்சிக்கவி எனும் காவியத்தில் இடம்பெற்றுள்ளது.
- உதாரனுக்கு, அந்நாட்டு அரசன் மரண தண்டனை விதித்தபோது தமிழை உயிரென்று போற்றுங்கள் என்று பொது மக்களைப் பார்த்துக் கூறினார்.
- அமிழ்தம் என்று போற்றப்படும் தமிழ், தனது உயிர்போக காரணமானதே என்று பழிவருமோ என்று நினைத்து இவ்வரியை உதாரன் கூறினான்.

**3. பெருங்காடு, உழுதுழுது - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**பெருங்காடு = பெருமை +காடு**

பெரு + காடு (ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டது)

பெருங்காடு ( இனமிகல் விதிப்படி "க்" இனமான மெல்லினம் "ங்" மிகுந்தது.

**உழுதுழுது = உழுது + உழுது**

உழுத் + உழுது ( உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும் விதிப்படி உகரம் கெட்டது)

உழுதுழுது (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி த் + உ= து ஆனது)



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**4. "சேரநாடு செல்வ வளம் மிக்கது" என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.**

- சேர நாட்டு மக்கள் பசி, பிணி அறியாதவர்கள்.
- மக்கள் அவர்களுடைய நாட்டை விட்டுப் புலம்பெயராமல் சுற்றத்தாரோடு வாழ விரும்புவர். அத்தகு வளமான நாடு, சேர நாடு.
- சான்றோர்களுக்கு அரிய பொருள்களைத் தந்து, மக்களைக் கண்ணெனக் காத்தான் சேரலாதன்.
- சேர நாட்டில் எப்பொழுதும் விழாக்கள் நடைபெறும்.
- பகைவரை வென்ற புதுவருவாயும், மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மையும் கொண்டவன் சேரலாதன்.
- எனவே தான் சேரநாடு செல்வ வளம் மிக்கதாகக் குமட்டூர் கண்ணனார் பாடுகிறார்.

**5. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன - ஏன்?**

- தமிழில் ஆக்கப்பெயர்ச் சொற்கள் விரவிக் கிடக்கின்றன.
- ஆக்கப்பெயர்கள் நம் மொழிக்குப் புதிய சொற்களை உருவாக்கித் தருவதோடு, மொழியின் வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன.

**நெடுவினா :**

**1. சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**

- மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர் ஜீவா.
- அவர் இறந்தபோது, மேடையில் பேசிக்கொண்டிருக்கும்போதா என்று அனைவரும் கேட்கும் அளவிற்கு அவரது மேடைப்பேச்சு இருக்கும்.
- இரண்டு கைப்பிடி விஷயங்கள் எடுத்துக்கொள்வார். அவர் மேடை ஏறினால் வர்ணஜாலம் தோன்றும். குடைகுடையாய், மாலைமாலையாய் இறங்கிவரும்.
- பேச்சுக்கலை அவர் பெற்ற வரம் என்றுதான் கூறவேண்டும்.
- பேச்சில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நளினமாகவும், நூதனமாகவும் இருக்கும்.
- அவருடைய பாணி, இரவல் பாணி அல்ல: கற்று அறிந்ததும் இல்லை.
- பேச்சு பயனைத் தரவேண்டும் என்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்று அவருக்குத் தெரியும்.
- பேச்சுக்கலையை விளக்கும் பாடப்புத்தகங்களை காலடியில் போட்டு மிதித்தவர்.
- பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது.
- அவர் இறந்ததால் மேடையில் ஒரு நாற்காலி காலியாகிவிட்டது. அது என்றும் காலியாகவே கிடக்கும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2. பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.**

- ஒரு கவிஞர் நினைத்தால் எதனை வேண்டுமானாலும் சாதிக்கலாம் என்பதை புரட்சிக்கவி மூலம் நிரூபித்துள்ளார்.
- அமுதவல்லிக்கு தமிழ் கற்றுக் கொடுக்க உதாரன் என்ற தமிழ்ப்புலவரை நியமிக்கின்றார் அமைச்சர்.
- இருவரும் அழகும் ஆற்றலும் இளமையும் கொண்டவர்கள். அதனால் அமுதவல்லி தொழுநோயாளி என்று உதாரனிடம் கூறுகின்றனர். உதாரன் பார்வையற்றவர் என்று அமுதவல்லியிடம் கூறுகின்றனர்.
- இருவருக்குமிடையில் திரை அமைத்து தமிழ் கற்பிக்கின்றனர்.
- ஒரு நாள் இரவு நேரத்தில் நிலவின் அழகைக் கண்டு அழகுற வருணித்து கவிதை பாடினான் உதாரன். பார்வையற்ற ஒருவர் எங்ஙனம் நிலவை வருணிக்க முடியும் என்றெண்ணி, திரையை விலக்கினாள் அமுதவல்லி. இருவரும் உண்மையை உணர்கின்றனர்.
- இருவருக்குமிடையில் காதல் மலர, இதை அறிந்த அரசன் இருவருக்கும் மரண தண்டனை விதித்தான். தண்டனை பெறும்முன் இருவரும் உரைத்த வீர உரையை இங்கு காண்போம்.
- உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தவை : காட்டை, மேட்டை, புதரைத் திருத்தி கழனியாக மாற்றினார்கள். ஆற்றைத் தடுத்து ஏரி, குளம், வாய்க்கால், குட்டைகளை அமைத்தனர்.
- கல்லையும், மலையையும் பிளந்து கனிம வளங்களைக் கொண்டுவந்தனர்.
- கடலில் மூழ்கி முத்தெடுத்தனர்.
- அரசனின் தேவைக்குத்தான் நாடு என்றால் இந்நாடு அழிவதே மேல்.
- அதிகாரம் யாருக்கு? நாட்டையே உருவாக்கிய மக்களுக்கா? அல்லது அரசனுக்கா?
- இளவரசி பின்நாளில் நாட்டை பொதுவுடைமை ஆக்க எண்ணியிருந்தாள்.
- சிரம்(தலை) அறுத்தல் அரசனுக்குப் பொழுதுபோக்கு, மக்களாகிய நமக்கோ உயிர்வதை.



- உதாரனுக்கு மரண தண்டனை விதிக்கும் தருவாயில் உயர் தமிழை உயிரென்று போற்றுமின்கள் என்று பொது மக்களைப் பார்த்துக் கூறினார்.
- தண்டனையை ஏற்க உதாரன் தயாரானான். கொலையாளிகள் வாளை உயர்த்தினர்.
- மக்கள் வெகுண்டெழுந்து வாளைப் பறித்தனர். கொலைகாரர்கள் உயிர் பிழைக்க ஓடினர்.
- அரசன் மக்களாட்சியை நடைமுறைப்படுத்தினான்.
- மன்னராட்சி, அதிகாரம் போன்றவற்றை வென்று உதாரன் இளவரசியை கரம்பிடித்து, அவன் ஒரு புரட்சிக்கவி என்பதை நிரூபித்தான்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

***3. சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.***

**சிந்தனைப் பட்டிமன்றம்**

***தலைப்பு :*** இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடா? நாடா?

- நடுவர் மாணவர் இளங்கோ.
- ***வீடே என்ற வாதம் :***
  ***எழில் :*** பிறக்கின்ற குழந்தைக்கு தாயின் முகம் தான் முதல் பாடப்புத்தகம். உலகத்தை அறிமுகப்படுத்துபவள் தாய். கற்றல் வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது.
  ***எலிசபெத் :*** வீடு நம் பண்பாட்டையும், மரபையும் காக்கும் கருவூலம். அன்பு உருவாகும் இடம். உணவு, காய்கறி விளைவிப்பது என எல்லாவற்றையும் வீட்டிலிருந்தே கற்கிறோம்.
- ***நாடே என்ற வாதம் :***
  ***அப்துல்லா :*** வீடு முரண்பாடுகள் நிறைந்தது. வீட்டை விட்டு வெளியேறிய பின்புதான் பாரதி புதிய திசையில் நடந்தார். வீடு என்பது உறவுக்குள் சிக்க வைப்பது. நாடு சிந்தனைகளை உருவாக்குகிறது.
  ***அமுதா :*** ஆண்களுக்கு மட்டுமே வீடு அறிவின் உறைவிடம்: பெண்களுக்கு இல்லை. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று கூறியது. பள்ளிக்கூடம் தான் பெண்கல்வி தந்தது. பெண்கள் இன்று விஞ்ஞானியாக, விமான ஓட்டியாக, கல்வியாளராக, நாடாளும் அமைச்சராகப் பணியாற்றுவது நாடால்தான்.
- ***தீர்ப்பு :*** அன்பிற்கும், அரவணைப்புக்கும் வீடு உறுதுணையாக இருக்கலாம். ஏற்றத்தாழ்வில்லாத, சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயம் உருவாக நாடே துணைபுரிகிறது. இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவுவது நாடே.

**இலக்கணம் : ஆக்கப்பெயர்கள்**

**1. நீங்கள் வாழும் சூழலில் பயன்படுத்தப்படும் ஆக்கப்பெயர்களைப் பட்டியலிடுக.**

ஆட்சியாளர், முதலாளி, தொழிலாளி, வண்டிக்காரன், பால்காரன், ஆட்டோக்காரன், வீட்டுக்காரன், ஆணையாளர், அடைமானம், வேலைக்காரி, குற்றவாளி, விண்ணப்பதாரர்.

**2. படிப்பவர், படிப்பாளி இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்க.**

**படிப்பவர்** - செய்தவரையும், செயலையும் குறிப்பதால் வினையாலணையும் பெயர்.

**படிப்பாளி** - படிப்பு எனும் சொல் ஆக்கப்பெயர் விகுதிபெற்று படிப்பாளி என ஆனது.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்தெழுதுக.**

எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குக் காவல்துறை ஆணையாளர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்க வேண்டும். நல்ல நண்பர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு உதவியாள் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

**விடை :** ஆணையாளர், அழைப்பாளர், படிப்பகம், கூட்டாளி, உதவியாள், முதலாளி.

**அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**

1. வேவு பார்த்திடுவான் : ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) - **உளவாளி.**
2. அறிவைத் தேடிப் போகுமிடம் : உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - **நூலகம்.**
3. வந்தால் மகிழ்ச்சி இது : உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - **வருமானம்.**
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி: பட்டம் வாங்கினவன்? (தாரி) - **பட்டதாரி.**
5. அளந்து அளந்து கொட்டிடுவான் : அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்) - **கொடையாள்**

**சான்றோர் சித்திரம்**


மயிலை சீனி. வேங்கடசாமி
(1900 – 1980)

தமிழ் மொழியில் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகள், அளவுகடந்து உள்ளன. அவற்றை வெளிக்கொணர்ந்து, வீரிய உணர்வுடன் வெளியிட்டவர் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி ஆவார். அவர் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள். இராமேசுவரத் தீவு, உறையூர் அழிந்த வரலாறு, மறைந்துபோன மருங்காப்பட்டினம் போன்ற தனித்தன்மைகொண்ட அவர்தம் கட்டுரைகள் வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சின. கொங்கு நாட்டு வரலாறு, துளுவ நாட்டு வரலாறு, சேரன் செங்குட்டுவன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் முதலிய நூல்கள் அவர் நமக்கு வழங்கியுள்ள வரலாற்றுச் செல்வங்கள். அவருடைய 'களப்பிரர் காலத் தமிழகம்' என்னும் ஆய்வு நூல், இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வருணிக்கப்பட்ட களப்பிரர் காலத்திற்கு ஒளியூட்டி, வரலாற்றுத் தடத்தைச் செப்பனிட்டது.

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்றாசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ்நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**1. மறந்ததும் மறைந்ததும் - இதுபோன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.**

படித்ததும், பிடித்ததும் கற்றதும் கேட்டதும்.

**2. அழிந்த வரலாறு, புதிய வெளிச்சம் - அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.**

அழிந்த - பெயரெச்சம், புதிய - பெயரெச்சம்.

**3. அழியாச் சிறப்பிடம் - இலக்கணக்குறிப்பு தருக.**

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**4. முதலிய, முதலான - பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநுறூறு முதலிய நூல்கள் அகத்திணை சார்ந்த நூல்கள்.

குறிஞ்சிப்பாட்டு முதலான நூல்கள் பத்துப்பாட்டு நூல்களாகும்.

**5. பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.**

அனைத்தும்.

**தமிழாக்கம் தருக.**



Balu : Hi, Good evening.

பாலு : மாலை வணக்கம்.

Velu : Hi Balu, Good evening.

வேலு : மாலை வணக்கம் பாலு.

Balu : Yesterday you were watching the Republic day function the whole day.

பாலு : நேற்று நீ குடியரசு தின நிகழ்ச்சியை முழு நாளும் பார்த்துக்கொண்டிருந்தாய்.

Velu : Yes, I was touched by one award ceremony.

வேலு : ஆம். ஒரு விருது வழங்கும் விழா என் மனதைத் தொட்டது.

Balu : Which award?

பாலு : என்ன விருது?

Velu : Param vir Chakra award, highest award for army personnel.

வேலு : இராணுவ வீரருக்கான உயரிய விருதான பரமவீர சக்கர விருது.

Balu : Why were you touched?

பாலு : ஏன் அது மனதைத் தொட்டது?

Velu : Most of the awards were received by the wives of soldiers posthumous?

வேலு : பெரும்பாலான விருதுகள் மறைந்த வீரர்களின் மனைவியரே வாங்கினர்.

Balu : Why? What do mean by posthumous?

பாலு : ஏன்? மறைந்த வீரர் என்பதன் பொருள் என்ன?



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

Velu : it means 'after death'. Many soldiers had laid down their lives protecting the border of our Motherland. They have sacrificed their lives to save our Country. So that we can be free and safe.

வேலு : இறந்த பிறகு என்பது பொருள். நம் தாய் நாட்டின் எல்லையைக் காக்கும் போது தம் இன்னுயிரை ஈந்தனர். நம் நாட்டைக் காக்க தம் உயிரைத் தியாகம் செய்தனர். அவர்களால்தான் நாம் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் இருக்கிறோம்.

**மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

சான்று : **எதிர்நீச்சல் (போராடுதல்)**

வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் அவற்றைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறவேண்டும்.

**சொந்தக்காலில் நிற்றல் (அடுத்தவரை எதிர்பார்க்காமல் இருத்தல்):**

படித்து முடித்தபின் பணத்தை பெற்றோரை எதிர்பாராமல் சொந்தக் காலில் நிற்க வேண்டும்.

**தாளம் போடுதல் (பொய்யாகப் புகழ்தல்):**

பிறரிடம் தாளம் போட்டு நற்பெயர் வாங்குவதைவிட, உழைப்பால், திறமையால் முன்னேற வேண்டும்.

**மதில்மேல் பூனை (ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தவித்தல்) :**

மேல் படிப்பும் படிக்க முடியாமல், குடும்பப் பொறுப்பையும் பார்க்க முடியாமல் என் மனம் மதில்மேல் பூனை போல தவிக்கிறது.

**நிறைகுடம் (தற்புகழ்ச்சி, பகட்டு இல்லாமல் வாழ்தல்) :**

ஜீவா அவர்கள் இறுதிவரை நிறைகுடமாகவே வாழ்ந்தார்.

**கைதூக்கிவிடுதல் (உரிய நேரத்தில் உதவுதல்):**

தொழிலில் நட்டம் ஏற்பட்டு கடன் எனும் புதைகுழியில் சிக்கித் தவித்தபோது, என் நண்பன் பணம் கொடுத்து என்னைக் கைதூக்கி விட்டான்.

**கண்ணாயிருத்தல் (ஒரே சிந்தனையோடு இருத்தல்):**

நாம் நமது இலட்சியத்தில், குறிக்கோளில் கண்ணாயிருக்க வேண்டும்.

**அவசரக்குடுக்கை (நிதானமின்றி இருப்பது):**

சுய தொழில் தொடங்கும்போது அவசரக்குடுக்கையாக இருத்தல் கூடாது. சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**முதலைக்கண்ணீர் : (பொய்யழுகை):**


என் நண்பன் பணத்தை செலவுசெய்து விட்டு, அதை எவரோ திருடிவிட்டதாக முதலைக்கண்ணீர் வடித்தான்.

**கானல்நீர் (இருப்பது போலத் தோன்றும் ஆனால் இருக்காது):**

படிப்பில் கவனமின்றி இருக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பும், நல்ல எதிர்காலமும் கானல்நீரே.

**வரைபடம் கொண்டு விவரிக்க.**

நீங்கள் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். வழி தெரியாத ஒருவர், உங்களிடம் வந்து நகலகத்திற்கு வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக் கொண்டு, அப்புதியவருக்கு வழிகாட்டுங்கள்".




- பேருந்து நிலையத்திலிருந்து வெளியே வந்தவுடன் இடதுபுறமாகத் திரும்பினால் பவணந்தித் தெருவை அடையலாம்.
- பவணந்தித் தெருவின் கடைசியில் வலதுபக்கமாகத் திரும்பினால் மேலைத் தேர்த் தெரு.
- காந்திசிலை அருகே இடதுபக்கமாகத் திரும்பினால் அறம்வளர்த்த சாலையை அடையலாம்.
- கீழைத் தேரைத் தெருவைக் கடந்தால் நேராக நகலகத்தை அடையலாம்.

**இலக்கியநயம் பாராட்டுக.**



சுதந்திரம் தருகின்ற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

\- நாமக்கல் கவிஞர்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***திரண்ட கருத்து :***

வீணான பெருமையையும், பணத்தால் வரும் சிறப்பையும் விட சுதந்திரமும், அதனால் வரும் மகிழ்ச்சியும் உயர்ந்தது.

அறத்துடனும், புகழுடனும் வாழ்ந்தாலும் சுதந்திரம் இருந்தால்தான் துயரங்களை எதிர்த்து வெல்ல முடியும்.

***மையக் கருத்து :***

சுதந்திரத்தின் மேன்மையை நாமக்கல் கவிஞர் விளக்கியுள்ளார்.

***எதுகை :***

அடி அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

பாடலிலுள்ள எதுகைச்சொற்கள் : சு**த**ந்திரம், ப**த**ம், இ**த**ம், நி**த**ம்

***மோனை :***

அடி அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

பாடலிலுள்ள மோனைச்சொற்கள் : **சு**தந்திரம் - **சு**கம்தரும்.

**ப**தம் - **பா**ர்த்தால். **நி**தம் - **நி**ச்சயம்.

***முரண் :***

பாடலில் எதிர்ச்சொற்கள் அமையத் தொடுப்பது முரண் எனப்படும்.

மகிழ்ச்சி **x** துயர் ஆகியன முரணாக அமைந்துள்ளன.

***இயைபு :***

அடிதோறும் ஈற்றுச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபு எனப்படும்.

வேறுண்டோ, கீழன்றோ எனும் சொற்களில் "ஓ" இயைபாக வந்துள்ளது.

***அணி :***


சுதந்திரத்தின் சிறப்புகளை உள்ளதை உள்ளவாறே கூறியிருப்பதால், இயல்பு நவிற்சி அணியாகும்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**சொல்லெடுத்துத் தொடர் அமைக்க.**

கீழுள்ள கட்டத்தினுள் நுழைந்து சொற்களை எடுத்தும் தேவையான சொற்களைச் சேர்த்தும் தொடர்கள் அமைக்க. (அடைபட்ட பகுதியில் உள்ள சொற்களைத் தவிர்க்கவும்)

(எ-கா.) மாணவர்கள் வகுப்பறையினுள் நுண்கலைகளையும் கற்க வேண்டும்.




1. *மாணவர்கள் விளையாட்டிலும் திறமையைக் காட்ட வேண்டும்.*
2. *விளையாட்டின் மூலம் உடலை உறுதி செய்ய வேண்டும்.*
3. *பள்ளிக்கூடத்தில் கரும்பலகையில் எழுதும்முன் ஆசிரியர் சிந்தனைசெய்ய வேண்டும்.*
4. *காமராசர் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கினார்.*
5. *கூடுதல் நேரத்தில் புத்தக வாசிப்புப் பழக்கம் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும்.*

படித்துப் பார்த்துப் படைக்க.

| | |
|---|---|
| பத்தாவது தடவையாக<br>விழுந்தவனுக்கு<br>முத்தமிட்டுச் சொன்னது பூமி<br>'ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ'<br>– ஈரோடு தமிழன்பன் | எப்போதும் மத்தாப்பு<br>கொளுத்தி விளையாடுகிறது<br>மலையருவி<br>– கழனியூரன் |

**நீ அணைக்கும் வரை**
**நான் அழுதுகொண்டே**
**இருப்பேன்**
**மெழுகுவர்த்தி.**

**கலைச்சொல்லாக்கம் :**

| | |
|---|---|
| உத்திகள் | - Strategies |
| சமத்துவம் | - Equality |
| தொழிற்சங்கம் | - Trade Union |
| பட்டிமன்றம் | - Debate |
| ஆளுமை | - Multiple Personality |



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

புனைபெயர் - Pseudonym

***மனப்பாடப் பாடல் :***

***புரட்சிக்கவி***

*சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு*
*தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி*
*நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்*
*நிறைஉழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?*
*கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்*
*கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?*
*பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்*
*போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?*
*- பாரதிதாசன்*

***பாவகை :*** *எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

***கூடுதல் வினாக்கள் :***

1. *மேடையில் வாழ்ந்த மனிதர் யார்?*

   *அ) அண்ணா ஆ) பெரியார் இ) காமராசர்* ***ஈ) ஜீவா***

2. *என் வாழ்வு என் கைகளில் என்று நம்பியவர் யார்? ஜீவா.*
3. *தொடக்கத்தில் காந்தியவாதியாகவும், சுயமரியாதை இயக்கப் போராளியாகவும், பொதுவுடைமை இயக்கத்தலைவராகவும் செயல்பட்டவர் ஜீவா.*
4. *பில்கணீயம் எனும் நூலைத் தழுவி இயற்றப்பட்ட காவியம்* ***புரட்சிக்கவி.***
5. *குயில் எனும் இலக்கிய இதழை நடத்தியவர் பாரதிதாசன்.*
6. *வாழ்வினில் செம்மையைச் சேர்ப்பவள் நீயே எனும் பாடலை இயற்றியவர் யார்? பாரதிதாசன்.*
7. *வாழ்வினில் செம்மையைச் சேர்ப்பவள் நீயே எனும் பாடல் புதுவையின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.*
8. *பாரதிதாசன் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடம் திருச்சிராப்பள்ளி.*
9. *உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு என்று குறிப்பிட்டவர் யார்? திருவள்ளுவர்.*
10. *சேர மன்னர்களைப் பற்றிப் பாடும் நூல் (எட்டுத் தொகை) பதிற்றுப்பத்து.*



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**11. பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தைப் பாடி குமட்டூர் கண்ணனார் பெற்ற பரிசு யாது?**

இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். அவரைப் புகழ்ந்து பாடி, உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பெற்றார் குமட்டூர் கண்ணனார்.

12. தமிழர் சிந்தனை வெளிப்பாட்டு வடிவங்களில் சிறப்பானதொரு வடிவம் பட்டிமன்றமாகும்.

13. "பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என்று பாடியவர் யார்?
பாரதிதாசன்.

14. பட்டிமண்டபத்துப் பாடறிந்து ஏறுமின் என்று குறிப்பிடும் நூல் எது?
மணிமேகலை.

15. பசுவய்யா என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர் சுந்தர ராமசாமி.

16. பாரதியார் மீது கொண்ட பற்றின் காரணமாக பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார்.

**17. பேசிடுக இலக்கணக் குறிப்பு தருக.**
வியங்கோள் வினைமுற்று.

18. பெட்டிக்குள் வந்தபின்
எல்லாக் காய்களும் சமம்தான்
சதுரங்கக் காய்கள்
என்ற ஜப்பானிய ஹைக்கூவின் குறியீடு
அ) பழங்கள் ஆ) தேங்காய்கள் **இ) மனிதர்கள்**
ஈ) பெட்டிகள்

***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் 8

உரைநடை : தாகூரின் கடிதங்கள்,
செய்யுள் : ஒவ்வொரு புல்லையும்,
தொலைந்து போனவர்கள் - அப்துல் ரகுமான்,

மனோன்மணீயம் - சுந்தரனார்,
துணைப்பாடம் : செவ்வி - நர்த்தகி நடராஜ்
இலக்கணம் : மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்



**பலவுள் தெரிக :**

1. பூஜை, விஷயம், உபயோகம் என்பவை முறையே ............ என்று தமிழில் வழங்கப்படும். **அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு.**
2. கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு. **இ) ஒலிமரபு**
3. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி? **இ) நடராசன்.**
4. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல் **ஆ. மனோன்மணீயம்.**
5. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக. **ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு, இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.**

**குறுவினா :**

**1. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**

மண்புழுவைப் போல ஒழுக்கத்துடனும், பணிவுடனும், பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் குணமும் வேறு யாருக்கு இருக்க முடியும் என நடராசன் கேட்கிறான்.

**2. நாட்டுப்புறத்திலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**

- நாட்டுப்புறத்தில் (கிராமத்தில்) எல்லாவற்றும் மேலான இயற்கையே சிறந்து விளங்குகிறது.
- நகரங்களில் மனித சமுதாயமே தலைதூக்கி நிற்கிறது. மனிதனின் கொடூர முகம் வெளிப்படுகிறது

**3. "நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" - தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

**தொடை நயங்கள்** : எதுகை - **நீளும், நீளாத**
மோனை - **நீளும், நீளாத**
இயைபு - **தொடரும் படரும்**
முரண் - **நீளும், நீளாத**


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**4. "கற்பேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?**

- கற்றேன் என்பாய். கற்றாயா? என படித்தவர்களைப் பார்த்து அப்துல் ரகுமான் கேட்கிறார்.
- புத்தகத்தை படிப்பது மட்டுமே படிப்பில்லை. வாழ்க்கைக் கல்வியே சிறந்த கல்வி என்று குறிப்பிடுகிறார்.

**5. பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும், கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆவது வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் - நிறுத்தற்குறியிடுக.**

"பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்" என்றும், "கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி" என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் இளம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.


**சிறுவினா :**

**1. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.**



- ஒவ்வொரு புல்லையும் பெயர்சொல்லி அழைப்பேன் என்றும் பறவைகளோடு எல்லை கடப்பேன் என்றும், கல்லையும் மண்ணையும் பெயர் சொல்லி அழைப்பேன் என்றும் அவர் கூறுவதிலிருந்து இயற்கை மீது அவர் கொண்ட நேசத்தை அறிய முடிகிறது.
- அன்பு காட்டுபவர்களுக்கு தோழனாகவும், அன்பு காட்டாதவரிடத்தும் அன்பை வெளிக்காட்டுவேன் என்று கூறுகிறார்.
- உலகம் ஒரு கடல் போல, அவர் அதில் ஒரு துளி போல இருக்க விரும்புகிறார். இதிலிருந்து அவர் மனிதநேயத்தை விரும்புகிறார் என்பது உறுதியாகிறது.

**2. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா - விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.**



- கற்றேன் என்பாய். கற்றாயா? என படித்தவர்களைப் பார்த்து அப்துல் ரகுமான் கேட்கிறார். புத்தகத்தை படிப்பது மட்டுமே படிப்பில்லை. வாழ்க்கைக் கல்வியே சிறந்த கல்வி என்று குறிப்பிடுகிறார்.
- பெற்றேன் என்பாய். எதைப் பெற்றாய்? வெறும் பிள்ளைகளைப் பெறுதல் மட்டுமே பெறுதல் அல்ல. கேள்வி ஞானம், பட்டறிவு பெறவேண்டும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**3. வாய்க்காலின் சிறப்புளாகக் குறிப்பிடுவன யாவை?**

**நடராசன் கூறிய வாய்க்காலின் பெருமை :**

- நமக்கு உணவளிக்கும் வயலுக்கு நீர் கொண்டு செல்வது வாய்க்கால்.
- கற்களை சிறு மணல் துகளாக மாற்றுகிறது.
- மழையை வயலுக்குக் கொண்டுவருகிறது.
- அருவியாக மலையிலிருந்து புறப்பட்டு, பல குகைகளில் புகுந்து, பூமியின் குடலாக நுழைந்தும், ஊற்றாய், ஆறாய் வருவது வாய்க்கால்.
- இரவுப்பகல் பாராது உழைக்கும் வாய்க்கால் போல உலகினில் உழைப்பவர் யாரேனும் உண்டோ என நடராசன் கூறினான்.

**4. தாமஸிகம் என்றால் என்ன?**

- பூசைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்குத் தொடர்பில்லை.
- சீக்கிரமே வாடிவிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு.
- மலர்ச்செப்பினுள் போவதும் வருவதும் அவற்றின் வேலை. இதைத் தாமஸிகம் அல்லது மெட்டீரியலிசம் என்று அழைக்கிறோம்.
- பூக்கள் தம் அழகாலும், மணத்தாலும் கவரும் ஆற்றல் உடையது. நம் நாட்டில் பூக்களிடம் அலட்சியமாக உள்ளனர்.

**5. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.**

சாந்தி : மாமரமே எப்படி இருக்கிறாய்?

மாமரம் : ஏதோ இருக்கிறேன்.

சாந்தி : ஏன் அப்படிக் கூறுகிறாய். உனக்கு என்ன குறை? அழகான இலைகள், இனிக்கும் கனிகள் என அனைத்தையும் தருகிறாய்.

மாமரம் : என்ன இருந்தாலும் மனிதர்களின் சுயநலத்தால் என்னால் சுவாசிக்கக் கூட முடியவில்லை.

சாந்தி : ஏன் என்ன ஆயிற்று?

மாமரம் : நீங்கள் சுவாசிக்க நாங்கள் உயிர்வளி தருகிறோம். நீங்களோ எங்களை வெட்டி உயிர்வலியைத் தருகிறீர்கள்.

சாந்தி : தவறுதான். நீ சொல்வது போல மரங்களின் தேவைகளை அனைவரும் உணர வேண்டும். அப்போதுதான் உயிர்வளி மற்றும் போதிய மழைப்பொழிவு, புவி குளிரும், பறவைகள், விலங்குகள் வாழ வழி கிட்டும்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**நெடுவினா :**

**1. நடராசனின் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.**

- தமிழின் முதல் பாவடிவ நூல் மனோன்மணீயம்.

**நடராசன் பேசிய புல்லின் பெருமை :**

- புல்லில் சிறு பூக்கள், பூக்களில் தேன்துளி.
- சிறுவர்களுக்கும், உலகில் உள்ள சிறு உயிர்களுக்கும் பரிவு காட்டும் புல்.
- புல்லைப் பார்த்து பரிவையும், பொறுமையையும் பிறர் கற்றுக்கொள்ள வேண்டும்.


**நடராசன் கூறிய வாய்க்காலின் பெருமை :**

- நமக்கு உணவளிக்கும் வயலுக்கு நீர் கொண்டு செல்வது வாய்க்கால்.
- கற்களை சிறு மணல் துகளாக மாற்றுகிறது.
- மழையை வயலுக்குக் கொண்டுவருகிறது.
- அருவியாக மலையிலிருந்து புறப்பட்டு, பல குகைகளில் புகுந்து, பூமியின் குடலாக நுழைந்தும், ஊற்றாய், ஆறாய் வருவது வாய்க்கால்.
- இரவுப்பகல் பாராது உழைக்கும் வாய்க்கால் போல உலகினில் உழைப்பவர் யாரேனும் உண்டோ என நடராசன் கூறினான்.

**நாங்கூழ்ப் புழுவின் பெருமைகள் :**

- ஓய்வில்லாமல் உழைத்து விவசாயிகளின் செல்வமாகத் திகழ்கிறது.
- எத்தகைய மண்ணாக இருப்பினும் உழுது உழுது மெழுகு போல நல்ல மண்ணாக மாற்றுகிறது.
- மேன்மக்கள் அடங்கி இருப்பதைப் போல புழுவும் மண்ணினுள் அடங்கி இருக்கிறது.
- புழுவின் சிறப்பை அறியாமல் எறும்புகளும், பூச்சிகளும் உண்கின்றன.
- நாங்கூழ்ப்புழு போல ஒழுக்கமும், பொறுமையும் யாருக்கு உள்ளது என்று நடராசன் புகழ்ந்து உரைக்கிறான்.

**2. சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**



**சிதறிய கடிதங்கள் - இரவீந்திரநாத் தாகூர்**

- "பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்" என்றும், "கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி" என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் இளம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.
- நாட்டுப்புறத்தில் (கிராமத்தில்) எல்லாவற்றும் மேலான இயற்கையே சிறந்து விளங்குகிறது.
- நகரங்களில் மனித சமுதாயமே தலைதூக்கி நிற்கிறது. மனிதனின் கொடூர முகம் வெளிப்படுகிறது.
- ஐரோப்பாவில் மனிதனுக்கு மட்டுமே முக்கிய இடம். பிற உயிர்களைச் சாதாரணமாக நினைக்கிறார்கள்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

- பூசைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்குத் தொடர்பில்லை.
- சீக்கிரமே வாடிவிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு.
- மலர்ச்செப்பினுள் போவதும் வருவதும் அவற்றின் வேலை. இதைத் தாமஸிகம் அல்லது மெட்டீரியலிசம் என்று அழைக்கிறோம்.
- பூக்கள் தம் அழகாலும், மணத்தாலும் கவரும் ஆற்றல் உடையது. நம் நாட்டில் பூக்களிடம் அலட்சியமாக உள்ளனர்.
- தேர்விற்காக சரித்திரப் பாடம் படிக்கிறோமே தவிர, தேசப்பற்று காரணமாகப் படிப்பதில்லை.
- இக்கடிதத்தின் மூலம் இயற்கையின் மீது அலட்சியம் காட்டுவதைத் தவிர்த்து, நேசிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

**3. நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.**

**செவ்வி - நர்த்தகி நடராஜ்**

- மதுரையில் பிறந்து, நாட்டியத் திறமையால் உலகம் முழுதும் கோடிக்கணக்கான இரசிகர்களை உடையவர்.
- வைஜெயந்திமாலாவின் குரு கிட்டப்பாவிடம் நாட்டியம் கற்றார். அவரே நடராஜ் அவர்களுக்கு நர்த்தகி எனும் பட்டத்தைச் சூட்டியவர்.
- பரதத்தில் பெண்மையை உணர்த்தும் நொடி, வார்த்தைகளால் சொல்ல முடியாத உணர்வு ஏற்படும்.
- சிலப்பதிகாரத்தில் 11 வகையான ஆடற்கலைகள் பற்றிய குறிப்பு உள்ளது. அதிலும் முக்கியமானது வேளிர் நடனம்.
- ஜப்பானில் தேவாரம், திருவாசகப் பண்ணில் நடனமாடியபோது, மொழி அறியாதபோதும் ஜப்பான் மக்கள் கண்கலங்கி கரகோஷம் எழுப்பினர்.



- சங்கப்பாடல்கள், திவ்விய பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவராட்டத்தை நடனம் மூலம் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.
- துயரம் வரும்போது ஒரு நடனமாடி துயரத்தைப் போக்கிக் கொள்வார்.
- தாயார் இவரைக் கைவிட்டாலும், இவரிடம் பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவரை அம்மா என்று அழைக்கும்போது நெகிழ்கிறார்.
- திருநங்கை என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் இவரே.
- கலைமாமணி, சங்கீத நாடக அகாதெமி, தொலைக்காட்சியின் ஏ கிரேடு விருது, சிறந்த கலைஞர், பெரியார் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டம் போன்ற பல்வேறு விருதுகளையும், பட்டங்களையும் பெற்றவர் நர்த்தகி நடராஜ்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இலக்கணம் - மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்**

**1. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.**

1. பொதுவானவை **(General)**
2. நிறுத்தற்குறியீடுகள் தொடர்பானவை **(Punctuations)**
3. இடைவெளி தரவேண்டியவை **(Spacing)**
4. இணைக்க வேண்டியவை **(Alignment)**
5. எழுத்து வடிவம் **(Type/Font)** என்பவையாகும்.

**2. அச்சுப்படி திருத்துபவரின் பணிகள் :**

மூலப்படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகியுள்ளனவா என்று ஒவ்வொரு வரியையும் படித்தக் கவனித்தல் வேண்டும்.

அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ, உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி :**

**1. பொறுமையைப் பூணுங்கள்: பொறுமையின் ஆற்றலை உணருங்கள்: உணர்ந்து உலகை நோக்குங்கள் - ஒரே தொடராக மாற்றுக.**

பொறுமையைப் பூணி, அதன் ஆற்றலை உணர்ந்து, உலகை நோக்குங்கள்.

**2. எவையேனும் இரண்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுச் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.**

நோக்குங்கள், உணருங்கள், எழுங்கள் - தன்மைப் பன்மை வினைமுற்றுகள்.

**3. தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க. அழைக்கப்படுகிறார் - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.**

தமிழ்த்தென்றல் என்று அழைக்கப்படுவர் திரு.வி.க.

**4. ஞாயிற்றொளி - புணர்ச்சி விதி கூறுக.**

ஞாயிற்றொளி = ஞாயிறு + ஒளி

ஞாயிற் + ஒளி (உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும் விதிப்படி உகரம் கெட்டது)

ஞாயிற்ற் + ஒளி (தன்னொற்றிரட்டல் விதிப்படி ற் மிகுந்தது)

ஞாயிற்றொளி (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே விதிப்படி ற் + ஒ = றொ ஆயிற்று)

**5. எண்ணும்மைத் தொடர்கள் இரண்டனை எடுத்து எழுதுக.**

☞ மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்,



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

☞ இந்தியாவும் விடுதலையும்,

☞ மேடைப் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும்.

**மொழிப்பயிற்சி :**

தமிழாக்கம் தருக.

1. An eye for an eye ends up making the whole world blind.
   *கண்ணுக்குக் கண் என்பது முழு உலகையும் குருடாக்கிவிடும்.*
2. You must be the change you wish to see in the world.
   *நீங்கள் உலகில் பார்க்க விரும்பும் மாற்றமாக நீ இருக்க வேண்டும்.*
3. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
   *பலவீனமானவர் ஒருபோதும் மன்னிக்க முடியாது. மன்னிப்பு என்பது பலசாலிகளின் பண்பு.*
4. Nobody can hurt me without my permission.
   *என் அனுமதியின்றி என்னை யாரும் காயப்படுத்த முடியாது.*
5. You must not lose faith in humanity. Humanity is an ocean; if a few drops of he ocean are dirty, the ocean does not become dirty.
   *மனிதநேயத்தின் மீதான நம்பிக்கையை இழக்காதீர். மனிதநேயம் கடல் போன்றது. சில துளிகள் அழுக்கடைந்தாலும், முழுக் கடலும் கெட்டுப்போவதில்லை.*

**கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக. கதையில் காணலாகும் எவையேனும் ஐந்து பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

*அலுவலகத்துக்குள் நுழைகையில் போன் அடித்தது. எடுத்துப் பேசினாள். மறுமுனையில் "உடனே ஆபிஸ்க்கு லீவ் போட்டுட்டு என் ஆபிஸ்க்கு வா கவி. இன்ஷூரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். உன் போட்டோவையும் சஞ்சுவின் போட்டோவையும் எடுத்துட்டு வா" என்று சொல்லி முடித்ததும் போனைத் துண்டித்தான் செந்தில். ஏற்கெனவே தன் ஆபிஸில் நடக்க இருக்கும் ஆடிட்-ஐ நினைத்துக் கொண்டிருந்த அவளுக்குச் செந்திலின் போன் பதற்றத்தையும் குழப்பத்தையும் தந்தது. குழப்பத்துடன் போனை வைக்கையில் மறுபடியும் போன் ஒலித்தது. இம்முறை சஞ்சுவின் பள்ளி நம்பர். ஒரு நொடி பதற்றமாகிவிட்டது. எதற்கு அழைக்கிறார்களோ? என்று பயந்தபடி போனை எடுத்தேன். போனில் சஞ்சுவின் குரல். "அம்மா நான்தான்" என்றான். "என்னடா, உடம்புக்கு எதாவதா?" என்றேன் டென்ஷனை மறைத்தபடி. "அதெல்லாம் ஒன்னுமில்லைம்மா. மிஸ் கிட்ட ஸ்பெஷல் பர்மிஷன் கேட்டு உனக்கு போன் பண்றேன். காலையிலேயே சொல்ல நினைச்சேன். மறந்திட்டேன். ஸாரிம்மா என்றான். எதுக்குடா சஞ்சு ஸாரி என்றேன். இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா" என்றான். அட ஆமாம். ஜூலை பத்து. இப்படியா மறப்பேன். செந்தில்கூட நினைவில் வைத்து வாழ்த்தவில்லை. சஞ்சு கொஞ்சும் குரலில் "ம்மா நைட்கூட ஞாபகம் இருந்துச்சு காலைல டக்குனு மறந்துட்டேன். சாரிம்மா ஹாப்பி பர்த்டே டூ யூ" என்றான். ஒரு நொடி எதுவும் பேச முடியாமல் திக்கிவிட்டேன். அவனே தொடர்ந்து "அம்மா உனக்காக ஒரு சூரியகாந்திப்பூ வரைஞ்சி வச்சிருக்கேன். ஈவ்னிங் சீக்கிரமா வா தரேன் ஓகேவா?" என்றான். "தாங்க்ஸ்டா செல்லம், தாங்க்யூ ஸோ மச்" என்றேன். அந்த நாளின் சுமைகள் எல்லாம் கரைந்து மனசு நெகிழ்ந்து உருகியது. ரயில், அலுவலகம், செந்தில் என எல்லாம் மறைந்து போய், நானும் சஞ்சுவும் கைகள் கோர்த்து நடப்பதுபோல இருந்தது.*



www.Padasalai.Net

செந்தில் : உடனே ஆபிஸ்க்கு லீவ் போட்டுவிட்டு என் ஆபிஸ்க்கு வா கவி. இன்ஷூரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். உன் போட்டோவையும், சஞ்சுவின் போட்டோவையும் எடுத்துக்கிட்டு வா.

கவி : (குழப்பத்துடன் போனை வைக்கிறாள்).

சஞ்சு : அம்மா நான்தான்.

கவி : என்னடா, உடம்புக்கு எதாவதா?

சஞ்சு : அதெல்லாம் ஒன்னுமில்லையம்மா. மிஸ் கிட்ட பர்மிஷன் கேட்டு உனக்கு போன் பண்றேன். காலையிலேயே சொல்ல நினைச்சேன். மறந்திட்டேன். ஸாரிம்மா.

கவி : எதுக்குடா சஞ்சு சாரி?

சஞ்சு : இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா

கவி : அட ஆமாம். ஜூலை பத்து. இப்படியா மறப்பேன். செந்தில் கூட நினைவில் வைத்து வாழ்த்தவில்லை.

சஞ்சு : ம் மா நைட்கூட ஞாபகம் இருந்துச்சு காலைய டக்குனு மறந்துட்டேன். சாரிம்மா ஹாப்பி பர்த்டே டு யூ என்றான்... அம்மா உனக்காக ஒரு சூரியகாந்திப்பூ வரைஞ்சி வச்சிருக்கேன். ஈவ்னிங் சீக்கிரமா வா தரேன் ஓகேவா?

கவி : தாங்க்ஸ்டா செல்லம், தாங்க்யூ ஸோ மச்.

**பத்தியிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் :**

ஆபிஸ் - அலுவலகம்
லீவ் - விடுப்பு
இன்ஷூரன்ஸ் - காப்பீடு
பேப்பர் - காகிதம்
போட்டோ - புகைப்படம் / நிழற்படம்
பர்மிஷன் - அனுமதி.

***உங்கள் பள்ளியில் திரு. அப்துல்கலாம் அவர்களின் நினைவுதினம் கொண்டாடப்படுகிறது. பள்ளிக்கு அருகில் உள்ள கல்லூரியின் மாணவர்கள் திரட்டிய நிதியைக் கொண்டு பள்ளியின் உயர்வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் திருக்குறள் கையடக்கப் புத்தகம் ஒன்றும், நில வரைபடப் புத்தகம் ஒன்றும் பரிசளிக்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளியின் சார்பாக நன்றி கூற ஒருபக்க அளவில் நன்றியுரை ஒன்றை எழுதுக.***

மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பள்ளி தாளாளர் அவர்களே, பள்ளி முதல்வர் அவர்களே, இருபால் ஆசிரியப் பெருமக்களே, முத்தான மாணவ மணிகளே உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இந்த நிகழ்ச்சிக்கு உங்கள் அனைவரையும் வருக வருக என இருகரம் கூப்பி வரவேற்கிறேன்.

இன்று ஜூலை 27ஆம் நாள். நம் முன்னாள் குடியரசுத்தலைவர் மேதகு அப்துல் கலாம் அவர்களின் நினைவு நாள். அதை முன்னிட்டு பல்வேறு நற்பணிகளை நம் பள்ளிக்கு அருகில் உள்ள கலாம் பொறியியல் கல்லூரி சகோதர சகோதரிகள் நிதியைத் திரட்டி, நம் பள்ளியில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் திருக்குறள் கையடக்கப் புத்தகம் ஒன்றும், நிலவரைபடம் ஒன்றும் அளித்திருக்கிறார்கள். இத்தகு உதவியைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

நம் கனவு நாயகன், ஏவுகனையின் தந்தை, இளைஞர்களின் இதயத்துடிப்பு டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான நூல் திருக்குறள். அதனை நமக்காக நம் சகோதரர்கள் அளித்திருக்கிறார்கள். அதனைப் படிப்பதோடு அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை நம் வாழ்வில் பின்பற்றி, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

இத்தகு நூல்களை நமக்காக வழங்கிய கலாம் பொறியியல் கல்லூரியில் பயிலும் நம் சகோதர சகோதரிகளுக்கு எங்கள் பள்ளியின் சார்பாகவும், மாணவர்கள் சார்பாகவும் இதயங்கனிந்த நன்றிகளை காணிக்கையாக்கிக் கொள்கிறேன். மிக்க நன்றி.

**இலக்கிய நயம் பாராட்டல்**

இரண்டாயிரமாண்டு நீளமுள்ள கவிதையை ஈன்ற
மூதாயியைத் தேடியலைந்த களைப்பில் பறவை
ஒருகாலத்தில் தன் தாகம் தணித்த
மண்பானையைத்தேடி அல்லலுற்றது.

பாடப்புத்தகத்தில் படம்பார்த்துச் சொன்ன
கதைக்குள்ளிருந்து நீரூற்று எதுவும் பீறிடவில்லை
ஐவகை நிலங்களையும் அலகில் கொத்தி
அடைகாக்க இன்னொரு இடமற்றுப் போக'.

நீலவண்ணக் கடற்பரப்பில்
அந்தப் பறவை ஒரு முட்டை இட்டது.
அதன் குஞ்சு பொரிப்பில்
ஆயுதமும் புல்லாங்குழல் மறுகையுமாய்
அணங்கொருத்தி உதித்தெழுந்தாள்.

வயல்வெளியில் சலசலத்துத் திரிந்த
மருதயாழின் ஓசை வழிந்தோட
கால்கள் சுழன்றாடிய விறலிக் கூத்தின்முன்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பிரபஞ்சமே தன்னைப் புரிந்துகொண்டது.



பாணனின் கோப்பை
இப்போது காலியாயிருந்தது.
தன் உடலிலிருந்து கிள்ளிப் பறித்த பூவைக்
குழந்தைக்குத் தந்து வலியில் மூழ்கிய
பச்சைத் தாவரத்தின் கண்களில்
ஒருதுளி ரத்தம் தேங்கியிருந்தது.

சங்கக் கவிதையின் எழுத்தொன்றைத்திறந்து
காக்கைப்பாடினி வெளியேவந்தாள்.

ஆறாம்நிலத்தில் துளிர்த்த அறிவியல்தமிழி நீயென
அருகே வந்தவள் முத்தம் தருகையில்
பறவைகள் தொலைந்துபோன பூமியில்
குளிரூட்டப்பட்ட அறைக்குள் உட்கார்ந்து
கணிப்பொறித் திரையில்
என் சின்னமகள்
ஒரு காக்கையை வரைந்து கொண்டிருந்தாள்

~ **ஹெச்.ஜி. ரசூல்.**

**திரண்ட கருத்து :**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கவிதை எழுதிய தமிழ்மூதாட்டி ஔவையாரைத் தேடிஅலைந்த களைப்பில் தன் முன்னோர் நீர் அருந்திய மண்பானையைத் தேடி அலைந்தது பறவை.

பாடப்புத்தகத்தில் இருந்தது போன்று அந்தப்பானையில் நீர் ஒன்றும் இல்லை. ஐவகை நிலங்களையும் காக்க வாய்ப்பற்றுப் போனது.

நீல நிறமான கடற்பரப்பில் அந்தப் பறவை ஒரு முட்டையிட்டது. அது குஞ்சு பொறிக்கையில் ஆயுதமும், புல்லாங்குழலையும் கையில் வைத்துக்கொண்டு பெண் ஒருத்தி வந்தாள்.

முன்பு வயல்வெளியெங்கும் சலசலத்த மருதயாழின் ஓசைகேட்டு ஆடிய விறலிக்கூத்திற்காக உலகமே மயங்கியது.

முன்பு நிறைந்து வழிந்த பாணனின் கோப்பை இப்போது வெறுமையாக இருந்தது.

தாவரத்தின் பூவைப் பறித்ததால் வலிமிகுதியால் ஒருதுளி இரத்தம் தேங்கியிருந்தது.

சங்கப் பாடலொன்றை கவிஞர் படித்தபோது காக்கைப் பாடினியின் பாடல் இடம்பெற்றது. அருகில் வந்து பார்த்துச் சென்ற அவரது செல்ல மகள் பறவைகள் அற்ற இவ்வுலகில் கணினியில் காக்கையை வரைந்துகொண்டிருந்தாள்.


திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**மையக் கருத்து :**

இயற்கைச்சூழல் சீர்குலைந்து போன இன்றையநிலையில் பழமையை எண்ணிப் பார்க்கிறார் கவிஞர் ஹச்.ஜி.ரசூல்.

**எதுகை :**

அடி அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

பாடலிலுள்ள எதுகைச்சொற்கள் : இரண்டாயிரமாண்டு - ஒருகாலத்தில், மருதயாழ் - பிரபஞ்சம்.

**மோனை :**

அடி அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

பாடலிலுள்ள மோனைச்சொற்கள் : மூதாயி - மண்பானை , அந்த - அதன் - ஆயுதம் - அணங்கு, பாணனின் - பச்சை, ஆறாம் - அருகே, குளிரூட்டப்பட்ட - கணிப்பொறி.

**இயைபு :**

அடிதோறும் ஈற்றுச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபு எனப்படும்.

அல்லலுற்**றது** - முட்டை இட்**டது** - புனைந்து கொண்**டது** - காலியாயிருந்**தது** - தேங்கியிருந்**தது**.

உதித்தெழுந்**தாள்** - வந்**தாள்** - சின்ன **மகள்** - கொண்டிருந்**தாள்**.

ஆகிய சொற்களில் அது மற்றும் ஆள் என்பன இயைபாக இடம்பெற்றுள்ளன.

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



மார்கழி மாதம்
மாலையில் ஓர்நாள்
கதகதப்பாய் உடையணிந்தும்
கடுங்குளிரில் நடுநடுங்கி,
விரைத்துப் போன அவ்வேளையில்
நாயொன்றைக் கண்டேன்.
சட்டென்று பேகனின் நினைவுவர
கம்பளி போர்த்த
அருகே சென்றேன் - அதற்குக் குளிருமென.
வேண்டாமென்றே மறுத்தது.
குளிரவில்லையா உனக்கென்றேன்.
ஆண்டவன் கொடுத்த உடையிருக்க
அடுத்தவர் கொடுக்கும் உடையெதற்கு?
என்றே வினவி சட்டென
நடந்தது அந்நாய்.



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**கலைச்சொல் அறிவோம் :**

| | |
|---|---|
| நாங்கூழ்ப்புழு | - Earthworm |
| உலகமயமாக்கல் | - Globalisation |
| முனைவர் பட்டம் | - Doctor of Philosophy (Ph.D.) |
| பொருள்முதல் வாதம் | - Materialism |
| விழிப்புணர்வு | - Awareness |
| கடவுச்சீட்டு | - Passport |

**கூடுதல் வினாக்கள் :**

1. நாட்டுப்புறங்களில் (கிராமங்களில்) சிறந்து விளங்குவது எது?

அ) நாகரீகம் ஆ) செயற்கைத் தன்மை **இ) இயற்கை**

ஈ) நாட்டுப் பாடல்கள்

2. பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் **தாகூர்.**
3. ரவீந்திரநாத் தாகூர், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஆண்டு **1913**
4. தாகூர் **கீதாஞ்சலி** நூலிற்காக இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார்.
5. தாகூரின் கடிதங்களை தமிழில் மொழியாக்கம் செய்தவர்

**த. நா. குமாரசுவாமி.**

6. சாந்தி நிகேதனில் உள்ள மரம் **பியால.**
7. இன்குலாபின் கவிதைகள், முழுமையாக **ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்** என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.
8. வானம்பாடிக் கவிஞர்களுள் ஒருவர் **அப்துல் ரகுமான்.**
9. அப்துல் ரகுமானின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிதைத் தொகுப்பு **ஆலாபனை.**
10. கவிக்கோ என்னும் புகழ்மொழிக்குரியவர் **அப்துல் ரகுமான்.**
11. இலக்கணக் குறிப்பு தருக. உடை அணிந்தேன்

**இரண்டாம் வேற்றுமைத் தொகை.**

உடையை அணிந்தேன். ஐ எனும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்ததால் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகும்.

12. சுந்தரனாருக்கு சென்னை மாகான அரசு வழங்கிய பட்டம் **ராவ் பகதூர்.**
13. மனோண்மணீயம் எனும் நாடக நூலை இயற்றியவர் **சுந்தரனார்.**
14. மனோண்மணீயத்தின் கிளைக்கதை **சிவகாமியின் சரிதம்.**



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

15. இரகசிய வழி எனும் நூலை இயற்றியவர் **லிட்டன் பிரபு.**

16. பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர் **ஆலப்புழை.**

17. இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர் **பிரித்திகா யாஷினி.**

18. நர்த்தகி நடராஜ் **கிட்டப்பா** விடம் பரதம் கற்றார்.

19. நடராஜிக்கு நர்த்தகி எனும் பட்டத்தைச் சூட்டியவர் **கிட்டப்பா.**

20. செவ்வி எனும் சொல்லின் பொருள் **பெண்.**

21. லோக் அதாலத் நீதிபதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருநங்கை **ஜோயிதா மோண்டல் மோகி.**

22. தமிழ்நாட்டில், கல்வித் துறையில் மூன்றாம் பாலினப் பிரிவு உருவாக்கப்பட்ட பிறகு பள்ளிப்படிப்பை முடிக்கும் முதலாமானவர் **தாரிகா பானு.**

23. செவ்வி என்னும் சிறுகதையின் ஆசிரியர் **நர்த்தகி நட்ராஜ்.**


24. 2011ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலை பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திருநங்கை **பிரித்திகா யாஷினி.**

25. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.

# - பத்திகளுக்கிடையில் வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடையில் தருக.

^ - சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க.

 - சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும்.

 - இடப்பக்கம் தள்ளவும்.

DT - சொல்லையோ எழுத்தையோ நீக்குக.

 - ஒற்றை மேற்கோள் இடுக.

 - இரட்டை மேற்கோள் இடுக.

 - பத்திகளை இணைக்கவும்.

***



திரு. ச. அருள் நேரு, முதுகலைத் தமிழாசிரியர். 9894760547

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# பகுபத உறுப்பிலக்கணம்

| இடைநிலைகள் | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |

| விகுதிகள் | |
|---|---|
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன், கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம், ஏம், அம், ஆம், ஓம், கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர். ஈர், மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்றுவிகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்றுவிகுதிகள் | அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்றுவிகுதிகள் | அர், ஆர், ப, மார், கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்றுவிகுதிகள் | து, று, டு |
| படர்க்கை பலவின்பால் வினைமுற்றுவிகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| தெரிநிலைப் வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| தொழிற்பெயர் விகுதிகள் | அல், தல், அம், ஐ, கை |

**சந்தி : க், ப், த்**

**பகுதி** - பகுபதத்தின் முதல் உறுப்பு - கட்டளையிடுவது போல இருக்கும்.
**விகுதி** - பகுபதத்தின் இறுதி உறுப்பு - திணை, பால், எச்சம், முற்று, தொழிற்பெயர் காட்டும்.
**சந்தி** - கொடுக்கப்பட்ட சொல்லில் பகுதிக்கு அருகில் இருக்கும் மெய்யெழுத்து.

**இடைநிலை** - கொடுக்கப்பட்ட சொல்லில் பகுதி, சந்திக்கு அடுத்து உயிர்மெய்யைப் பிரித்தால் வருவது. காலம் காட்டும்.
**சாரியை** - விகுதிக்கு முன், விகுதி போலவே அமைவது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**விகாரம்** - பகுதி, சந்தி, இடைநிலை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம்.

சான்று 1 : கண்டான் என்பதில் காண் என பகுதி வந்திருக்க வேண்டும். எனவே காண் பகுதி. கொடுக்கப்பட்ட சொல்லில் கண் என வந்துள்ளது எனவே அதனை அடைப்புக்குறி() இட்டுக் காட்ட வேண்டும். காண்(கண்) + ட் + ஆன்

சான்று 2 : தந்தான் = தா(த) + த்(ந்) + த் + ஆன்

தா - பகுதி, த எனக் குறுகியது விகாரம்.

த் மட்டுமே சந்தியாக வரும். ஆனால் ந் இடம்பெற்றுள்ளது. எனவே த் சந்தி,

ந் ஆனது விகாரம்.

**பிரிக்கும் முறை :**

பகுதி : முதலில் கொடுக்கப்பட்ட சொல்லில் உள்ள கட்டளை சொல்லைப் பிரிக்கவும். கட்டளைச் சொல் இல்லையெனில் கட்டளைச் சொல்லை உருவாக்கவும்.

சந்தி : கட்டளைச் சொல்லை அடுத்து ஏதேனும் மெய்யெழுத்து இருந்தால் சந்தி.

இடைநிலை : சந்திக்கு அடுத்து உள்ள உயிர்மெய்யை பிரிக்கவும். மெய் - இடைநிலை.

விகுதி : எஞ்சியுள்ள உயிரெழுத்துடன் அதற்கடுத்த எழுத்தைச் சேர்த்தால் விகுதி கிடைக்கும்.

சான்று :

கண்டான் = காண்(கண்) + ட் + ஆன்

காண் - பகுதி, கண் எனக்குறுகியது விகாரம், ட் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

---

## இலக்கணக் குறிப்பை எளிமையாகக் கண்டறிவது எப்படி?

**(முக்கியமானவை மட்டும்)**

1. கொடுக்கப்பட்ட சொல்லை இரண்டாகப் பிரித்தால் இடையில் மை வந்தால் பண்புத்தொகை

சான்று : செந்தமிழ் = செம்மை + தமிழ்.

2. முக்காலம் காட்டுவது வினைத்தொகை. முதல் பாதி கட்டளை போலவும், இரண்டாம் பாதி பொருளின் பெயர் போலவும் அமையும்.

சான்று : அலைகடல்

3. அல், தல், அம், ஐ, கை போன்றவற்றில் முடிவது தொழிற்பெயர்.

சான்று : படித்தல், அழுகை.

4. முடிவடையாத சொல் எச்சம் எனப்படும். எச்சம் அருகில் பெயர்ச் சொல் வந்தால் பெயரெச்சம்.

சான்று : ஓடிய குதிரை. (ஓடிய - எச்சம்)

எச்சம் அருகில் வினைச்சொல் வந்தால் வினையெச்சம்.

சான்று : படித்து முடித்தான். (படித்து - எச்சம்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. செய்தவனையும், செயலையும் ஒருங்கே ஒரே சொல்லில் அமைப்பது வினையாலணையும் பெயர். (அவன், அவர் என முடியும்)

சான்று : படித்தவன், வாங்கியவர்.

6. ஒரு சொல்லில் உயிரெழுத்து சொல்லின் முதலில் மட்டுமே வரும். சொல்லின் இடை அல்லது கடையில் வராது. அப்படி வந்தால் அது அளபெடை.

- சொல்லின் இடை அல்லது கடையில் வந்த உயிரெழுத்து இ என்றால் அது சொல்லிசை அளபெடை.

சான்று : உரனசைஇ, தழீஇ.

சொல்லின் இடை அல்லது கடையில் அ அல்லது உ என்ற உயிரெழுத்து வந்தால் சொல்லை இரண்டு இரண்டு எழுத்துகளாகப் பிரிக்கவும் (அலகிடுதலில் பிரித்தது போல).

- இரண்டாகப் பிரிந்தால் செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை.

சான்று : கெடாஅ, படாஅம்.

- மூன்றாகப் பிரிந்தால் இன்னிசை அளபெடை

சான்று : கெடுப்பதூஉம், கொடுப்பதூஉம்.

7. வேற்றுமை உருபுகள் மறைந்து வந்தால் வேற்றுமைத் தொகை.

சான்று : மாலை சூடினாள் (மாலையைச் சூடினாள்) இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஐ

கைகொடுத்தான் (கையால் கொடுத்தான்) மூன்றாம் வேற்றுமைத் தொகை (ஆல்)

8. ஒரே சொல் பலமுறை வந்து, பிரித்தால் பொருள் தருவது அடுக்குத் தொடர்.

சான்று : அலை அலை, பாம்பு பாம்பு.

9. ஒரே சொல் பலமுறை வந்து, பிரித்தால் பொருள் தராதது இரட்டைக் கிளவி.

சான்று : சலசல, படபட.

10. சொல்லின் இடையே எழுத்து ஏதேனும் குறைந்து வந்தால் இடைக்குறை.

சான்று : இலாத - இல்லாத என்பதன் இடைக்குறை.

11. சொல்லானது க, இய, இயர் ஆகியவற்றில் முடிந்தால் வியங்கோள் வினைமுற்று.

சான்று : வாழ்க, வாழிய.

12. ஒரு சொல்லானது வேறு சொல்லாக மறுவி (மாறி) வந்தால் மரூஉ

சான்று : நுந்தை (நும் தந்தை என்பதன் மரூஉ)

13. மிகுதி எனும் பொருளில் வருவது உரிச்சொல் தொடர். சால, தவ, நனி, கடி போன்றன சொல்லில் வரும்.

சான்று : சாலச் சிறந்தது, தவச் சிறிது, கடிநகர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. ஒரு எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறொரு எழுத்து வந்து பொருள் மாறவில்லை எனில்

போலி.

சான்று : பந்தல் - பந்தர் - ஈற்றுப்போலி

மஞ்சு - மைஞ்சு - முதற்போலி

அரசன் - அரைசன் - இடைப்போலி

ஐந்து - அஞ்சு - முற்றுப்போலி

---

பிரித்துப் புணர்ச்சி விதி தருக. (முக்கியமானவை மட்டும்)

1. கொடுக்கப்பட்ட சொல்லை இரண்டாகப் பிரிக்கவும்.

2. எந்தெந்த விதிகளின் படி அவ்வாறு மாறியது என்பதைக் காட்ட வேண்டும்.

புணர்ச்சி விதிகள் :

1. உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - நிலைமொழி மெய்யாக இருந்து வருமொழியின் முதலில் உயிர்வந்தால் உயிரும் மெய்யும் இணைந்து உயிர்மெய் ஆகும். சான்று : வானம் + எல்லாம் = **வானமெல்லாம்**

2. உயிர் வரின் உக்குரல் மெய்விட்டோடும் - நிலைமொழி ஈற்றெழுத்து குற்றியலுகரச்சொற்கள் (கு, சு, டு, து, பு, று) வந்து, உயிராக இருந்து, வருமொழியில் முதலில் உயிரெழுத்து வந்தால் குற்றியலுகரத்திலுள்ள வல்லின மெய்யை விட்டுவிட்டு உகரம் சென்றுவிடும்.

   சான்று : ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள் (கு = க் + உ)

   ஆங்க் + அவற்றுள்

3. ஈறுபோதல் - நிலைமொழி ஈற்றெழுத்து மை ஆக இருப்பின் அது நீங்கிவிடும்.
   சான்று : கருமை + விழி = கருவிழி.

4. முன்னின்ற மெய் திரிதல் - நிலைமொழி ஈற்று மெய், வருமொழி முதலோடு ஒன்றுவதற்காக நிலைமொழி ஈற்று மெய் திரியும்.

   சான்று : செம்மை + தமிழ் (ஈறுபோதல்)

   செம் + தமிழ் = செந்தமிழ்

5. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும். - நிலைமொழியில் ஒரு குறில், அதற்கடுத்து மெய், வருமொழியில் உயிர் வந்தால் அந்த மெய்யானது இரட்டும்.
   சான்று : உள்ளொன்று = உள் + ஒன்று

   உள் + ள் + ஒன்று



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் - பூ என்ற சொல் நிலைமொழி வந்து வருமொழியோடு புணரும்போது நிலைமொழிக்கு இனமான மெல்லினம் தோன்றும்.

சான்று : பூ + காற்று பூங்காற்று (கா = க் + ஆ. க் இனவெழுத்து ங்)


7. உடம்படுமெய்ப் புணர்ச்சி - நிலைமொழி ஈற்றிலும், வருமொழி முதலிலும் உயிரெழுத்து வந்தால், அவற்றை இணைக்க மெய்யெழுத்து வரும். ய் அல்லது வ் உடம்படு மெய்யாக வரும்.
நிலைமொழியில் இ, ஈ, ஐ வந்தால் ய் வரும்.
நிலைமொழியில் பிற உயிரெழுத்துகள் வந்தால் வ் வரும்.
ஏ வந்தால் வ் அல்லது ய் வரும்.

**நூற்பா** : இஈஐ வழி யவ்வும்,
ஏனை உயிர்வரின் வவ்வும்,
ஏ முன் இவ்விருமையும்.

சான்று : தனியாழி = தனி +ஆழி
தனி + ய் + ஆழி (னி + ன் இ. இஈஐ வழி யவ்வும்).

8. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் - நிலைமொழி ஈற்றில் உயிர்வந்து, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் மிகும்.

சான்று : வாழைக்காய் = வாழை + காய்
வாழை + க் + காய்






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பொதுத்தேர்வு வினாத்தாள்**

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ் மே - 2022

கால அளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

**1. பொருத்தமான இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்.**

i. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ii. பவணந்தி முனிவர் - நன்னூல்
iii. சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
iv. இந்திரன் பேச்சுமொழியும், கவிதைமொழியும்.

அ) ii, iv ஆ) I, ii இ) I, iii ஈ) I, iv

**2. "இனிதென" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

ஆ) உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

இ) உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும், முற்றும் அற்று ஒரோ வழி.

ஈ) தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும்.

**3. துன்பப்படுபவர் :**

அ) பொருளைக் காக்காதவர் ஆ) தீக்காயம் பட்டவர்
இ) நாவைக் காக்காதவர் ஈ) தீயினால் சுட்டவர்.

**4. ஒப்புரவு என்பதன் பொருள் :**

அ) ஊருக்கு உதவுவது ஆ) அடக்கமுடையது இ) செல்வமுடையது
ஈ) பண்புடையது.

**5. சீறாப்புராணத்தின் ஆசிரியர் :**

அ) உமறுப்புலவர் ஆ) சீதக்காதி இ) கம்பர் ஈ) அம்மூவனார்.

**6. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.**

1) விரியன் - i. தண்டை
2) திருகுமுருகு - ii. காலாழி
3) நாங்கூழ்ப்புழு - iii. சிலம்பு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4) குண்டலப்பூச்சி - iv. பாடகம்.

அ) (1) - (iv), (2) - (ii), (3) - (ii), (4) - (i)

ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

இ) (1) - (iv), (2) - (i), (3) - (Iii), (4) - (ii)

ஈ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

**7. ஆஸ்கர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?**

அ) ஏ. ஆர். இரகுமான் ஆ) பாரதிராஜா இ) சித்ரா ஈ) இளையராஜா

**8. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்.**

அ) நல்லாடை ஆ) மூதூர் இ) பைந்தளிர் ஈ) வெற்றிடம்.

**9. தவறான இணையைத் தேர்வு செய்க.**

அ) தமிழ் உணர்வு - மெய் உயிர் ஆ) மொழி ஆளுமை - உயிர் உயிர்

இ) மண் வளம் - மெய் மெய் ஈ) கடல் அலை - உயிர் மெய்

**10. யானை டாக்டர் என்னும் குறும்புதினத்தின் ஆசிரியர்.**

அ) ஜெயமோகன் ஆ) ஜானகிராமன் இ) சின்னப்பா ஈ) ஜெயபாலன்.

**11. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகள் ஒன்று.**

அ) சிறுதேர் ஆ) சாழல் இ) சிறுபறை ஈ) சிற்றில்.

**12. மாநகர் என்பதன் இலக்கணக் குறிப்பு**

அ) எண்ணும்மை ஆ) முற்றும்மை இ) உரிச்சொற்றொடர்

ஈ) தொழிற்பெயர்.

**13. Book Review என்பதன் கலைச்சொல்.**

அ) புத்தக மதிப்புரை ஆ) ஏடு இ) பாடநூல் மதிப்புரை

ஈ) புத்தகம்.

**14. பேச்சு என்பது மொழியில்________**

அ) ஓடுவது ஆ) பறப்பது இ) மூழ்குவது ஈ) நீந்துவது

**பகுதி - II**

**பிரிவு - 1**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x2=6

15. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

16. "ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள" - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

17. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

18. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x2=4

19. "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு கையாளப்படுகிறது?
21. "வரை" என்னும் சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7x2=14

22. உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) செங்கயல் ஆ) இயைவதாயினும்.
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
i. தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
ii. முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
25. பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
கனை, கணை.
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. தங்கை.
27. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.
அ) Emotion ஆ) Mass Drill

செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா :
உறுப்பிலக்கணம் தருக : உண்டான்.
28. விடைக்கேற்ற வினாவை எழுதுக.
சி.சு.செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலான இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்பு செய்திருக்கிறார்.

29. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.
அ) Dt ஆ) 

30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
குமரனை பற்றித் தெரிந்துக்கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

31. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்கள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே".
32. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழிநின்று கூறுக.
33. "உயர்தமிழை உயிரென்று போற்று மின்கள்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

*35. ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?*

*36. "மலை - மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.*

*37. "நேரடி மொழி" என்பதை நும் பாட வழி நின்று விளக்குக.*

*38. திராவிடர்களின் மலைக் குடியிருப்புகள் பற்றி எழுதுக.*

**பிரிவு - 2**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x4=12

*39. உருவக அணி (அல்லது) உவமை அணியை விளக்குக.*

*40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.*

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்:
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்
- பாரதியார்.

*41. எழுத்து வடிவக் குறியீடுகளை வகைப்படுத்துக.*

Unbold, Bold, Trs., I.C., Caps

*42. புதிர்களுக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

*(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி).*

*அ) எலியும் நுழையும், எழிலரசி கையும் நுழையும்..............*

*ஆ) அடிக்கவும் செய்யலாம், கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ...............*

*இ) கண்ணிலும் எழுதலாம், வெண்தாளிலும் எழுதலாம் ..............*

*ஈ) அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவேதான்...............*

***43. தமிழாக்கம் தருக.***

1. Looking at beauty in the world is the first step of purifying the mind.
2. Winners don't do different things, they do things differently.
3. A Picture is worth a thousand words.
4. Education is the most powerfull weapon, which you can use to change the world.

***43. காது கேளாதோருக்கான மாற்று வினா***

*" தமிழ் " என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. "இனிமையும் நீர்மையும் தமிழெனல்" ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. "தமிழ்" என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர். "அதாஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் "தமிழ்" எனும் சொல் மொழி கவிதை என்பனவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ்தழீஇய சாயலவர்" என்னும் இடத்து "தமிழ்" என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன. தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் "தமிழ்" பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே", "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்பன*

எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுகளாலான திருப்பாவை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**வினாக்கள்:**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

**பகுதி - IV**

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3x6=12

44. அ) "திருமலை முருகன் பள்ளு" கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும். (அல்லது)

ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்வீர்கள் என்பதை விவரிக்கவும். (அல்லது)

ஆ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" - இக்கூற்றினை மெய்ப்பிக்கவும்.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**பகுதி - V**

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

அ) "சிற்றூரும்" எனத் தொடங்கும் - புரட்சிக்கவி பாடல்.

ஆ) "யான்" - என முடியும் குறளை எழுதுக

---

**பொதுத்தேர்வு வினாத்தாள்**

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ் ஏப்ரல் - 2023

கால அளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

1. பாயிரம் இல்லது ______________அன்றே.
அ) பாடல் ஆ) காவியம் இ) கவிதை ஈ) பனுவல்

2. "காவடிச் சிந்துக்குத் தந்தை" என்று அழைக்கப்படுபவர் ______________.
அ) முருகன் ஆ) பாரதிதாசன் இ) பாரதியார்
ஈ) அண்ணாமலை

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ______________.
அ) ஊடுபயிர் ஆ) இயற்கை உரங்கள் இ) மண்புழு
ஈ) இவை மூன்றும்.

4. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் ______________.
அ) பகுதி, சந்தி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
இ) பகுதி, விகுதி ஈ) பகுதி, இடைநிலை, சாரியை

5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______________.
அ) 27 ஆ) 9 இ) 13 ஈ) 3

6. ஆசிரியப்பாவிற்குரிய தளை ______________ ஆகும்.
அ) கலித்தளை ஆ) நிரையொன்றாசிரியத்தளை
இ) வஞ்சித்தளை ஈ) இயற்சீர் வெண்டளை

7. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று______________.
அ) சிறுதேர் ஆ) சாழல் இ) சிறுபறை ஈ) சிற்றில்

8. "அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்" - யார்? யாரிடம் கூறியது?
அ) அமைச்சர், மன்னரிடம் ஆ) அமைச்சர், கவிஞரிடம்
இ) மன்னர், அமுதவல்லியிடம் ஈ) மன்னர், அமைச்சரிடம்

9. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) உதவியாளர் ஆ) காவலாளி இ) ஆசிரியர்
ஈ) மன்னர், அமைச்சரிடம்

10. தமிழின் முதல் பாவடிவ நாடக நூல் :
அ) நூல் தொகை விளக்கம் ஆ) இரகசிய வழி
இ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு ஈ) மனோன்மணீயம்

11. விரைந்து கெடுபவன் யார்?
அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.
ஆ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.
இ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.
ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.

12. கலிங்க நாட்டார் சிங்கிக்கு அளித்த பரிசு.
அ) பாடகம் ஆ) சிலம்பு இ) மெட்டி ஈ) தண்டை

13. "பால் நிலாப் பாதை" என்ற நூலை எழுதியவர்.
அ) ஏ.ஆர். ரகுமான் ஆ) இளையராஜா இ) கங்கை அமரன்
ஈ) பாரதிராஜா

14. பொருத்தி விடை தேர்க.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

1. வெள்ளி வீதியார் - i) புறநானூறு
2. போதனார் - ii) சி.சு. செல்லப்பா
3. வாடிவாசல் - iii) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - iv) நற்றிணை

அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (iv)
ஆ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)
இ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)
ஈ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x2=6

15. இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோல் பார்வையைக் குறிப்பிடுக.
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
 கோடையில் கொட்டும் பூக்களை
 எண்ணச் சொல்கிறார்கள் -
 எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
18. செந்தூக்கு - விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2x2=4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
20. நாட்டுப்புறங்களிலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
21. இந்திய கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7x2=14**

22. உயிரீறு, மெய்யீறு பற்றி எடுத்துக்காட்டுடன் எழுதவும்.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
 (அ) அலர்ந்து (ஆ) நெருங்கின.
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
 (அ) இழுக்கின்றி (ஆ) திருப்புகழ்
25. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.
 (அ) பழம் உண்டு பால் குடித்தான் (ஆ) காகம் கத்த மயில் கூவியது.
26. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
 உலை, உளை, உழை
27. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.
 (அ) தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளி பாய்ந்தது.
 (ஆ) ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
28. கலைச் சொல்லாக்கம் - பொருள் தருக.
29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
 ஓர் பயிர் பறவை வேண்டும் அழகான தண்ணீர் மயில்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

30. சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க.
கால்நடை அல்லது பிண்ணாக்கு.

## பகுதி - III
## பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

31. சு. வில்வரத்தினம் "பாடத்தான் வேண்டும்" என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.
34. "சேர நாடு செல்வ வளம் மிக்கது" என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. "சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும்" - குறிப்பு வரைக.
37. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை?
38. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 2x4=8

39. சொல் பின்வரு நிலையணியை விளக்குக.

அல்லது

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

செந்நெல்லும் கரும்பும் விளைந்தனவே - நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழுக - தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக.
பிரிவுகள் பேசியே பூசலிட்ட - பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்.

பெ - தூரன்.

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

(அ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

அல்லது

(ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

42. "வா" என்ற வேர்ச் சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.
43. தமிழாக்கம் தருக.

1. Culture does not make people, People make culture.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. You must be the change you wish to see in the world.
3. Education is the most Powerful weapon which you can use to change the world.
4. Looking at beauty in the world is the first step of purifying the mind.

***43. செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா :***

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகே உள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெரு விருப்பம் கொண்டு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று, மக்களால் அன்புடன் "பண்டுவர்" (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதை விடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் பண்டிதர் என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று சங்கீத வித்தியா மகாஜன சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கித் தமது சொந்த செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்குச் சென்று உரையாற்றினார். அவருடைய இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் "கருணாமிர்த சாகரம்". எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்கள் :**

*(i) தமிழிசை இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?*
*(ii) பண்டிதர் விரும்பிப் பயின்ற துறைகள் யாவை?*
*(iii) ஆபிரகாம் பண்டிதர் உருவாக்கிய துறை எது?*
*(iv) பண்டிதருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் எது?*

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

*44. (அ) "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.* ***(அல்லது)***
*(ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" இக்கூற்றை முப்பால் வழிநின்று விளக்குக.*

*45. (அ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.* ***(அல்லது)***
*(ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எவ்விதம் பொருந்தும் என்பதை விளக்குக.*

*46. (அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை?* ***(அல்லது)***
*(ஆ) "பிம்பம்" கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்கவும்.*

## பகுதி - V

**குறிப்பு : அடிபிறழாமல் எழுதுக.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

47. (அ) அம்ம வாழி.... - எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.
(ஆ) செயல் - என முடியும் குறள்.

**பொதுத்தேர்வு வினாத்தாள்**

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ் ஏப்ரல் - 2023

கால அளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

1. பாயிரம் இல்லது ______________அன்றே.
அ) பாடல் ஆ) காவியம் இ) கவிதை ஈ) பனுவல்

2. "காவடிச் சிந்துக்குத் தந்தை" என்று அழைக்கப்படுபவர் ______________.
அ) முருகன் ஆ) பாரதிதாசன் இ) பாரதியார் ஈ) அண்ணாமலை

3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ______________.
அ) ஊடுபயிர் ஆ) இயற்கை உரங்கள் இ) மண்புழு
ஈ) இவை மூன்றும்.

4. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் ______________.
அ) பகுதி, சந்தி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
இ) பகுதி, விகுதி ஈ) பகுதி, இடைநிலை, சாரியை

5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______________.
அ) 27 ஆ) 9 இ) 13 ஈ) 3

6. ஆசிரியப்பாவிற்குரிய தளை ______________ ஆகும்.
அ) கலித்தளை ஆ) நிரையொன்றாசிரியத்தளை
இ) வஞ்சித்தளை ஈ) இயற்சீர் வெண்டளை

7. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று______________.
அ) சிறுதேர் ஆ) சாழல் இ) சிறுபறை ஈ) சிற்றில்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. "அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்" - யார்? யாரிடம் கூறியது?
அ) அமைச்சர், மன்னரிடம் ஆ) அமைச்சர், கவிஞரிடம்
இ) மன்னர், அமுதவல்லியிடம் ஈ) மன்னர், அமைச்சரிடம்
9. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) உதவியாளர் ஆ) காவலாளி இ) ஆசிரியர்
ஈ) மன்னர், அமைச்சரிடம்
10. தமிழின் முதல் பாவடிவ நாடக நூல் :
அ) நூல் தொகை விளக்கம் ஆ) இரகசிய வழி
இ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு ஈ) மனோன்மணீயம்
11. விரைந்து கெடுபவன் யார்?
அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.
ஆ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.
இ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.
ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.
12. கலிங்க நாட்டார் சிங்கிக்கு அளித்த பரிசு.
அ) பாடகம் ஆ) சிலம்பு இ) மெட்டி ஈ) தண்டை
13. "பால் நிலாப் பாதை" என்ற நூலை எழுதியவர்.
அ) ஏ.ஆர். ரகுமான் ஆ) இளையராஜா இ) கங்கை அமரன்
ஈ) பாரதிராஜா
14. பொருத்தி விடை தேர்க.
1. வெள்ளி வீதியார் - i) புறநானூறு
2. போதனார் - ii) சி.சு. செல்லப்பா
3. வாடிவாசல் - iii) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - iv) நற்றிணை

அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (iv)
ஆ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)
இ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)
ஈ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

## பகுதி - II
## பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x2=6

15. இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோல் பார்வையைக் குறிப்பிடுக.
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் -
எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
18. செந்தூக்கு - விளக்கம் தருக.


www.Padasalai.Net

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x2=4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
20. நாட்டுப்புறங்களிலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
21. இந்திய கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14**

22. உயிரீறு, மெய்யீறு பற்றி எடுத்துக்காட்டுடன் எழுதவும்.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    (அ) அலர்ந்து (ஆ) நெருங்கின.
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    (அ) இழுக்கின்றி (ஆ) திருப்புகழ்
25. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.
    (அ) பழம் உண்டு பால் குடித்தான் (ஆ) காகம் கத்த மயில் கூவியது.
26. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    உலை, உளை, உழை
27. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.
    (அ) தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளி பாய்ந்தது.
    (ஆ) ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
28. கலைச் சொல்லாக்கம் - பொருள் தருக.
29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
    ஓர் பயிர் பறவை வேண்டும் அழகான தண்ணீர் மயில்.
30. சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க.
    கால்நடை அல்லது பிண்ணாக்கு.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

31. சு. வில்வரத்தினம் "பாடத்தான் வேண்டும்" என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.
34. "சேர நாடு செல்வ வளம் மிக்கது" என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. "சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும்" - குறிப்பு வரைக.
37. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை?
38. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 2x4=8

39. சொல் பின்வரு நிலையணியை விளக்குக.

அல்லது

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

செந்நெல்லும் கரும்பும் விளைந்தனவே - நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழுக - தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக.
பிரிவுகள் பேசியே பூசலிட்ட - பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்.

பெ - தூரன்.

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

(அ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

அல்லது

(ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

42. "வா" என்ற வேர்ச் சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

43. தமிழாக்கம் தருக.

1. Culture does not make people, People make culture.
2. You must be the change you wish to see in the world.
3. Education is the most Powerful weapon which you can use to change the world.
4. Looking at beauty in the world is the first step of purifying the mind.

**43. செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா :**

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகே உள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெரு விருப்பம் கொண்டு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும்போதே சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று, மக்களால் அன்புடன் "பண்டுவர்" (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதை விடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார். தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் பண்டிதர் என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று சங்கீத வித்தியா மகாஜன சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கித் தமது சொந்த செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்குச் சென்று உரையாற்றினார். அவருடைய இசை மாநாடுகளுக்கும் சென்று



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் "கருணாமிர்த சாகரம்". எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்கள் :**

(i) தமிழிசை இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
(ii) பண்டிதர் விரும்பிப் பயின்ற துறைகள் யாவை?
(iii) ஆபிரகாம் பண்டிதர் உருவாக்கிய துறை எது?
(iv) பண்டிதருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் எது?

**பகுதி - IV**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

44. (அ) "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

(ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" இக்கூற்றை முப்பால் வழிநின்று விளக்குக.

45. (அ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக. **(அல்லது)**

(ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எவ்விதம் பொருந்தும் என்பதை விளக்குக.

46. (அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை? **(அல்லது)**

(ஆ) "பிம்பம்" கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்கவும்.

**பகுதி - V**

**குறிப்பு : அடிபிறழாமல் எழுதுக.**

47. (அ) அம்ம வாழி.... - எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.
(ஆ) செயல் - என முடியும் குறள்.

**பொதுத்தேர்வு வினாத்தாள்**

மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ் மார்ச் - 2024

கால அளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

1. துன்பப்படுபவர் ______________.
   அ) பொருளைக் காக்காதவர் ஆ) தீக்காயம் பட்டவர்
   **இ) நாவைக் காக்காதவர்** ஈ) தீயினால் சுட்டவர்

2. புல்லின் இதழ்கள் - நூலின் ஆசிரியர் ______________.
   அ) பாப்லோ நெரூடா ஆ) ஸ்டெ.்.பான் மல்லார்மே
   இ) ரவி வர்மா **ஈ) வால்ட் விட்மன்**

3. தவறான இணையைத் தேர்வு செய்க ______________.
   **அ) கடல் + அலை - உயிர் + மெய்** ஆ) மொழி + ஆளுமை - உயிர் + மெய்
   இ) மண் + வளம் - மெய் + மெய் ஈ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

4. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.
   (1) தஞ்சைப் பெரிய கோவில் - (i) திருச்சாழல்
   (2) சிங்கன், சிங்கி - (ii) காலத்தை வென்ற கலை
   (3) பெண்கள் விளையாட்டு - (iii) இசைத் தமிழர் இருவர்
   (4) சிம்பொனித் தமிழர் - (iv) குற்றாலக் குறவஞ்சி
   அ) (1) - (iv), (2) - (ii), (3) - (i), (4) - (iii)
   **ஆ) (1) - (ii), (2) - (iv), (3) - (iv), (4) - (iii)**
   இ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)
   ஈ (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

5. சொற்றொடர்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
   அ) இலக்கிய மேடைகளில் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
   ஆ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்
   இ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு
   **ஈ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்**

6. உலக சிட்டுக்குருவிகள் நாள்
   அ) ஆகஸ்ட் 9 ஆ) ஜனவரி 18 **இ) மார்ச் 20** ஈ) செப்டம்பர் 16

7. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு :

அ) வினையெச்சம், வினைத்தொகை **ஆ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி**
இ) பெயரெச்சம், பண்புத்தொகை ஈ) வினைத்தொகை, இடவாகுபெயர்

8. கூற்று : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்று தவறு, விளக்கம் தவறு ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு
இ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு **ஈ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.**

9. புலிபோலப் பாய்ந்தான் - எவ்வகை உவமை?
அ) மெய் **ஆ) வினை** இ) உரு ஈ) பயன்

10. ஓர் ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பற்றிப் பாடும் திணை
**அ) பாடாண் திணை** ஆ) பொதுவியல் திணை
இ) குறிஞ்சித் திணை ஈ) வெட்சித் திணை

11. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது.
அ) கனி முன் நிரை ஆ) காய் முன் நேர்
**இ) மா முன் நேர்** ஈ) காய் முன் நிரை

12. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை
**அ) சிவகாமியின் சரிதம்** ஆ) சிவகாமியின் சபதம்
இ) பாஞ்சாலி சபதம் ஈ) இரகசிய வழி

13. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை :
i) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ii) நேரடிப் பொருள்கள்
அ) இரண்டும் சரி **ஆ) (i) மட்டும் சரி** இ) இரண்டும் தவறு
ஈ) (ii) இரண்டும் தவறு

14. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் :
**அ) 22** ஆ) 48 இ) 18 ஈ) 24

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3x2=6

15. "வளரும் காவில் முகில் தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்"
- அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

16. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

17. அகநானூறு எத்தனைப் பிரிவுகளைக் கொண்டது? அவை யாவை?

18. "ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள"
- இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2x2=4**

19. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

20. தட்சிண மேரு - குறிப்பு வரைக.

21. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனார் கூற்று யாது?

### பிரிவு - 3



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14**

22. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
   (அ) ஈன்ற (ஆ) முளைத்த
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
   (அ) அரும்பொருள் (ஆ) மணிக்குலம்
25. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.
   (அ) குயில் கத்த நாய் ஊளையிட்டது (ஆ) சோறு சாப்பிட்டு, நீர் பருகினான்.
26. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
   குரை, குறை
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
   (அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
   (ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
28. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.
29. கலவைத் தொடராக மாற்றுக.
   மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.
30. சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க.
   வைகை அல்லது நஞ்சிருக்கும்

**பகுதி - III**

***பிரிவு - 1***

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது.
32. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்"
   - இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
33. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
   மேற்சென்று செய்யப் படும். - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.
34. வாய்க்கால் சிறப்புகளாக மனோன்மணீயம் குறிப்பிடுவன யாவை?

***பிரிவு - 2***

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2x4=8

35. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
36. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?
37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
38. கொற்கை, வஞ்சி, தொண்டி - வளாகம் பற்றி நீவிர் அறிவன யாவை?

***பிரிவு - 3***



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 2x4=8

39. சொல் பின்வரு நிலையணியை விளக்குக.

அல்லது

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்த்தாக்கப் பக்கு விடும்.

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

- நாமக்கல் கவிஞர்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

(அ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்

அல்லது

(ஆ) வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்

42. "தா" என்ற வேர்ச் சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

43. தமிழாக்கம் தருக.

1. All that glitters are not gold.
2. Self help is the best help.
3. Tit for Tat.
4. Prevention is better than cure.

**43. செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா :**

தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன் என்று போற்றப்படும் சி.வை. தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகைபுரிந்து, தம் இருபதாவது வயதிலேயே நீதிநெறி விளக்கம் என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தார். 1968 ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும் பின்னர் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்து புகழ் கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளை கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் உள்ளிட்ட பள்ளிப்பாட நூல்களையும் எழுதினார்.

அவருடைய தமிழ்ப்பணியைக் கண்ட பெர்சிவல் பாதிரியார், அவரைத் தாம் நடத்திய "தினவர்த்தமானி" என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அவ்வமயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார். அரசாங்கத்தினரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். பிறகு, பி.எல். தேர்விலும் தேர்ச்சி



www.Padasalai.Net

பெற்று, கும்பகோணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, 1884 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதிக் கடமையாற்றினார்.

**வினாக்கள் :**

(i) தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன் என்று போற்றப்படுபவர் யார்?
(ii) தினவர்த்தமானி என்னும் இதழை நடத்தியவர் யார்?
(iii) அறிஞர்களின் கவனத்தைக் கவர சி.வை. தாமோதரனார் ஆற்றிய பணி யாது?
(iv) சி. வை. தாமோதரனார் எந்த ஆண்டு புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்?

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

44. (அ) காலமறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
(ஆ) நடராசன் தனி மொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.

45. (அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும். **(அல்லது)**
(ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரீகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்தை நிறுவுக.

46. (அ) யானை டாக்டர் - குறும்புதினம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
(ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கார் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**குறிப்பு : அடிபிறழாமல் எழுதுக.**

47. (அ) "சிற்றூரும் வரப்பெடுத்த ...." - எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.
(ஆ) "உலகு" - என முடியும் குறள்.

## பின்னிணைப்பு

**விலங்கு வாழிடங்கள்**

| | | |
|---|---|---|
| ஆட்டுப்பட்டி | யானைக்கூடம் | குதிரைக் கொட்டில் |
| மாட்டுத் தொழுவம் | வாத்துப்பண்ணை | பாம்புப் புற்று |
| எலி வளை | | |

**தொகுப்புப்பெயர்கள்**

ஆட்டு மந்தை — பசு நிரை

**உறுப்புப் பெயர்கள்**

மா, பலா, வாழை - இலை (மாவிலை, பலா இலை, வாழையிலை)
ஈச்சம், தென்னை, பனை - ஓலை (ஈச்சவோலை, தென்னையோலை, பனையோலை)

அவரை, கத்தரி, முருங்கை, வெள்ளரி - பிஞ்சு (அவரைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வெள்ளரிப்பிஞ்சு )

தாழை மடல்

**வினைமரபுச் சொற்கள்**

| | |
|---|---|
| அம்பு எய்தார் | ஆடை நெய்தார் |
| உமி கருக்கினார் | பூ பறித்தார்/கொய்தார் |
| மரம் வெட்டினார் | மாத்திரை விழுங்கினார் |
| சோறு உண்டார் | தண்ணீர் குடித்தார் |
| பால் பருகினார் | கூடை முடைந்தார் |
| சுவர் எழுப்பினார் | முருக்கு தின்றார் |

**ஒலி மரபுச் சொற்கள் :**

| | | |
|---|---|---|
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் | எருது எக்காளமிடும் |
| காகம் கரையும் | குதிரை கனைக்கும் | கிளி பேசும்/கொஞ்சும் |
| குரங்கு அலப்பும் | குயில் கூவும் | சிங்கம் முழங்கும் |
| கூகை குழறும் | நரி ஊளையிடும் | கோழி கொக்கரிக்கும் |
| புலி உறுமும் | மயில் அகவும் | வண்டு முரலும் |
| நாய் குரைக்கும் | யானை பிளிறும் | |

**இளமைப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| அணிற் பிள்ளை | குருவிக்குஞ்சு | பசுங்கன்று |
| யானைக்கன்று | கழுதைக்குட்டி | சிங்கக்குருளை |
| எலிக்குட்டி | கோழிக்குஞ்சு | மான்கன்று |
| நாய்க்குட்டி | மான்கன்று | குதிரைக்குட்டி |
| பூனைக்குட்டி | எருமைக்கன்று | |



www.Padasalai.Net

**கலைச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| **Whatsapp** | | புலனம் |
| **Telegram** | - | தொலைவரி |
| **Wi-fi** | - | அருகலை |
| **Hotspot** | - | பகிரலை |
| **Youtube** | - | வலையொளி |
| **Instagram** | - | படவரி |
| **Wechat** | - | அளாவி |
| **Messenger** | - | பற்றியம் |
| **Twitter** | - | கீச்சகம் |
| **Skype** | - | காயலை |
| **Bluetooth** | - | ஊடலை |
| **Broadband** | - | ஆலலை |
| **Online** | - | இயங்கலை |
| **Offline** | - | முடக்கலை |
| **Thump drive** | - | விரலி |
| **Hard disk** | - | வன்தட்டு |
| **GPS** | - | தடங்காட்டி |
| **CCTV** | - | மறைகாணி |
| **OCR** | - | எழுத்துணரி |
| **3D** | - | முத்திரட்சி |
| **2D** | - | இரு திரட்சி |
| **Projector** | - | ஒளிவீச்சி |
| **Printer** | - | அச்சுப்பொறி |
| **Scanner** | - | வருடி |
| **Smartphone** | - | திறன்பேசி |
| **Sim Card** | - | செறிவட்டை |
| **Charger** | - | மின்னூக்கி |
| **LED** | - | ஒளிர்விமுனை |
| **Passport** | - | கடவுச் சீட்டு |
| **Visa** | - | நுழைவு இசைவு |






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com